23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

நதி 23 பாலம் 10 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MAY 15, 2013

# கனடாவில் வன்னி வீதி

கனடாவில் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினர் திரு. லோகன் கணபதி அவர்களின் முயற்சியால், மார்க்கம் நகரசபை மேயராலும், ஏனைய உறுப்பினர்களாலும் மே 11, 2013 சனிக்கிழமை 14th Avenue வில் Middlefield Road க்கும் Markham Road க்கும் இடையில் அமைந்துள்ள 'வன்னி வீதி' என்ற புதிய வீதி திறந்து வைக்கப்பட்டது.

இவ்வீதியானது தமிழ் மக்கள் அதிகமானோர் வாழ்ந்து வரும் மார்க்கம் மாநகராட்சியில் புதிதாக நிர்மாணிக்கப்பட இருக்கும் சனசமூக நிலையத்திற்கு செல்லும் பாதையாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. கனடாவில் தமிழ் பெயரில் திறக்கப்பட்ட முதல் வீதி இதுவாகும்.

"ஆமடேல்" சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய மார்க்கம் மேயர் திரு. பிராங்க் ஸ்காபிற்றி பின்வருமாறு கூறினார். "கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த ஏனைய நாட்டு மக்களைப் போலவே சிறீலங்காவைச் சேர்ந்த தமிழ் மக்களாகிய நீங்களும் உங்கள் நாட்டை விட்டுப் பிரிய மனமில்லாமலே கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்தீர்கள். கனடாவுக்கு வரும் மக்களை பாகுபாடு எதுவும் இன்றி வரவேற்று, மதிப்பளிப்பதில் எமது மார்க்கம் நகர சபை முன்நிற்கின்றது. உங்கள்



தாயகத்தை நினைவுறுத்தும் வகையில் 14வது அவெனியூவிலுள்ள வீதிக்கு வன்னி றோட் என்ற பெயரினைச் சூட்டுவதில் நாம் பெருமை அடைகின்றோம். நீங்கள் தினமும் 14வது அவெனியூவின் ஊடாகச் செல்லும் போது வன்னி வீதியை பார்க்க முடியும்".

வரவேற்புரை நிகழ்த்திய திரு. லோகன் கணபதி, "மார்க்கம் மாநகர் கனடாவில் மாத்திரமல்ல உலகிலேயே சிறந்த மாநகராகத் திகழ்கின்றது. இங்கு அதிகளவு தமிழ் மக்களும் தென் ஆசிய மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அதனால் வருட ஆரம்பத்தில் வரும் ஜனவரி மாதத்தினை தமிழ் மக்களின் பாரம்பரிய மாதமாக முதன் முதலில் பிரகடனப்படுத்திய பெருமை

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# நாடாளுமன்ற இடைத்தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி

கனடிய நாடாளுமன்றத்திற்கு லப்றடோர் (Labrador) இல் மே 13, 2013 இல் நடைபெற்ற இடைத்தேர்தலில் லிபரல் கட்சியை சேர்ந்த இவோன் யோன் (Yvone Jones) அத்தொகுதியின் பழமைவாத கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பீற்றர் பெனசுவே (Peter Penashve) ஐ தோற்கடித்தார்.

2011 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சட்டவிரோதமாக தேர்தல் செலவுகளுக்காக நன்கொடைகள் பெற்றார் என அப்போது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பழமைவாதக்கட்சியை சேர்ந்த அமைச்சரான பீற்றர் பெனசுவே மீது கனடிய தேர்தல் திணைக்களம் குற்றம் சாட்டியது. அதைத் தொடர்ந்து மார்ச் 2013 இல் பீற்றர் பெனசுவே தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார். அவர், தான் சட்டவிரோதமாக பெற்ற 30,000 டொலர் பணத்தை அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்திவிட்டு மீண்டும் பழமைவாத்கட்சியின் சார்பில் தேர்தலில் நின்றார்.

காலம் காலமாக லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரையே தெரிவு செய்யும் லப்றடோர் தொகுதியில் கடந்தமுறை லிபரல் கட்சியின் வாக்குகள் பிரிந்து புதிய ஜனநாயகக் கட்சிக்கு சென்றதால் பழமைவாதக்கட்சியை சேர்ந்த பீற்றர் பெனசுவே நாடாளுமன்ற உறுப்பினராக 79 அதிகப் படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு பிரதமர் ஸ்ரீபன் காப்பர் Inter Governmental Affairs அமைச்சர் பதவியை வழங்கியிருந்தார்.



2011 ஆம் ஆண்டிற்கான இவரது தேர்தல் செலவுகள் பற்றி ஆராய்ந்த CBC செய்தி நிறுவனம் பீற்றர் பெனசுவே உள்ளூர் விமான சேவை நிறுவனத்திடம் இருந்து 17,000 டொலர் பெறுமதியான விமான ரிக்கற்றுக்களை இலவசமாக தேர்தலின் போது உபயோகப்படுத்தப் பெற்றிருந்தார் என செய்தி வெளியிட்டிருந்தது. லப்றடோரின் மிகவும் பரந்த பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழும் இடங்களுக்கு செல்வதற்கு உள்ளூர் விமான சேவையையே வேட்பாளர்கள் பயன்படுத்துவார்கள். இவ்வாறு ஒரு கூட்டுத்தாபனத்திடம் (Corporate donations) இருந்து தேர்தல் செலவுகளுக்கு நன்கொடை பெறுவது கனடிய தேர்தல் விதிகளுக்கு முரணானது. இதைவிட பீற்றர் தனக்கு அனுமதிக்கிப்பட்ட தேர்தல்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# கனடாவில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

எமது மார்க்கம் நகர சபைக்கு உண்டு. அது போலவே கடந்த மூன்று தசாப்த



காலமாக தமிழ் மக்களுக்கு அபயமளித்து வந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்த வன்னி மாநகரின் பெயரினை இங்குள்ள வீதிக்கு சூட்டுவதற்கு உதவிய மார்க்கம் மேயருக்கும் ஏனைய அங்கத்தவர்களுக்கும் மற்றும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" எனக் கூறினார்.

# நாடாளுமன்ற...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செலவீனங்களை விட 21 வீதம் அதிகப்படியாகவும் 2011ஆம் நடைபெற்ற தேர்தலில் செலவழித்திருந்தார்.

லிபரல் கட்சியின் சார்பில் இம்முறை 17 வருடங்களாக மாகாண அரசில் உறுப்பினராக இருந்தவரும் முன்னாள் மாகாண லிபரல் கட்சியின் தலைவராக இருந்தவருமான இவோன் யோன் போட்டி யிட்டார். இவருக்காக லிபரல் கட்சியின் புதிய தலைவர் ஜஸ்ரின் ரூடோ தேர்தல் பிரசாரம் செய்தார்.



இவ்வாறு 2011 இல் சட்டவிரோதமாக தேர்தல் விதிகளை மீறி செய்திருந்தாலும் அவ்வாறு பெறப்பட்ட பணத்தை அரசிற்கு திருப்பி செலுத்தியிருந்ததால் அவர் மீண்டும் பழமைவாதக் கட்சியின் சார்பில் போட்டியிட அனுமதிக்கப்பட்டார். இவருக்காக பாதுகாப்பு அமைச்சர் பீற்றர் மக்கே உட்பட பல அமைச்சர்களும்



பழமைவாதக்கட்சி பிரமுகர்களும் இம்முறைதேர்தல் பிரசாரம் செய்திருந்தனர்.

புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் ஹரி போர்லாஸ் (Harry Borlase) போட்டி யிட்டார். 1892 அதிகப்படியான வாக்குகளால் பழமைவாதக்கட்சியை தோற்கடித்து லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட இவோன் யோன் தனது வெற்றியை கொண்டாடும் போது "இதுவரை காலமும் கனடாவில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் பழமைவாதக்கட்சியின் உறுப்பினரை முதலாவதாக தோற்கடித்தது தான் என்று கூறினார்." "நியூபவுண்லாந்து மற்றும் லப்றடோர்" மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பழைமை வாத உறுப்பினரான பீற்றர் பென்சுவேயும் தற்போது தோற்கடிக்கப்பட்டுள்ளதால் இம்மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்த ஒரு பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் கனடிய நாடாளுமன்றத்தில் தற்போது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவிற்கு இலங்கையின் பதில்

இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டை நடத்துவதற்கு கனடா எடுத்துள்ள எதிரான நிலைப்பாடு பற்றி இலங்கை தனது கருத்தை தெரிவித்துள்ளது. அதில் கனடாவின் இந்த "தீவிர எதிர்ப்புநிலை" இலங்கைக்கு எதிரான "தீவிரவாத சக்திகளை" தூண்டிவிட்டு இலங்கை அரசு எடுத்துவரும் நல்லிணக்க முயற்சிகளை பாதிப்படைய செய்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவிற்கான இலங்கைத் தூதுவர் சித்திராங்கனி வாகீஸ்வரா தெரிவிக்கையில் பொதுநலவாய நாடுகளின் உறுப்பு நாடுகள் எல்லாம் பொதுநலவாய நாடுகளின் நோக்கங்களை முன்னிறுத்தி மற்றைய உறுப்பு நாடுகளுக்கு சம மதிப்பு கொடுக்கும் என தனது நாடு எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் யோன் பெயாட் பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்களது செயற்குழு (CMAG) இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என இலண்டனில் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சித்திராங்கனி வாகீஸ்வரா பொதுநலவாய நாடுகளது தலைவர்களது மாநாடு நடைபெறும் இடம் தொடர்பாக எந்தவித முடிவுகளை எடுக்கும் தகுதி CMAG இற்கு இல்லை. இது பொதுநலவாய நாடுகளினது தலைவர்களது முடிவு என்றார். அதனால் பொதுநலவாய நாடுகளது தலைவர்கள் ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவான மாநாடு நடைபெறும் இடம் பற்றி எதிர்க்கருத்து தெரிவிப்பது தவிர்க்கப்பட வேண்டியதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததுமான செயல் என்றார். வெளிநாடுகளிலும் கனடாவிலும் உள்ள பிரிவினைவாதிகள் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளின் தலைவர்களுக்கு உபதேசம் செய்து வருகின்றார்கள் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை பொதுநலவாய நாடுகளிடம் இருந்து எதிர்பார்ப்பது போரிற்கு பின்னால் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை தீர்க்க உதவியும் இலங்கையில் ஒரு நிலையான அமைதி ஏற்பட ஒத்துழைப்புமே என்றார்.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: *Can Media Publishing Inc.*


*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. ,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com*
   *www.tamilvanakkam.com*




# கனடா ஒரு கண்ணோட்டம்

**கடந்த இதழ் தொடர்ச்சி**

## மேற்குக் கரையோரம்

பசிபிக் சமுத்திர மாகாணமாகிய பிரிட்டிஷ் கொலம்பியா அதன் கம்பீரமான மலைகளுக்குப் பெயர் போனது. இங்கு றொக்கி மலைத்தொடர், கொலம்பியா மலைத்அதாடர், கரையோர மலைத்தொடர் என்னும் மூன்று பெரிய மலைத்தொடர்கள் அமைந்தள்ளன.



## மக்கள்

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஐரோப்பியர் குடியேறுவதற்கு முன்னரே அங்கு முதற்குடி மக்கள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடற்கரை முதல் மலைத்தொடர் வரை காணப்படும் பல்வேறு தரையமைப்புகள் முதற்குடி மக்களுடைய பண்பாடுகளிலும் மொழி களிலும் தாக்கத்தை விளைவித்தன. மரபுச் சின்னக் கம்பங்கள் எனப்படும் ஒரு தனித்துவமான கலை வடிவத்தை அவர்கள் வகுத்துக் கொண்டார்கள். அவர்களுடைய கலை உலகப் புகழ் பெற்றது. வஞ்சிரமீன், கரடி, திமிங்கிலம், காகம், கழுகு போன்ற பிராணிகள் மரபுச் சின்னக் கம்பங்களில் இடம்பெறுகின்றன

1800 முற்கூறில் மென்மயிர்த்தோல் வியாபாரம் மேற்குக் கரைக்குப் பரவியபோது ஐரோப்பியர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் குடியேறினர். 1800 பிற்கூறில் ஆயிரக் கணக்கான சீனர்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு வந்து, கனடிய - பசிபிக் தொடருந்துப் பாதையின் இறுதிக் கட்டத்தைப் பூர்த்தி செய்வதில் உதவினர். அவர்களுடைய வழித்தோன்றல்களுள் பலர் இன்றும் இம்மாகாணத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஆசியாவிலிருந்தும் பலர் இங்கு வந்து வாழ்ந்துள்ளார்கள். இன்றும் தாழ்ந்த பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்துப் பெருநிலப்பரப்பின் மக்கள் தொகையில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் சீன இனத்தவரே. பிரிட்டிஷ் கொலம்பியாவின் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 41 இலட்சம் ஆகும்.

## பொருள்வளம்

பிரிட்டிஷ் கொலம்பியா இயற்கை வளம் மிகுந்தது. இயற்கை வளம் அதன் பொருள்வளத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. கனடாவிலேயே பெறுமதி மிகுந்த காட்டுத் துறை இங்கே அமைந்துள்ளது. பிரிட்டிஷ் கொலம்பியாவில் உற்பத்திசெய்யப்படும் பொருட்களுள் ஏறத்தாழ அரைவாசி வெட்டுமரம், அச்சுத்தாள், கடதாசி, கடதாசிக் கூழ், உட்பட்ட காட்டுத்துறைப் பொருட்கள் ஆகும். சுரங்கம் அகழும் தொழிலும் இங்கு ஒரு முக்கிய தொழில்துறையாகும்.

செறிப்பழம், ஒகனாகன் பள்ளத்தாக்கு, பிரிட்டிஷ் கொலம்பியா

பிரிட்டிஷ் கொலம்பியாவில் இரண்டாவது பெரிய தொழில்துறை சுற்றுலாத்துறை ஆகும். மேற்குக் கரையோரம், றொக்கி மலைத்தொடர் இரண்டினதும் இயற்கை அழகு இம்மாகாணத்தை நோக்கி ஆயிரக் கணக்கான சுற்றுலாவாணர் களை ஈர்க்கிறது. அவர்கள் இங்கு முகாமிட்டு, மீன்பிடித்து, ஊடுருவி ஓடி, பனிமலைகளில் சறுக்கி விளையாடி வருகிறார்கள்.

இம்மகாணத்தில் இடம்பெறும் தொடர்ச்சியான மழைவீழ்சியும், இங்கு காணப்படும் குத்துமலைச்சாரலும் மின்சக்தி உற்பத்திக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. கனடாவிலேயே நீர்மின்சக்தி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருப்பது பிரிட்டிஷ் கொலம்பியாவே.

மேற்குக் கரையோரத்தில் மீன்பிடி தொழிலும் ஒரு பெறுமதி வாய்ந்த தொழில்துறை ஆகும். தற்பொழுது பிடிக்கப்படும் வஞ்சிரமீன் குறைந்து வருவதால் மீன்பிடிதுறை பெரிதும் மாறிவருகிறது. இம்மாகாணத்தின் நடுப்பகுதியில் மலைத்தொடர்களுக்கு இடையே அமைந்துள்ள ஒகனாகன் பள்ளத்தாக்கு பழத்தோட்டங்களுக்கும் திராட்சைமது உற்பத்திக்கும் பெயர் போனது.



## மக்கள்தொகை

பிரிட்டிஷ் கொலம்பயா - ஏறத்தாழ 41 இலட்சம்

கனடாவில் மூன்றாவது பெரிய நகரம் வான்கூவர் ஆகும். வட அமெரிக்காவில் சீன இனத்தவர் மிகுந்து வாழும் இரண்டாவது பெரிய நகரமும் அதுவே. பசிபிக் சமுத்திரத்தைக் கடந்து சீனா, யப்பான் போன்ற பிற நாடுகளுக்கும் கனடாவுக்கும் இடையே முக்கிய கடல், வான் போக்குவரத்து இணைப்பு மையமாகவும் இது விளங்குகிறது.

தொடரும்... *- மணி வேலுப்பிள்ளை*



# "யூஸ் & த்ரோ" கலாச்சாரம்...?

டம்ளர், தட்டு, தண்ணீர் பாட்டில், பாலித்தீன் பை... இன்னும் சொல்வதென்றால் அணியும் ஆடைகள் முதற்கொண்டு 'யூஸ் & த்ரோ' என்ற பெயரில் கிடைக்கிறது. அவற்றைப் பயன்படுத்திவிட்டுக் குப்பையில் எறிந்து விடலாம். ஆனால், இயற்கை 'யூஸ் & த்ரோ' செய்கிறதா?! இங்கே 'யூஸ் & த்ரோ' கலாச்சாரம் பற்றி சத்குரு பேசுகிறார்.

சத்குரு:

இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் ஒரு குறிப்பிட்ட வகையில் இயங்குகிறது. அதேநேரத்தில் ஒரு புதிய சக்தியின் ஆதிக்கம் அதன் மீது செலுத்தப்பட்டால், உடனடியாக அது தன் பழைய முறைகளை விட்டுவிட்டு, எந்தவித தயக்கமும் இன்றி புதிய முறைகளுக்கு மாறி விடுகிறது. இதுதான் படைப்பின் ஆதாரம்.

இது தத்துவம் அல்ல, இயற்பியல் உண்மை.!

மேம்போக்காய் உள்ளவர்களுக்கு பிரபஞ்ச ரகசியங்கள் புலப்படுவதில்லை. அதற்கு ஒரு காதலனிடம் இருக்கும் அளவு கவனம் தேவை. இயற்பியலை சரியான விதத்தில் எடுத்துரைத்தால், அதுவே மனிதர்களுக்கு நல்லதொரு ஆன்மீக செயல்பாடாக இருக்கும். இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் ஒவ்வொரு துகளும், எப்படிச் செயல்படுகின்றது என்று புரிந்து கொண்டு, அவற்றின் வழியில் நடந்தால், நீங்களும் ஆன்மீகத் தன்மையில் தான் இருப்பீர்கள். நுட்பமாக கவனித்தால், ஒவ்வொரு அணுவும் ஆன்மீகப்பாதைக்கான வாயிற்கதவு தான். ஆனால் அதைத் திறப்பதற்கு மனிதர்களுக்கு அதிக கவனம் தேவைப்படுகிறது. மேம்போக்காய் உள்ளவர்களுக்கு பிரபஞ்ச ரகசியங்கள் புலப்படுவதில்லை. அதற்கு ஒரு காதலனிடம் இருக்கும் அளவு கவனம் தேவை. அப்படியில்லையென்றால் பிரபஞ்சம் உங்களுக்கு திறக்காது. தன் மனதை அங்கும் இங்கும் அலைபாய விட்டுக்கொண்டு இருப்பவருக்கு எதுவுமே கிடைக்காது.

அவரிடம் வெறும் நினைவுகள் மட்டும்தான் மிஞ்சியிருக்கும். அது வெறும் ஒரு நூலகத்தைப் போல, தகவல்களை சேகரித்து வைப்பதற்குத்தான் பயன்படும். முதலில் இத்தகைய மனதை, சேகரிக்கும் தன்மையிலிருந்து பெற்றுக்கொள்ளும் தன்மைக்கு மாற்றவேண்டும்.

அப்படியானால் அதை மேம்போக்கானத் தனத்திலிருந்து, கவனமும் அர்ப்பணிப்பும் கொண்டதாக மாற்ற வேண்டும். அதனால்தான் காலம்காலமாக பக்தியின் முக்கியத்துவம் பற்றி அதிகமாக சொல்லி வந்திருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு நேர்மாறாக, இன்றைய சமுதாயத்தில் ஒன்றைப் பயன்படுத்திவிட்டு தூக்கி எறிந்துவிடும் கலாச்சாரம் அதிகமாக காணப்படுகிறது. எதையும் மீண்டும், மீண்டும் பயன்படுத்த வேண்டுமே தவிர, பயன்படுத்தி விட்டு தூக்கி எறியக் கூடாது. பயன்படுத்தி விட்டு, தூக்கி எறிவது மிகச் சுலபம். ஆனால் தூக்கி எறியும் இந்த மனோநிலை கண்டிப்பாக ஆன்மீக செயல்பாட்டை அழித்துவிடும்.


நான் சொல்வது உங்களுக்கு வேடிக்கையா-கத் தோன்றலாம். நாங்கள் குழந்தைகளாக இருந்தபோது, பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் பொருட்கள் (USE AND THROW) அதிகம் கிடையாது. மளிகைப் பொருட்களை ஒரு காகிதப் பையில் போட்டு, அதை ஒரு சணல்கயிற்றால் கட்டித் தருவார்கள்.

நாங்கள் ஓரளவு வசதியான குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும், ஒவ்வொரு சணல் கயிற்றையும் என் அம்மா எடுத்து, அதை நன்றாகச் சுற்றி, ஓரிடத்தில் பத்திரமாக வைப்பார். அந்த காகிதப் பைகளும் துடைக்கப்பட்டு, கச்சிதமாக மடிக்கப்பட்டு, இன்னோரிடத்தில் பத்திரமாக வைக்கப்படும். அவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவோம்.

இந்த பூமி இறந்தவர்களை ஆகாய வெளியில் எறிவதில்லை. அனைத்தையுமே அது மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறது. நாங்கள் சணல்கயிற்றை விலைக்கு வாங்கியதே இல்லை. வீட்டில் இருக்கும் பழைய கயிற்றையே பயன்படுத்திக் கொள்வோம். இது கயிறை மிச்சப்படுத்துவது பற்றியல்ல. பணத்தை மிச்சப்படுத்துவதற்காகவும் அல்ல. உங்களைச் சுற்றியிருக்கும் அனைத்திற்கும் மதிப்பு கொடுத்து வாழ்வது. இதுதான் இயற்கையின் வழியும் கூட.

நம் பூமித்தாய் எதையுமே தூக்கி எறிவதில்லை. அனைத்தையும் அவள் உள்ளிழுத்துக் கொள்கிறாள். இந்த பூமி இறந்தவர்களை ஆகாய வெளியில் எறிவதில்லை. அனைத்தையுமே அது மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறது. பிரபஞ்சம் எந்த முறையில் செயல்படுகிறதோ, அந்த முறையில்தான் நம் கைகளும், மனமும், உணர்ச்சிகளும், உடலும் செயல்படுகின்றன.

மனித மனம் உடைந்து பைத்தியக்காரத் தனமான நிலைக்குப் போனதற்குக் காரணம், நாம் இயற்கையின் செயல்பாட்டிலிருந்து விலகிப் போனதுதான். இங்கு இயற்கை என்று நான் சொல்வது சுற்றுச்சூழல் குறித்து அல்ல. இதை ஒரு ஆன்மீக செயல்பாடாகச் சொல்கிறேன். நீங்கள் தியானத்தன்மையில் இருக்கும்போது, இயல்பாகவே இயற்கையின் செயல்முறைகளோடு இயைந்து இருப்பீர்கள். ஆனால் இப்போது இதை நாம் விழிப்புணர்வோடும் செய்ய முடியும்.



**சத்குரு வாசுதேவ்**

இந்த பூமியில் நீங்கள் மிகவும் குறுகிய காலம் மட்டுமே தங்கியிருக்கிறீர்கள். நாம் நூறு வருடங்கள் இருந்தாலும், பிரபஞ்சத்தின் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இது குறுகிய காலம்தான். பிரபஞ்சத்தின் காலஅளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், உங்கள் வாழ்நாள் ஒரு கணம்தான்.

எனவே நீங்கள் என்ன வேலை செய்தாலும் சரி, அங்கு எவையெல்லாம் பயன்படுத்தப் பட்டு, தூக்கி எறியப்படுகின்றதோ, அதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வாருங்கள். பயன்படுத்திவிட்டு தூக்கி எறிவது கலாச்சாரமாகிவிட்டால், அது காகிதத்தில் ஆரம்பித்து, பிறகு பேனா, பிறகு சில பொருட்கள் என்று கடைசியில் மனிதர்கள் என்று முடியும். இது ஏற்கெனவே உலகில் சில இடங்களில் நடக்கிறது. இல்லையா? மனிதர்களையும் பயன்படுத்திவிட்டு, தூக்கி விட்டெறிந்து விடுகிறார்கள், இல்லையா? இதனால் மனிதர்களின் பாதுகாப்புணர்வு பெரிதும் அச்சுறுத்தப்படுகிறது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:**
www.innerengineering.org

இது போன்ற சிறிய விடயங்களை நாம் கவனித்துச் செய்யாவிட்டால் பின் வளர்ச்சி என்பது நிகழாது. நம் கைகளும், மனங்களும் படைத்தவனின் கைகள் போல், படைத்தவனின் மனம் போல் வேலை செய்ய வேண்டும். இது குறித்து எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்போம், விழிப்புடன் செயல்படுவோம்!

# ரொறொன்ரோவில் சற்குரு

**கனடாவில் மே மாதம் 10, 2013 அன்று சத்குரு ஜக்கி வாசுதேவ் தனது ஆன்மீக சொற்பொழிவை தமிழில் நடத்தினார். ஏறக்குறைய மூன்று மணிநேரமாக ஈஷா யோகாவின் நிகழ்வு நடைபெற்றது. பார்வையாளர்களின் கேள்விகளிற்கும் சத்குரு பதிலளித்தார்.**

**எதிர்காலத்தில் ரொறொன்ரோ பெரும்பகுதியில ஆதியோகியின் ஆலையம் அமைப்பது தனது நோக்கமாக உள்ளதாகவும் கூறினார்.**





# மோட்கேஜ் கிளினிக்

எனக்கு அவசரமாக $ 5,000 இலிருந்து $ 10,000 வரை கடன் தேவைப்படுகின்றதே !
எனது கிறடிட்டும் **Bad** ஆகிவிட்டதே !
ஏற்கனவே உள்ள எனது மோட்கேச்சினை பிரேக் பண்ணாது அவசரமாக தேவைப்படும் பணத்தினை கடனாக பெறுவது எப்படி ?

நீங்கள் சுயதொழில் புரிபவராக இருந்தாலென்ன !
கைக்காசுக்கு உழைப்பவராக இருந்தாலென்ன !
வருமான முறைக்கேற்ப மோட்கேச் ஒழுங்கு செய்து தரப்படும் !!!

வீட்டை மீள் அடைமானம் செய்தோ ! அல்லது பெயர் மாற்றம் செய்தோ !
மாதாந்தம் அதிகளவு செலுத்தும் தவணைப்பணத்தினை !!
ஒன்றை மாத வருமானத்துக்குள் உள்ளடக்குவது ?

கொமிஷன் இல்லாது உங்கள் வீட்டினை விற்பனை செய்ய விருப்பமா ?
நீங்களே, உங்கள் வீடு விற்க்கும் விலையை தீர்மானிக்கலாம் !
நீங்களே, உங்கள் வீடு விற்க்கும் கொமிஷனை தீர்மானிக்கலாம் !



நடா (PK) கந்தையா BAS,AER,AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001083
**Cell : 416-716-8707**



ஜெ இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 08001408
**Cell : 416-624-4843**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



Shawn Y. Sarvaa, CGA
Mortgage Agent
FSCO Lic # M 11002557
**Cell : 647-219-3110**



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001630
**Cell : 647-385-2710**



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00


CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# UNITED TAMIL SPORTS CLUB

## கடந்த மூன்று ஆண்டுகளாகத் தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் தமிழ் வீர, வீராங்கனைகள்




கடந்த ஏப்பிரல் மாதம் 6 ஆம் திகதி York University Indoor மைதானத்தில் இடம்பெற்ற ஒன்ராரியோ மாகாண விளையாட்டுக் கழகங்கள் இடையே நடத்தப்பட்ட Ontario Minor Track & Field Championship போட்டியில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக யுனைற்றட் (United) விளையாட்டுக் கழகம் சாம்பியன் பட்டத்தையும் அதற்கான வெற்றிக் கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டது. இம்மாபெரும் வெற்றி எமது கடின உழைப்பினால் கிடைக்கப்பெற்றதாகும் என்பதை மிகப் பெருமையுடன் அறியத்தருகிறோம்.

கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் மழை, வெய்யில், பனிப்புயல் என்று பாராமல் York University உள்ளரங்கில் நடைபெற்ற வாரத்தில் மூன்று நாட்கள் பயிற்சியிலும் ஸ்காபரோவில் இடம்பெற்ற வாரத்தில் ஓர் நாள் பயிற்சியிலும் கலந்து கொண்டதுடன் விடாமுயற்சி யுடன் பயிற்சிகளைச் செய்ததன் மூலமே இதைச் சாதிக்க முடிந்தது. இக்கடின பயிற்சியின் விளைவாகவே எமது United கழகத்தின் வீர, வீராங்கனைகள் இருவர் ஒன்ராரியோ (Ontario) மாகாண Team இல் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்தத் தொடர்ச்சியான வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அத்தனை பெற்றோருக்கும் அயராது உழைத்த வீர, வீராங்கனைகளுக்கும் பயிற்சியாளர்க்கும் United Tamil Sports Club சிரம் தாழ்த்தி நன்றி கூறுவதுடன் தொடர்ந்து ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றது.

இப்போட்டியில் Ontario வின் பல பகுதிகளைச் சேர்ந்த 39 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இதில் யுனைற்றட் (United) 275 புள்ளிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தைப் பெற தலா 145, 142, 120 புள்ளிகளைப் பெற்ற Mississauga Olympian, Flying Angels, Niagara Region என்பன 2ஆம், 3ஆம் 4ஆம் இடங்களைப் பெற்றன.

2006 ஆம் ஆண்டு 25 மாணவர்களுடன் ஆரம்பித்து இன்று 300 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்துள்ளமை மட்டுமல்லாமல் 4 மாணவர்களை National Level க்கு கொண்டு சென்றுள்ளது. இக்கழகத்தின் பல மாணவர்கள் Ontario Top 10 ரீதியிலும் அங்கம் வகிக்கிறார்கள். இத்துடன் நின்றுவிடாது பல சாதனை களை எமது மாணவர்களை செய்ய வேண்டி கடின பயிற்சி நடைபெற்று வருகிறது. உங்களது பிள்ளைகளின் திறமைகளை வெளிப்படுத்த இக்கழகம் உறுதுணையாக உழைத்து வருகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதைப் பெருமையுடன் தெரியத்தருகிறோம்.

# வீட்டின் விலையில் மாற்றம் ஏற்படுகிறது!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

### தொடர் - 390

உலகில் 90% இற்கு மேற்பட்ட மக்கள் ஒரே மாதிரியாகவும் மிகுதியினர் வித்தியாசமாகவும் சிந்திப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. அதாவது மிகுதியாக உள்ள சிறிய பகுதியினர் உலகில் பல சாதனைகளையும் சாகசங்களையும் செய்துள்ளார்கள்.

இந்த நிலைமை ஆதன விற்பனைக்கும், பங்கு சந்தைக்கும் ஏனைய வியாபாரங்களிற்கும் நன்றாகவே பொருந்தும். கடந்த சிலவாரங்களாக பங்குச்சந்தையில், தங்கத்தின் விலை (Gold) இறங்கிக் கொண்டு வந்தது. அனேகமானோர் விற்றார்கள். அனுபவமிக்கவர்கள், வாங்கும் தகைமையுள்ளவர்கள் அந்த சந்தர்ப்பத்தை பாவித்து மலிவான விலையில் மேலதிக தங்கத்தை வாங்கி சேமித்தார்கள். இப்பொழுது அதன் விலை அதிகரிக்க தொடங்க அதன் பலனை அனுபவிக்கிறார்கள். இங்கே வித்தியாசமான சிந்தனை தென்படுகின்றது. இது சாதாரண சிந்தனையை விட வித்தியாசமானதாகும். இவ்வாறே ஆதன வியாபாரமும். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து வீட்டு சந்தை நிலைமை மந்தமாக இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. முக்கியமாகவும் குறிப்பாகவும் அடுக்கு மாடி மனைகளின் வியாபாரம் குறிப்பிடத்தக்களவு மந்த நிலையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் ஆதன வியாபாரத்தை ஊக்கிவிப்பதற்காக வீடுகள் / மனைகள் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் பலவித ஊக்குவிப்புக்களை வழங்குகின்றன.

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து சில ஆதன வியாபார புள்ளிவிபரங்கள் பார்ப்போம்.

1. கனடா ரீதியில் முந்திய ஆண்டுகளில் சராசரியாக புதிதாக நிர்மாணம் செய்யப்படும் வீடுகள் 215,000.
2. இந்த வருடம் (2013) இல் எதிர்பார்க்கப்படுவது 175,000 மனைகள் / வீடுகள்.

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் விற்கப்பட்ட அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 2,728. இந்த எண்ணிக்கை 2012 இன் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடும் போது 55% குறைவாக உள்ளது. (இப்பொழுது விற்பனைக்கு உள்ள அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 18,845). இதிலிருந்து ஒரு விடயத்தை அறியக்கூடியதாக உள்ளது. விற்பனைக்காக பல புதிய மனைகள் சந்தையில் உள்ளன. எனினும், ரொறொன்ரோ பெரும்பாகத்தின் சில பகுதிகளில் வீடு/மனை வாங்க போட்டா போட்டியும் (multiple offer) நடைபெறுவதனை காணலாம்.



இவ்வாறான நிலைமையில், ரொறொன்ரோவில் குறிப்பாக GTA பகுதியில் நீண்டகால ஆதன நிலைமை பிரகாசமாக இருப்பதாக Barrick Gold Corporation இன் தலைவர் Peter munk தெரிவித்துள்ளார். அத்துடன் GTA பகுதியில் இருக்கும் ஆதனங்களில் தான் மேலும் முதலிட இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ரொறொன்ரோ பகுதியில் ஏறக்குறைய 60,000 மனைகள் கட்டப்பட்டு வருகின்றது. வட அமெரிக்காவிலேயே ரொறொன்ரோப் பகுதியிலேயே அதிகூடிய மனைகள் கட்டப்படுகின்றது. வருடாவருடம் ஏறக்குறைய 30,000 புதிய குடும்பங்கள் GTA பகுதியில் உருவாகின்றன. 60,000 மனைகள் கட்டப்படுகின்றபோதிலும் வாங்கியவர்களின் கையில் வந்தடைய குறைந்தது நான்கு வருடங்கள் எடுக்கலாம். எனவே எதிர்காலத்தில் வீடுகள் பற்றாக்குறை ஏற்படலாம்.

உடனடியாக விலையில் அதிகரிப்பு ஏற்படாமல் இருக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது. ஆயினும் ஆதன முதலீடு, குறுகிய கால முதலீடு அல்ல என்பது சகலரும் அறியவேண்டியது. எனவே நீண்ட காலத்தை சிந்தித்து, சரியான சந்தர்ப்பத்தை பார்த்து, கிடைக்கக்கூடிய அதிகூடிய ஊக்குவிப்புகளை பெற்று தரமான கட்டிட நிறுவனங்களின் ஆதனங்களை வாங்குவதால் நீண்ட காலத்தில் அதிகபலன்களைப் பெறலாம்.


HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

Raja Mahendran, P.Eng.
Broker / Owner



5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

HOUSE FOR SALE

NEILSON & MCLEVIN



4 Bedrooms Detached house for sale. Sep. entrance to finished bsmt. Recently Renovated. Single garage.

101 ERSKINE IN UPTOWN T0RONTO



Another Tridel Project. price starting from $259,900. Summer 2015.

CONDO FOR SALE

POWER OF SALE

KIPLING & STEELES

2 Bedroom condo. for sale. Asking price $49,000

CONVENIENCE STORE FOR SALE

Over 10 years establish convenience / Grocery / Audio / video. Space for expansion.

Asking only $99,900

CONDO FOR SALE

HWY 401 & KENNEDY

1 Bedroom + den. Indoor swimming pool. Recreation facilities. Asking price $259,900.

# வாழ்வில் உதைக்கும் தங்கள் கிரிமினல் குற்றப்பதிவுகளை அழிப்பது எப்படி?

என்றோ ஒரு நாள் தெரிந்தோ? தெரியாமலோ கனடா வாழ்வில் பொலீஸ் விசாரணையில் சிக்கியிருந்த துர்அதிர்ஷ்டம் பலருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அங்கு!

- தங்கள் கைவிரல் அடையாளங்கள் (Fingerprints) எடுக்கப்பட்டிருக்கும்.
- அத்துடன் சேர்த்து கிரிமினல் சட்டம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டவராக படங்களும் எடுக்கப்பட்டிருக்கும்.
- இவை யாவற்றுடனும் சேர்ந்து தங்கள் பெயர், விபரங்கள் யாவும் குற்றம் சாட்டப்பட்டவராக பொலீசாரின் மின்கணினி தகவல் மையத்தின் பதிவுகளில் இருக்கும்.

இது என்றோ ஒரு நாள் தங்களின் கனடா வாழ்வில் நடந்த ஒரு மறக்கப்பட்ட துர்அதிர்ஷ்டமான சம்பவமாகவும் தற்போது இருக்கலாம். நீதிமன்றத்தின் விசாரணையில் குற்றசாட்டிலிருந்து சில நேரம் தப்பியும் இருக்கலாம். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவ ராக பொலீஸ் நிலைய பதிவுகளில் உள்ள 'கைவிரல் அடையாளங்கள்', 'குற்றம் சாட்டப்பட்ட நிலையில் தங்கள் திருமுகங்கள்', 'பெயர் விபரங்கள்' அகற்றப்படாது பொலிஸ் பதிவுகளில் தொடர்ந்திருக்கும். அந்த பதிவுகள் அகற்றப்படாதிருப்பது ஒரு பிரச்சினை யில்லாத மாதிரியே தங்களுக்கு தென்படும். சில நேரங்களில் தொடர்ந்து அமைதியாக வாழும் ஒரு மனிதனின் வாழ்வில் பல இடங்களில் வந்து வந்து அந்த பதிவுகள் யாவும் நின்று நின்று உதைக்கும் போது இதற்கு ஒரு தீர்வு இல்லையா என ஏங்கப்பண்ணும்! ஆனால் அதற்கும் ஒரு தீர்வு உண்டு. அது தெரியுமா?

தொடர்ந்து பிரச்சினையேதுமில்லாது சமூகத்தில் அமைதியாக வாழ்கின்றவர்கள், மற்றும் வாழவிரும்புபவர்கள் தங்களுக்கு மனுச்செய்து இங்குகுற்றப்பதிவுகளை அழித்து விடுங்கள் என கனடாவின் பொலிஸ் பிரிவினர் அழைக்கின்றனர் என்பதனை அறிந்து கொண்டீர்களா? அந்த சந்தர்ப்பத்தினை தங்களுக்கு வழங்கி சமூகத்தில் தங்களை ஒரு பிரச்சினையில்லாத பிரஜையாக வாழ வைக்க அவர்களும் விரும்புகின்றனர் என்பதனை தெரிந்து கொண்டீர்களா? இதனை ஆங்கிலத்தில். "Request for destruction of adult fingerprints, photograph and records of disposition' என குறிப்பிடப்படுவதுண்டு.

ரொறொன்ரோ நகர பொலீஸ் பிரிவுகளில் பதியப்பட்டிருக்கும் பதிவுகளை அகற்றும் இந்த கோரிக்கைக்கு எதுவிதமான பண செலவுமில்லை, வக்கீலும் தேவையில்லை எல்லாம் இலவசம் தான்! தாங்களாகவே முன் எடுக்கலாம் வழிமுறை இதுவேயாகும். **பொலீஸ் நிலைய குற்றப்பதிவுகளை அழிக்க கோரும் விண்ணப்ப பத்திரத்தினை எப்படி பெறுவது? அதனை எங்கே அனுப்புதல் வேண்டும்?**

பின்வரும் இணையத்தளத்தினுள் சென்று தகவல்களை அறியலாம். விண்ணப்பத்திரத்தினையும் பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
www.torontopolice.on.ca/publications/files/forms/fingerprint_destruction.pdf

விண்ணப்பபடிவத்தில் பின்வரும் விடயங்களுக்கு பதில் வழங்குதல் வேண்டும்.

- பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் கைது செய்யப்பட்ட போது வேறு பெயரில் வசித்திருந்தால் அந்த விபரங்கள்.
- பிறந்த திகதி, மாதம், ஆண்டு.
- வக்கீல் அல்லது முகவர் நியமித்தால் அது பற்றிய விபரங்கள்.
- குற்றசாட்டு தொடர்பான விபரங்கள். (அதாவது இறுதியாக நீதிமன்றத்திற்கு சமூகமளித்த திகதி, நீதிமன்ற இடம், குற்றசாட்டு, தீர்ப்பு போன்றவை) விண்ணபத்தில் கைச்சாத்திட்டபின்பு பின்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

## கனடிய தகவல் தொடர் 195

Toronto Police Service
40, College Street
Toronto, ON M5G 2J3



தொலைநகல் மூலம் அனுப்ப வேண்டுமானால் Attention: 'Criminal Records' எனக் குறிப்பிட்டு 416.808.8202 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கிடைத்ததும் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சிக் கடிதம் அனுப்பி வைப்பார்கள். சில மாதங்களின் பின்பு கீழேகுறிப்பிட்ட நிபந்தனையின் அடிப்படையில் தொடர்ந்தும் நல்ல பிரஜையாக வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையில் கோரிக்கை நியாயமாக இருந்தால் பதிவுகள் யாவற்றினையும் பூரணமாக அழித்துவிட்டு, அதனை தபாலில் அறிவிப்பார்கள். ரொறொன்ரோ பொலீஸ் பிரிவுகளில் ஏற்கெனவே பதிவாகியுள்ள தங்களின்

- கைவிரல் அடையாளங்கள் (Fingerprints)
- ஆள் அடையாள படங்கள் (Photographs)
- பெயர் பதிவுகள் (Records of disposition)

ஆகிய மூன்று அம்சங்களையும் முற்றாக அழித்து விடுமாறு கோரும்போது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

1. குற்றம் சாட்டப்பட்டவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. இறுதியாக நீதிமன்றத்திற்கு சமூகம் அளித்து குறைந்தது ஐந்து மாதங்கள் கடந்திருத்தல் வேண்டும்.

3. வேறு எந்த கிரிமினல் குற்றங்களும் இருத்தல் கூடாது.

4. நீதிமன்றத்தில் எதுவிதமான வழக்குகளும் நிலுவையில் இருத்தல் கூடாது. (No Outstanding Charges Before the Court)

5. குற்றம் சாட்டப்பட்டவரின் தீர்ப்பு என்பது நீதிமன்றத்தினால் பின்வருமாறு வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

அ. ஒழுங்காக, நன்னடத்தையுடன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழ்வேன் என நீதிமன்றத்தில் கைச்சாத்திடும் உடன்படிக்கை. (Peace Bond)
ஆனால் இந்த நிலையில் தீர்ப்பு வழங்கப்பட்டவர்களுக்கு ஒரு நிபந்தனை. அதாவது குறிப்பிடப்பட்ட காலம் என்பது முடிவடைந்திருக்க வேண்டும்.

ஆ. குறிப்பிட்ட குற்றசாட்டில் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற காரணத்தினால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்க்கபபடாதவர். (Acquitted Sentence)

இ. உறுதியான குற்றச்சாட்டாகவில்லையானால் வழக்கு தள்ளுபடி செய்த நிலையினை எதிர்கொண்டவர் தள்ளுபடி செய்தல். (Quashed)


ஈ. எச்சரிக்கையுடன் மேல்முறையீட்டுக்கு குற்றத்தினை நிராகரித்தல் இதிலும் 'பூரணமாக நிராகரித்தல்', 'நிபந்தனையுடன் நிராகரித்தல்' என இருவகை உண்டு. (Absolute Discharge or Conditional Discharge)

சில நேரங்களில் தங்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என ஒரு பதிலும் கடிதத்தில் வந்து சேரலாம். அப்படி வந்திருந்தால் அது கிடைத்து அறுபது நாட்களுக்கிடையில் விரும்பினால் இதே பொலீஸ் பிரிவின் மேலிடத்திற்கு எழுத்தில் மேல்முறையீடு செய்யலாம். குற்றம் நிராகரிக்கப்பட்டது என்ற தீர்ப்பினை எதிர்கொண்டவர் மனு அனுப்பவேண்டிய முகவரி பின்வருமாறு.

THE MANAGER
RECORDS MANAGEMENT SERVICES
40, COLLEGE ST.
TORONTO, ON M5G 2J3

உதாரணத்திற்காக ரொறொன்ரோ நகர பொலீஸ் பிரிவு குற்றப்பதிவுகளை இங்கு குறிப்பிட்டிருந்தேன். இதேபோல ஏனைய நகர பொலீஸ் பிரிவினர் இதே ஒழுங்கு விதிகளுடன் சில இடங்களில் சற்று மாறுதலான சட்டங்களுடன் இந்த கோரிக்கையினை நிறைவேற்றி வைப்பார்கள்.

உதாரணமாக 'அஜெக்ஸ் (Ajex)' பிக்கரிங் (Puckering)', விற்பி (Whitby) போன்ற நகர பொலீஸ் பிரிவுகளில் (Durham Regional



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➤ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➤ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➤ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974

# குவை ஆதீனமும் இறைவன் ஆலயமும்

## ஹவாய் தீவுகள் - 5 சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்

குவை தீவில் இவை அமைவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் குருதேவர் என அழைக்கப்படும் சிறீசிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். இவருக்கு இத்தீவைப் பற்றிப் பல தடவை சிவபெருமான் கனவில் தோன்றிக் காட்சி கொடுத்துள்ளார். உண்மையிலேயே சுப்பிரமுனியர் என எமது ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகளால் நாமஞ் சூட்டப்பட்ட அமெரிக்கர் சைவத்துக்காக அந்நாட்களில் எமது நாயன்மார்கள் செய்த அரும்பெரும் சேவைகளைப் போன்று இக்கால உலகுக்குச் சைவத்தின் மேன்மையைக் குறிப்பாக மேலைத் தேயத்துக்கு இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டார் எனக் கூறின் மிகையாகாது. அனுப்பிய தோடு மட்டுமல்லாமல் காலத்துக்குகாலம் கனவில் தோன்றி வழிகாட்டியும் வந்துள்ளார். இவற்றை யாரும் புழுகுக்

### - துறையூரான் -

கதைகளெனக் கூறி நகைக்கை முடியாது என்பது நாமெல்லோரும் அறிந்த உண்மை.

இவ்வாறான எமது சுப்பிரமுனிய சுவாமிகள் ஆரம்பித்து வைத்த அரும்பெரும் பொக்கிஷமாக இன்னும் பல்லாயிரம் வருடங்களுக்கு விளங்கப் போகும் இறைவன் கோவில் பற்றிப் பார்ப்போம். வைலுவா ஆற்றுப் பள்ளத்தாக்குக்கு குறுக்கே, வையாலியாலே மலையைப் பின்னணியாகக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கும் கோவில் கோபுரங்களில் தங்கமுலாம் பூசப்பட்ட உச்சியிலிருந்து வீசும் சூரியவொளி எம் கண்களைக் கவர்ந்திழுத்தது. யாவரும் அக்கோவிலை நோக்கிச் சென்றோம். இக்கோவில் முழுவதும் வெண்கற்களால் கட்டப் பட்டுள்ளது. இக்கற்கள் பங்களூரில் பல ஆசாரிகளின் கைவண்ணத்தில் செதுக்கப்பட்டு விமானமூலம் இத்தீவுக்கு கொண்டுவரப்பட்டு அவர்களால் கட்டப்பட்டு வருகின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்திருக்கும் வண்ணம் ஆகமகங்களில் கூறப்பட்டுள்ள விதிகளுக் கமைய இக்கோவில் கட்டப்பட்டு வருகிறது. பத்தாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தீவில் ஒரு சிவன் ஆலயம் அமைக்கப்படுவது ஓர் உலக சாதனை என்றே கூற வேண்டும். இது மனிதனால் செய்யப்படக் கூடியதன்று என்பது இக்கோவிலைப் பரர்த்தவர்கள் யாவருக்கும் விளங்கும். இக்கோவிலைக் கட்டுவதற்கு உலகின் மூலை முடுக்கு களிலிருந்து பணம் வந்து குவிகிறது. யார் நன்கொடை கொடுத்தார்கள் எவ்வளவு கொடுக்கப்பட்டது எந்த நாட்டிலிருந்து அனுப்பப்பட்டது என்ற விபரங்கள் ஆதீனம் காலாண்டுக்கொருமுறை வெளியிடும் புதினப் பத்திரிகையில் வெளியிடப்படுகிறது. இப்பத்திரிகை நன்கொடையாளர் யாவருக்கும் அனுப்பப்படுகிறது. இவ்வாறு நன்கு திட்டமிடப்பட்டு சீரிய முறையில் நடத்தப்படும் ஒரு நிறுவனமாக இது



திகழ்வது பெருமைப்படக் கூடிய விடயமே. சைவர்கள் யாவரும் இக்கோவில் திருப்பணிக்குத் தம்மாலான தொகையை அனுப்பி உதவுவது இப்பிறவிப் பெருங்கடன் என்பது என் தாழ்மையான வேண்டுகோள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து நமக்கு வாரி வணங்கும் இறைவனுக்கு ஒரு சிறு தொகையாவது காணிக்கை செலுத்துவது எமது கடமை. 'ஏழு பிறப்பும் ஏமாப்பு இடத்து' என்ற வள்ளுவர் வாக்கை நினைவு கூர்வது இங்கு பொருத்தமாயிருக்கும். பெப்ரவரி 25, 1975 இல் அதிகாலையில் சிவனின் மாயக் காட்சிகளால் குருதேவருக்கு உணர்த்தப்பட்டதன் காரணமாக இக்கோவில் ஆரம்பிக்கப் பட்டது. காட்சிகள் ஒன்றில் இத்தீவின் காட்டுப் பகுதியொன்றில் இருந்த கற்பாறை மீது சிவன் அமர்ந்திருப்பதைக் குருதேவர் கண்டார். அதைத் தேடி அலைந்து குவைத்தீவின் இப்பகுதிக்கு இறுதியில் வந்து சேர்ந்தார் என அவர் தனது நூலொன்றில் எழுதியுள்ளார்.

இதைப் பற்றிச் சென்ற கட்டுரையில் விபரமாகக் குறிப்பிட்டிருந்தேன். எல்லாம் அவன் செயல். அவன் ஆட்டுவிக்கிறான். நாம் ஆடுகிறோம். இக்கோவிலோடு எனக்குள்ள தொடர்பை இங்கு நான் குறிப்பிட்டே ஆக வேண்டும். குருதேவரை நான் முதல் முதலில் சந்தித்தது 1995 இல் றிச்மண்ட் பிள்ளையார் ஆலயத்தில் நடை- பெற்ற சைவ மகாநாட்டில். அதுவும் ஓர் அதிசயமே. பார்வையாளர்களோடு அமர்ந்திருந்த போது சுவாமியாருக்குப் பக்கத்திலே நின்று அவரது ஆங்கில உரையைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொண்டிருந்த இளைஞனைப் பார்த்ததும் எங்கோ பழக்கப்பட்ட முகம் போலிருந்தது. வெள்ளை உடையில் மொட்டைத் தலையோடு அவன் காட்சியளித்தான். பேச்சுக்கள் யாவும் முடிந்து எல்லோரும் வரிசையாக நின்று சுவாமிகளிடம் பிரசாதம் வாங்குவதற்கு தயாரானார்கள். அப்போது அவ்விளைஞன் என்னை நோக்கிச் சிரித்துக் கொண்டே வந்து 'சேர் என்னைத் தெரியாதோ? நான் தான் ரமேஷ்' என்றான். நான் கோப்பாய் கிறிஸ்துவக் கல்லூரியில் அதிபராக இருந்த போது இவன் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. இவனின் தமையனாரும் அங்கு படித்தவர். பின்னால் சந்திக்கும் வாய்ப்பு எதுவும் ஏற்படவில்லை. இவ்வாறு படித்தவர்கள் பலர் இங்கிருக்கிறார்கள். இப்பையன் பின்னர் சுப்பிரமுனிய சுவாமிகளோடு அளவெட்டி ஆச்சிரமத்தில் அவர் இருந்தபோது தொடர்பு ஏற்பட்டு, அமெரிக்காவுக்கு வந்து சமயக் கல்வியில் பட்டம் பெற்றுச் சுவாமிகளின் அடியாராக மாறி ஹவாயில் வாழ்ந்து வருவதாக அறிந்தேன். சுவாமிகள் செல்லும் நாடுகளுக்குச் சென்று அவரது ஆங்கில உரைகளைத் தமிழில் உரை மாற்றிக் கூறிவருவதாகவும் தனது தற்போதைய பெயர் தொண்டுநாதன் எனவும் கூறினார். அவர் சுவாமியிடம் அழைத்துச்சென்று என்னை அறிமுகம் செய்து வைத்தார். குருதேவர் எனக்கு நெற்றியில் விபூதி இட்டு ஆதீனம் பற்றிய ஒரு கைநூலையும் தந்தார். அன்று தொடங்கியது எனது ஆதீனத்தொடர்பு. எனது குலதெய்வம் யோகர் சுவாமிகள் கூறியது போல் 'இது எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' அதன் பிறகு குருதேவரை எட்மண்டன் ஆலய முதலாவது கும்பாபிஷேகத்தில் 2000 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகச் சந்தித்து அவரது நூலாகிய 'Loving Ganesha' வாங்கியதுடன் அதில் அவரது கையெழுத்தையும் பெற்றுக்கொண்டேன். அதன்பிறகு அவருக்குப் பின் ஆதீன முதல்வராக வணபோதி நாத வேலன்

தொடர்ச்சி 32ஆம் பக்கம்


## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த திருவிழா




அளவெட்டி அருள்மிகு கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த திருவிழா இவ்வருடம் மே மாதம் 15ஆம் திகதி வியாழக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி 12 நாட்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு திருவருள் பாலித்துள்ளது. இதனை ஒட்டி வழமை போல கனடா வாழ் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பக்தர்களால் கெனடி வீதியில் அமைந்துள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் மே மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியிலிருந்து விசேட பூஜை வழிபாடுகள் கும்பழாவளைப் பிள்ளையாரை நினைந்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தருணம் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து பூசை வழிபாட்டில் கலந்து சிறப்பிப்பதுடன் எல்லாம் வல்ல கும்பழாவளையான் திருவருளை வரசித்தி விநாயகர் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கும்பழாவளைப் பிள்ளையார் திருப்பணிச்சபை கனடாக்கிளையினர் பக்தியுடன் அனைவரையும் அழைக்கின்றனர்.

416.412.4478 / 416.502.1434

# சளித்தொல்லை, ஆஸ்துமா குணமாக யோகாசனங்கள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

இப்பொழுதெல்லாம் மனிதர்களுக்கு எந்த ரூபத்தில், எந்த நேரத்தில், எப்படி நோய் வருகின்றது என்பது தெரிவதில்லை. இன்னும் சொல்வதானால் பிறக்கும் குழந்தை முதல் நோய்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. இந்த வகையில் சளித்தொல்லை என்கிற ஆஸ்துமா மிகவும் கொடுமையான நோயாகும். இந்த நோய் எந்த வயதிலும் வரலாம். அன்றாடம் நம் வாழ்க்கையில் சில ஆசன பயிற்சிகள் மற்றும் சில மூச்சுப் பயிற்சிகளைச் செய்து வருவதுடன் அதற்கு மேலாக உண்ணும் உணவு முறைகளிலும் கவனமாக இருந்து வந்தால் இந்த நோயை முற்றிலுமாகக் குணப்படுத்த முடியும்.



### குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு

குழந்தைகளைப் பொறுத்தவரை குளிர்ந்த காற்று வீசக்கூடிய இடத்தில் இருந்தாலும், குளிர் பானங்களையோ பொருட்களையோ உண்ணும் போதும், போதிய பிராணவாயு கிடைக்காத அறைகளில் தூங்கும் போதும் இம்மாதிரியான நோய்கள் வருகின்றன. பொதுவாக குளிர்காலத்தில் பரவலாக இந்நோய் காணப்படுகிறது. ஏனெனில் பனிக்காற்று பொதுவாக குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஒத்துக் கொள்வதில்லை. அடுத்து வெளியில் செல்லும் போது வாகனங்களிலிருந்து வெளிப்படும் அதிகப்படியான புகையினால் உருவாகும் மாசுபடுத்தப்பட்ட காற்றினை சுவாசிக்கும் போது மூச்சுக் கோளாறு ஏற்படுவதுடன் மார்புசக்தி வெடித்து விடுவது போல் துடிதுடித்து விடுவார்கள். இந்நோய் முற்றினால் மார்புப் பகுதியில் சளி கட்டிவிடும். பின்பு சுவாசக் கோளாறுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

### தவிர்க்க வேண்டியவை

குளிர்ந்த பொருட்கள், குளிர்பானங்கள், ஈரப்பதன் உள்ள காய்கறிகள், பால், நெய்,



தயிர் மற்றும் பால் சம்பந்தப்பட்ட உணவுப் பொருட்களைத் தவிர்ப்பது சிறந்தது. பழங்களில் வாழைப்பழத்தை முற்றிலும் தவிர்க்கவும்.

### சேர்க்க வேண்டியவை


குடிப்பதற்கு வெந்நீர் (Warm Water), இஞ்சி, பழச்சாறு, சூடான உணவுகள், பயறு வகைகள் போன்றவை.

### ஆசனங்கள்

மச்சாசனம், சப்த வஜ்ராசனம், நாடி சுத்தி மற்றும் கபாலபதி மூச்சுப் பயிற்சி என்பன

**பெரியவர்களுக்கு** (Adults)

பெரியவர்களுக்கு இந்நோய் வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. புகை பிடிப்பதும், அதிகமான தேநீர் அருந்துவதும், குளிர்ந்த உணவு வகைகளை உண்ணுதல் போன்றவை. சிலருக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே இந்நோய் இருந்துவரும்.



இவர்கள் பனிக்காலத்தில் வெந்நீர் மட்டும் அருந்துவது சிறந்தது. அதிகமாக புகைபிடிப்பதால் மார்புப் பகுதியில் புகை படிந்து சுவாசக்குழாயை அடைத்துவிடும். அதனால் காற்று நுரையீரலைச் சென்றடைவது குறைந்து விடும். வயதானவர்களுக்குத்தான் இந்நோய் பெரும்பாலும் வருகிறது. இவர்கள் கண்டிப்பாக தினமும் ஒரு குறிப்பிட்ட யோகாசனத்தையாவது பழக வேண்டும். நுரையீரல் முதலான சுவாச உறுப்புகள் சீராக இயங்கினால் இந்நோய் வர வாய்ப்பில்லை. உடலில் வாதம், பித்தம், கபம் என்பன சமநிலையை அடைந்தால் எந்த நோயும் மனிதனை அணுகாது, மரணமும் நெருங்காது.

### தவிர்க்க வேண்டியவை

குளிர் தன்மையுள்ள உணவுகள் ஈரப்பதன் மிகுந்த காய்கறிகள், பாலிலிருந்து உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் புகை மற்றும் மது பழக்கம், தேநீர் போன்றவை.

### நிரந்தர தீர்வு - ஆசனங்கள்


1. ஒட்டக ஆசனம் - (Camal)
2. மச்சாசனம் - (fish)
3. பஸ்ஸிமொத்தாசனம் (Head knee pose)
4. தனுராசனம் (Bow)
5. விபரீத ஹரணி (Adventure pose)

### மூச்சுப் பயிற்சிகள்

1. கபாலபதி
2. பஸ்திரிகா பிராணாயாமம்
3. நாடி சுத்தி பிராணாயாமம்

## கபாலபதி

ஏதேனும் ஒரு இருக்கையில் நேராக அமர்ந்து கொண்டு மூச்சை இரு மூக்கின் வழியாக வேகமாக வெளியில் 20 முதல் 30 தடவைகள் தள்ள வேண்டும். இதனைத் தொடர்ந்து காலையிலும் மாலையிலும் செய்து வர வேண்டும். இதனையும் பொருத்தமான ஆசனங்களையும் ஆரம்பத்தில் ஒரு யோகாசன ஆசிரியர் உதவியுடன் பழகி நோய் முழுமையாக




குணமடையும் வரை தொடர்ந்து செய்து வர வேண்டும்.

இதில் ஏதேனும் விளக்கம் தேவைப்படின் என்னுடன் தொடர்பு கொள்ளவும்



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721





Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



GET JOB READY IN SIX MONTHS WITH A PSW DIPLOMA FROM TBC

OTHER DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 Weeks (co-op available)

Business Administration
26 Weeks

Computerized Accounting
26 Weeks

Medical Office Admin.(MOA)
32 Weeks

FREE TRAINING

யார் தகுதி உடையவர்கள் ?

★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம்ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றை இலவசமாகக்கற்கலாம்

Tuition Fees,Books,Living Expenses Day care & Transportation up to $28000

அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
எமது மாணவர்களில் பலர் சிறந்த வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள்

Registered Nurse Exam. Prep.
Registered Practical Nurse Exam. Prep.
MS Office 2010, Quick Books 2011
Simply Accounting 2011, Accpac Ver. 5.6
Canadian Securities Course
Online Stock Trading
Bank Teller, First Aid & CPR
Food Handler Certification

OACC PROUD MEMBER

☎ 416-291-5155 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# காலத்தோடு வளரும் கணினிகள் -21

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் மின் அஞ்சல்களின் வரலாற்றுத் தகவல்களைப் பற்றிக் கவனித்தோம். இந்தக் காலத்தில் மின் அஞ்சல் முக்கியமான ஒரு தொடர்புச் சாதன-மாக விளங்குகின்றது. மின் அஞ்சல்களின் பாவனை உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் சமூக வலையமைப்புக்களின் வருகை புதியதோர் வழியைத் திறந்தன. முகப்புத்தகம் (Face Book) என்ற சமூக வலையமைப்பு (Social Network) பெப்ரவரி 2004 இல் வெளிவந்தது. இதனை மார்க் சக்கர்பர்க் (Mark Zuckerberg) என்பவர் தனது பல்கலைக் கழக நண்பர்களான எடுயார்டோ சவரின் (Eduardo Saverin), அன்ட்ரூ மக்கொலும் (Andrew Mccollum), டஸ்ரின் மொஸ்கோவிற்ஸ் (Dustin Moskovitz), கிறிஸ் கியுசஸ் (Chris Huges) ஆகியோருடன் இணைந்து உருவாக்கினார். 2012 இல் 5.1 பில்லியன் வருமானம் உள்ள நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது. 2013 ஆம் ஆண்டின் போர்ரியூன் (Fortune) 500 சாதனைப் பட்டியலிலும் 462 ஆவதாக இடம் பிடித்துள்ளது. 2010 ஆம் ஆண்டில் இருந்து மார்க் சக்கர்பர்க் உலகத்தின் முதல் 100 செல்வந்தர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். ருவிற்றர் (Twitter) என்ற சமூக வலையமைப்பு மார்ச் 2006 இல் ஜைக் டோர்சி (Jack Dorsey) என்பவரால் உருவாக்கப்பட்டது. முகப்புத்தகம் அதிக பிரசித்தி கொண்டதாக விளங்குகிறது. அடுத்தபடியாக ருவிற்றர் உள்ளது. மேலும் சில சமூக வலையமைப்புக்கள் பாவனையில் உள்ளன.

முகப்புத்தகத்தின் மூலம் உலகெங்கும் பரந்து வாழும் நண்பர்களுடன் தொடர்பைப் பேணவும், படங்களைப் பகிர்ந்து கொள்ளவும், தமக்குப் பிடித்த ஒலி, ஒளி வடிவத் தகவல்களைக் கூட இலகுவாகப் பகிர்ந்து கொள்ளவும் முடிகின்றது. ஒருவரின் முகப்பக்கம் மூலம் அவரைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் முடிகின்றதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய சமூக வலையமைப்புக்களால் பல நன்மைகள் இருந்தாலும் ஒரு சில பாதிப்புக்கள் உள்ளன. எச்சரிக்கையுடன் முகப்புத்தகத்தைப் பயன்படுத்தினால் பாதிப்புக்கள் இன்றித் தப்பித்துக் கொள்ளலாம். சிலர் தமது எந்தத் தகவலையும் வெளிப்படுத்தாது தமது நண்பர்களின் தகவல்களைப் பார்த்து மகிழ்கின்றார்கள். இதற்கு முகப்புத்தகத்தின் மேலுள்ள அச்சம் காரணமாக இருக்கலாம். ஆனால் இது ஒரு நல்ல அணுகுமுறை என்று சொல்ல முடியாது. இதனால் இருக்கும் நட்பிலும் பாதிப்பு ஏற்படலாம். இதைவிட முகப்புத்தகத்தையே பயன்படுத்தாமல் விடுவது நல்லது. சிலர் தமது படத்தையே முகப்புத்தகத்தில் போடுவதற்கு அஞ்சு கின்றார்கள். முகப்புத்தகத்தில் தகவல்களைப் பாதுகாப்பாகப் பகிர்ந்து கொள்ளக் கூடிய வழிவகைகள் உள்ளன. இவற்றை அறிந்து கொள்ளுதல் அவசியம். அறிமுகம் இல்லாதவர்களைத் தமது முகப்புத்தகத்தில் இணைத்துக் கொள்வது ஆபத்தானது.

கணினி உலகத்தில் பல்வேறு தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஏற்படுகின்ற பொழுதும் ஒரு சிலர் தகவல்களைத் திருடி வருவதற்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் கணினிகளில் சேமிக்கப்படும் எந்தத் தகவலுக்கும் பாதுகாப்பில்லை என்ற நிலையும் காணப்படுகிறது. ஆனால் இதற்காக முகப்புத்தகம், மின் அஞ்சல் போன்றவற்றைப் பயன்படுத்தாது ஒதுங்கிக் கொள்ள வேண்டிய தில்லை. எச்சரிக்கையுடன் இவற்றைப் பயன்படுத்துவதே சரியான அணுகுமுறை யாகும். கணினியைப் பயன்படுத்தும் பொழுது கவனிக்க வேண்டிய பொதுவான பாதுகாப்பு விடயங்களைப் பற்றிப் பின்பு கவனிப்போம்.




இணையத்தின் தோற்றத்தால் உருவாகிய பயன்பாடுகளில் மின் அஞ்சலும், முகப்புத்தகம், ருவிற்றர் போன்ற சமூக வலையமைப்புக்களும் முக்கியமானவை. மீண்டும் ஒரு முறை இணையத் தொழில்நுட்பத்தின் அடிப்படை பற்றிக் குறிப்பிட்டு விட்டு இணையம் தொடர்பான சில மேலதிகத் தகவல்களை எடுத்து வரலாம் என்று நினைக்கின்றேன். இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கணினிகள் இணைக்கப்படுதலை வலையமைப்பு (Network) என்போம். குறிக்கப்பட்ட சிறிய பிரதேசம் அல்லது கட்டிடத்திற்குள் கணினிகள் இணைக்கப்படுதல் உள்வட்ட வலையமைப்பு (Local Area Network) ஆகும். இந்த வலையமைப்பிற்கு கணினிகள் 100 மீற்றர் தூரத்திற்குள் இருக்க வேண்டும். பல கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும்




\- அகணி -
authorakani@yahoo.com


தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

கணினிகள் இணைக்கப்படுதல் பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network) ஆகும். இவ்வாறாக மிகவும் அதிகமான எண்ணிக்கை கொண்ட கணினிகளை சற்றலைட் ஊடாக இணைக்கப்படுவதால் உருவான வலையமைப்பே இணையம் ஆகும். இந்த வலையமைப்புக்குள் எமது கணினியும் ஏதோ ஒரு வகையில் இணைக்கப்பட்டால் இணையத் தளங்களுங்குச் சென்று பார்வையிட இன்ரர் என்று கூறுமளவிற்கு வந்து விட்டது.

வானொலி இணையத் தளங்கள், பத்திரிகை இணையத் தளங்கள், சஞ்சிகை இணையத் தளங்கள், தொலைக்காட்சி இணையத் தளங்கள் எனப் பல்வேறு தேவைகளுக்கும் இணையத்தளங்களை நாடுகின்ற நிலைமையில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எந்த ஒரு விடயத்தைப் பற்றியும் இணையத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் என்ற நிலைமை உள்ளது. ஒளி வடிவத்தில் காண்பதற்கு யுரியூப் (Youtube) என்ற இணையத்தளம் மிகவும் பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு இணையம் உதவுகின்றது. 'இணையம் இல்லாது

Find us on: facebook

நெட் எக்ஸ்புளோரர் (Internet Explorer), நெற்ஸ் கேப் போன்ற மென்பொருள்கள் உதவுகின்றன. இவற்றை இன்ரர் நெற் பிரவுசேர்ஸ் (Internet Browsers) என அழைப்போம். இணையத்தில் குறிப்பிட்ட தலைப்பில் தகவல்களைத் தேடுவதற்கு தேடுபொறிகள் (Search Engines) உதவுகின்றன. google.com, yahoo.com, msn.com, lycos.com போன்றவை எல்லாம் தேடு பொறிகள். குறைந்த நேரத்தில் அதிகமான தகவல்களைத் தேடக் கூடிய

இனிமேல் வாழ்வில்லை' என்ற நிலையே இன்றைய நிலை. வயது வேறுபாடின்றி எல்லோரும் இணையத்தால் நன்மை அடைகின்றார்கள். உலகத்தில் வாழும் ஒவ்வொருவரும் கணினியைப் பாவிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையை நோக்கியே காலச்சக்கரம் உருண்டு கொண்டிருக்கின்றது.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப்

twitter

தேடு பொறிகளை மெற்றா தேடு பொறிகள் (Meta Search Engines) என அழைப்பர். metacrawler.com, mamma.com, search.com, kartoo.com போன்ற பல மெற்றா தேடு பொறிகள் உள்ளன. ஆனாலும் அதிகம் பாவிக்கப்படும் தேடு பொறியாக கூகிள்.கொம் (google.com) விளங்குகிறது. இதனாலேயே ஏதாவது ஒரு விடயத்தை இணையத்தில் தேடுதலை 'கூகிள் செய்தல்'

பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.

நன்றி. வணக்கம். தொடரும்....

# வாடகை குடியிருப்புகளில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

Police Division) பின்வரும் உத்தியோகத்தருடன் தற்போது தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Kathy Massey
தொலைபேசி: 905.579.1520 Ext. 4113
மின்அஞ்சல்: Kmassey@drps.ca

இப்பிரிவில் இத்தகைய கோரிக்கையினை நிறைவேற்ற விண்ணப்பதுடன் $50 டொலர் பணம் செலுத்துதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டது பொலீஸ் நிலைய பதிவில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவர் களின் பதிவுகளை அழிப்பதற்குரிய வழிமுறை மட்டுமேயாகும். ஆனால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்படாது தப்பியவர்கள் மட்டும் எப்படி பொலிஸ் நிலைய பதிவுகளிலிருந்து தங்கள் விபரங்களை அகற்றுவது என்பது மட்டுமேயாகும்.

ஆனால் நீதிமன்றத்தில் என்றோ ஒரு நாள் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டவர் களின் பதிவுகளை (Court Conviction Record) சில வருடங்களின் பின்பு அகற்ற வேண்டுமாயின் அதற்கு மனு செய்ய வேண்டியது இன்னொரு இடம், அது

National Parole Board
Clemency & Pardons Division
410, Laurie Ave, West, 5Th Floor
Ottawa Ontario K1A 0R1
தொலைபேசி: 1.800.874.2652

இங்கு நீதிமன்றத்தில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்டு, சிலநேரங்கள் தண்டனை யினையும் ஒரு காலம் அனுபவித்தவர் குற்றப்பதிவுகளை அகற்றும் கோரிக்கையினை முன் எடுப்பது எப்படி?

அதற்கு பின்வரும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

1. சகல கிரிமினல் பதிவுகளும் முறைப்படி பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பொலீஸ் நிலையம் சென்று 'கையடையாளம் பதியும் விண்ணப்பம்' (Fingerprint form) எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

RCMP
CIVIL FINGERPRINT SCREENING SERVICE
P.O BOX 8885
OTTAWA, ON K1G 3M8

என்ற முகவரிக்கு $25 டொலர் மணி ஓடரும் சேர்த்து அனுப்ப கனடாவிலுள்ள தங்களின் சகல கிரிமினல் குற்றப்பதிவுகளையும் தபாலில் அனுப்பி வைப்பார்கள்.

2. விசாரணை நடந்த நீதிமன்றத்தின் அலுவலகத்திற்கு சென்று வழக்கு தொடர்பான விபரங்களை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் ஏதாவது புதிய குற்றசாட்டு பதிவுகள் இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்ற விபரங்கள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

4. ஆள் அடையாளத்தினை உறுதி செய்யும் அடையாள அட்டைகளின் பிரதிகள் எடுத்தல் வேண்டும்.

5. இவற்றுடன் சேர்த்து ஏற்கனவே செய்து பதிவுகளில் உள்ள குற்றங்களை மன்னித்து அந்த பதிவுகளை அகற்றுமாறு கோரும் விண்ணப்ப படிவங்களை (Pardon Application) நிரப்பி சகலதையும் சேர்த்து மேற்குறிப்பிட்ட கனடாவின் தலைநகரில் மத்திய அரசின் ஒரு நிறுவனமாக இயங்கும் விலாசத்திற்கு அதற்குரிய கட்டணங்களுடன் அனுப்புதல் வேண்டும்.

மன்னிப்புக்கு தகுதி என்றால் சகல குற்றப்பதிவுகளும் (பொலிஸ் நிலைய பதிவு உட்பட) அகற்றப்பட்டது என குறிப்பிட்டு 18 மாதங்களுக்கு இடையில் உறுதிப்படுத்தி கடிதத்தில் பதில் வரும். அதாவது குற்றப்பத்திரங்கள் யாவும் அகற்றப்பட்டு விட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்ட தபாலில் வந்து சேரும். இவற்றினை வெற்றிகரமாக முடித்தவர் தொடர்ந்து ஒழுங்கான மனிதனாக வாழ்ந்தால் சரி!

இந்த பதிவுகளை அழிக்காவிட்டால் மனிதனாக வாழ காலம் கடந்து ஞானம் வந்து விரும்பினாலும் குற்றபதிவுகள் வாழ்வில் நின்று நின்று உதைத்து விழுத்தும். அந்த நிலையில் விரக்தியே தோன்றும்.


@ GTA Square



TUTORING
Saturday & Sunday 9:00 To 11:00
• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )
Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# ஓடும் நீர் உறைவதில்லை 165

## உறவுக்கும் உணர்வுக்கும் தடையானது?

'உறவுக்கும் உணர்வுக்கும் தடையானது எது?' என்றதும் முதலில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியது என்னவெனில் ஏதோ ஒன்று இந்த இரண்டுக்கும் தடையாக இருக்கின்றது என்பதுதான். அதாவது உறவுக்கு எது தடையாக இருக்கின்றதோ அதுவே உணர்வுக்கும் தடையாக இருக்கின்றது என்பதாகும். 'உறவுக்குத் தடையானது எது?' என்றதும் பல விடயங்கள் எமது மனக்கண் முன் குவிந்து விடுகின்றன. உறவுக்குத் தடையானவையாக போட்டி, பொறாமை, சந்தேகம், அகம்பாவம், துரோகம், தற்பெருமை, பொய் பேசுதல், சுயநலம் போன்றவை உள்ளடங்கலாகப் பல விடயங்கள் அமைகின்றன. உணர்வுகளைப் பொறுத்தவரையில் அவற்றின் சிறப்பம்சம் என்னவெனில் ஒவ்வொரு உணர்வும் தனித்தே இயங்கும் என்பதாகும். உறவு என்பது கூட்டு அல்லது இணைப்பு என்பதை அடித்தளமாகக் கொண்டது. ஆனால் உணர்வுகளோ ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இயங்குவதில்லை. அவை தனித்தனியாகவே வெளிப்படும். அதாவது ஒரே நேரத்தில் ஒருவர் கவலை கொண்டவராகவும் மகிழ்ச்சியுடையவராகவும் இருக்க முடியாது. அதேபோன்றே ஒருவர் கோபமாக இருப்பார் அல்லது சாந்தமாக இருப்பார். அதுமட்டுமன்றி உணர்வுகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உறவுக்குத் தடையாக இருப்பதுமில்லை. உதாரணமாக, தனது பிள்ளை மீது ஒரு தாய்க்கு கோபம் ஏற்படும்போது அது உறவைப் பாதிப்பது மிகவும் அரிதானதாகவே நிகழ்கின்றது.

இப்போது உறவுக்கும் உணர்வுக்கும் தடையானது எது என்பதைப் பார்ப்போம். கேள்வி அல்லது வினா (Question) என்பதே உறவுக்கும் உணர்வுக்கும் தடையானதாக அமைகி ன்றது. 'கேள்வியா?' 'கேள்வி இல்லாமல் எப்படி விடயங்களை அறிந்து கொள்வது?'. 'கேள்வி பிறந்ததால் தானே மனிதன் இந்த அளவிற்கு அறிவாலும் ஆற்றலாலும் வளர்ந்திருக்கின்றான்?" என்றெல்லாம் கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டு காலத்தை வீணாக்காதீர்கள். மனைவியைப் பார்த்து 'நீ என் மனைவியா?' என்றால் பந்தம் போய்விடும். தாயைப் பார்த்து "நீ என் தாயா?" என்றால் பாசம் தொலைந்து விடும். நண்பனைப் பார்த்து 'நண்பனா நீ?' என்றால் நட்புப் போய்விடும். இவை எல்லாம் கேள்வியின் விளைவுகள் தான். அதேபோன்று தான் வார்த்தைகளால் அன்றி உள்ளுணர்வால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய விடயங்களில் கேள்விகளைத் தொடுப்பதன் மூலம் அதன் உண்மைத் தன்மையை நாம் உள்வாங்க முடியாமல் போய்விடுகிறது. உதாரணமாக, ஒரு குழந்தையின் சிரிப்பை உள்ளுணர்வால் உள்வாங்குவதற்குப் பதிலாக அது ஏன் சிரிக்கின்றது என்று கேட்போமாயின் குழந்தையின் சிரிப்பின் உணர்வு ரீதியான இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடும். இப்போது நாம் 'கேள்வி' என்றால் என்ன? என்பதைப் புரிந்துகொள்வோம்.



கேள்வி என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. எது எதுவோ அதை அதுவாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இன்மையினதும் உள்ளதை உள்ளபடி உணர்ந்து கொள்ளவதில் (புரிதலில்) ஏற்படும் தடுமாற்றத்தினதும் வெளிப்பாடே கேள்வியாகும். ஏற்றுக்கொள்ளலும், புரிதலும் அதிகரிக்க அதிகரிக்க கேள்விகள் குறையும். கேள்விகளைக் குறைக்கக் குறைக்க ஏற்றுக்கொள்ளலும் புரிதலும் வளரும். உறவுக்கும் உணர்வுக்குமான தடைகள் அற்றுப் போகும்.

## அறிந்ததும் அறியவேண்டியதும்

அறிந்திருத்தல் சம்பந்தமாக நாம் புரிந்து கொள்ள வேண்டியது, எதை அறிந்திருக்கின்றோம், எவ்வாறு அறிந்திருக் கின்றோம், எவ்வளவு அறிந்திருக்கின்றோம் என்பவை தான். எதை அறிந்திருக்கின்றோம் என்பதை நாம் எமது நினைவுகளின் தொகுப்பில் இருந்துதான் அடையாளம் காண முடியும். நிகழ்வுகளின் சேகரிப்புத்தான் நினைவுகள். இந்த நிகழ்வுகள் ஐம்புலன்களின் ஊடாக எமது ஆழ் மனதில் பதியப்படுகின்றன. தொட்டுணர்தல், சுவைத்தல், பார்த்தல், நுகர்தல், கேட்டல் என்பவற்றின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன. இப்பதிவுகளை நாம் அறிந்திருத்தல் என்கிறோம். எந்தெந்த விடயங்களை நாம் அறிந்திருக்கின்றோம் என்பதை நாம் இலகுவாக அடையாளம் காண்பதற்கு, ஒன்றை நாம் பார்க்கும்போதோ, கேட்கும்போதோ, நுகரும்போதோ, சுவைக்கும் போதோ அல்லது தொட்டு உணரும்போதோ உடனடியாக அதை அடையாளப்படுத்தவோ அல்லது இனங்கண்டு கொள்ளவோ முடியுமாயின் அது ஒரு மீள் நிகழ்வாக இருப்பதனால் அந்த விடயம் ஏற்கனவே அறியப்பட்டதாக அமைகின்றது. மாறாக, நாம் எதிர்கொள்ளும் ஒன்றை அடையாளப் படுத்தவோ அல்லது இனங்கண்டு கொள்ளவோ முடியாவிடின் அது இதுவரையில் அறியப்படவில்லை என்பதாகப் பொருள்படும்.

அடுத்து, எவ்வளவு அறிந்துள்ளோம் என்பதைப் பொறுத்தவரையில் நாம் எந்தவிதமான அளவீட்டையும் மேற்கொள்ள முடியாது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று ஒரு விடயம் மீண்டும் நிகழும்போது அதை இனங்கான முடியுமாயின் அதை அறிந்திருக்கின்றோம் என்பதால் நிகழ்வுகளால் மட்டுமே எமது அறிதலை அளவிடமுடியும். ஆனால் நிகழ்வுகளின் எண்ணிக்கை வரையறையற்று இருப்பதனால் நாம் எவ்வளவு அறிந்துள்ளோம் என்பதை அளவிடுவதற்கு வாய்ப்பு இல்லை. அறிந்திருத்தலில் உள்ள மிகப் பெரிய பின்னடைவு என்னவெனில் நாம் அறிவு பூர்வமாக ஏற்றுக்கொண்டவை அனைத்தும் நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டவையாகவே அமைகின்றன. ஆனால் நம்பிக்கை அதன் தன்மையில் பலவீனமானது ('நம்பிக்கையின் இரு பலவீனங்கள்') என்ற கட்டுரையை வாசிக்கவும்). நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை அனைத்தும் பிறரின் உள்ளீடுகளே. இந்த உள்ளீடுகள் மதம், மொழி, கலாச்சாரம், பண்பாடு, சட்ட திட்டங்கள், சமுதாய ஒழுங்கு விதிகள் என்ற வடிவில் எமக்குள் செலுத்தப்படுகின்றன. இவ்வாறு உள்வாங்கப் பட்டவற்றை நாம் வேறுபாடுகளைக் கண்டறியும் கருவியாக பயன்படுத்திக் கொள்கிறோம். இதனால் நாம் அறிந்திருப்பவை அனைத்தும் வேறுபாடுகளே. எமக்கும் பிறருக்குமான வேறுபாடுகளே.

நாம் அறிந்திருக்கும் இந்த வேறுபாடுகள் தான் எமக்குள் பிளவுகளையும், பிரச்சனைகளையும், முரண்பாடுகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த வேறுபாடுகள் அனைத்தினதும் தயாரிப்பாளர்கள் நாம் தான். இந்த வேறுபாடுகள் குடும்பத்துக்குள், குடும்பங்களுக்கிடையில், சமூகத்துக்குள், சமூகங்களுக்கிடையில், நாட்டுக்குள், நாடுகளுக்கிடையில் வெறுப்பை உருவாக்கி அதன் மூலம் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த அழிவில் இருந்து எம்மை நாம் காப்பாற்றிக் கொள்வதற்கு அறிந்துகொள்ள வேண்டியது எமக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான ஒத்த இயல்புகளைத் தான். அப்போது தான் மனிதன் மனிதனாக வாழ முடியும். எனவே, இதுவரை நாம் அறிந்திருக்கும் வேறுபாடுகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு எமக்கும் மற்றவர்களுக்கும் இடையிலான ஒத்த இயல்புகளை அறிந்து கொள்வோம்.

**KG Master: --**
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.yourlifecoach

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



**மஹராஜியின் உரைகள்**

**On DVD**
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

**On TV**
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# அகத்திய வெண்பா

கடந்த இதழ் தொடர்ச்சி...

வாதாபி தன்னைக் கறியாக்கி வந்தவரின்
மீதன்பு காட்டி விருந்தளித்து - பாதகனாம்
வில்வலனும் வந்த விருந்தை உபசரிக்க
நல்லதென உண்பார் நயந்து. (34)

வந்தவரும் உண்டதன்பின் வாதாபி வாவென்று
தந்திரத்து வில்வலனும் தானழைக்க - வந்தார்
வயிற்றைக் கிழித்துவா தாபி வெளிவருதல்
இயற்றிவரும் சூழ்ச்சி இவர். (35)

இந்தமுறை தன்னை இயற்றிப் பொருள்வேண்டி
வந்த அகத்தியரின் வாழ்வுக்கு - அந்தம்
விளைக்க இருப்பதனை வேத்தர் அறிந்தும்
உளைக்காதே உண்டார் உணவு. (36)

(வேத்தர் - அறிவிற் சிறந்தவர், இங்கே அகத்திய முனிவர். உளைக்காதே - வருந்தாதே.)

வேதமுனி உண்டபின்னர் வில்வலனும் தம்பிதனை
வாதாபி வாவென்ன மாமுனிவர் - வாதாபி
சீரணிப்பா யென்றதுமே சின்னவனும் செத்தொழிந்தான்
தாரணியார் தொல்லைதீர்ந் தார். (37)

வில்வலனும் தெய்வமுனி மேன்மை தனையறிந்து
செல்வங்கள் ஈந்து சிறப்பித்து - பொல்லா
பிழையைப் பொறுத்தருள வேண்டுமெனப் பேகணித்துத்
தொழுதான் அவரடிகள் தொட்டு. (38)

(பேகணித்து - மனங்கலங்கி.)

வில்வலனை மன்னித்து வீடுவந்த வேதியரை
வல்லமனை யாளும் வரவேற்க - சொல்லரிய
செல்வத்தைத் தான்வழங்கச் செந்தா மரைமுகத்து
நல்லாளும் பெற்றாள் நயந்து. (39)

அற்றமிலா இல்லறத்தை ஆற்றி வருகையிலே
உற்றதவ மங்கைநல்லாள் ஓர்மகனை - பெற்றே
அளித்தார் அகத்தியரும் அன்புறவே கண்டு
களித்தார் முடித்தார் கடன். (40)

(அற்றமிலா - குற்றம் இல்லாத.)

நூற்பயன்

பஞ்சம் பசிதீரும் பாவ வினைபோகும்
வஞ்சம் இலாநல்ல வாழ்வாகும் - நெஞ்சார
சீல முனிவர்புகழ் வெண்பாவைச் சேவித்துச்
சாலப் படிப்பார் தமக்கு.

(சேவித்து - வணங்கி.)

அகத்தியர் வெண்பா
முற்றும்


இந்நூலில் இடம்பெற்றுள்ள அகத்திய மாமுனிவருடன் தொடர்பான கதைகளும் அற்புதங்களும்.
(பாடலில் விளக்கமாவுள்ள கதைகள் இங்கு தரப்படவில்லை.)

செய்யுள் 1

தேவர்களை வருத்திய அசுரர்கள் இந்திரனுக்குப் பயந்து கடலில் ஒளித்திருந்தனர். இந்திரன் அக்கினியை அழைத்து நீ கடல்நீரை வறட்டினால் அசுரர் அகப்படுவர் என்றான். அதற்கு அக்கினி கடலை வறட்டினால் நீர்வாழ் உயிர் இனங்களும் அழிந்துவிடும் என்று மறுக்க, இந்திரன் கோபித்து நீ பூமியிற் கும்பத்திற் பிறந்து கடல்நீர் எல்லாம் குடிக்க என்றனன். அக்கினி பூமியில் கும்பத்தில் ஒரு குறுமுனிவர் வடிவில் தோன்றினாள்.

செய்யுள் 2 - 3

சிவபிரான் இமயமலையில் பார்வதிதேவியைத் திருமணஞ் செய்தபோது அதனைக் காண அண்டசராசரம் முழுவதும் வடதிசையிற் கூடியதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. சிவபிரான் அகத்தியரைத் தென்திசைக்கு அனுப்ப, உயர்ந்த தென்திசை முன்பு இருந்த நிலைக்கு வந்தது. அகத்தியர் தெற்கில் இருந்தவாறே தமது திருமணத்தைக் கண்டு களிக்கச் சிவபிரான் அருள்பாலித்தார்.



கவிஞர் வி. கந்தவனம்

# ஸ்காபறோ முதுதமிழர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

கடந்த ஏப்ரல் 22 ஆம் நாள் திங்கட்கிழமை 1315 நீல்சன் வீதியிலுள்ள முதியோர் இல்ல விருந்து உபசார மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. கீழ்க் காண்போர் 2013/2014 ஆம் ஆண்டுக்கான புதிய செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.




தலைவர் - திரு.மு.தேவராஜா, உபதலைவர்- திருமதி நாகேஸ்வரி துரைராஜாசிங்கம், செயலாளர் - திருமதி ஜெயராணி பூபாலசிங்கம், உபசெயலாளர் - திரு. மார்க்கு சூசை, பொருளாளர் - திரு. அ. நற்குணசேகரன், உபபொருளார் - திரு.சி.க சிவலிங்கம், கணக்கு பரிசோதகர் திரு. சோ. கணேசு, நிர்வாகசபை உறுப்பினர்கள் - திரு. பா நடராஜா, திரு. ம. அரியராஜா, திரு. அடக்கலம் பர்னாண்டோ, திருமதி அமுதபதி கந்தசாமி, திருமதி ஜெயமணி அருமை நாதன், திரு. சி. பூபாலசிங்கம், செல்வி. குமரேஸ்வரி, ஞான சுப்பிரமணியம், போஷகர்கள் - திரு. சீ. நவரத்தினம், திருமதி தில்லை நாயகி, துரைசிங்கம் சட்ட ஆலோசகர் - திரு. மனுவல் ஜேசுதாசன்

தலைவர் - மு. தேவராஜா

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 647.525.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

# FREE CLASSES FOR RESP AND INSURANCE ADVISORS



## Life100

INSURANCE & INVESTMENTS INC.

**Become an Insurance & RESP advisor**

We provide you with Exceptional Service:

- Life Licensing Qualification program LLQP
- Free Seminars and workshops for career development
- Free product and sales training

**Please contact us for more information**

LIFE • CRITICAL ILLNESS
• MEDICAL INSURANCE FOR SUPER VISA
• HEALTH & DENTAL
MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE FOR SELF EMPLOYED

**Sritharan Thurairajah** CLU, CHS

MDRT
Member of Million Dollar Round Table

Direct: **416.918.9771**

Business: **416.321.2500**

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca



Canada Life™

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

Assumption Life

the EDGE™

**Are you getting Million Dollar advice?**

# போரே போ!

- 'அருள்மணி'

ஆண்டு நான்கு போனாலும்
அடுக்கடுக் காக என்நெஞ்சைத்
தோண்டி வதைக்கும் நினைவுகளைச்
சொல்லி ஆற முயல்கின்றேன். 1

போரின் வடுக்கள் சுமந்தின்று
பொலிவிழந் துள்ள சிறுவன்நான்!
நேரிற் பட்டதைக் கூறுகிறேன்
நீங்களும் கேட்டுப் பாருங்கள்!! 2

ஒன்றும் தெரியாச் சிறுவரையும்
ஓட முடியாக் கிழவரையும்
கொன்று கொன்று குவித்திட்ட
கொடிய போரே போபோபோ! 3

போரது வந்து மனிதர்க்குப்
புரிந்த கொடுமைகள் எத்தனையோ...
பாரது...! தந்த தீமைகளைப்
பகையால் விளைந்த கொடுமைகளை!! 4

தண்ணீர் இன்றி நாம்தவித்தோம்!
தக்க மருந்து இல்லாமல்
கண்ணீர் விட்டோம்! இதற்கெல்லாம்
கரணிய மான போரேபோ! 5

கெலியும் பொம்பரும் உறுமிவரக்
கிலிகொண் டோடி ஒளித்தாலும்
நலிவில் லாமல் வீடுகளில்
நாங்கள் அன்று வாழ்ந்தோமே! 6

வந்தது இராணுவம் என்றவுடன்
வாரிச் சுருட்டி அவசரமாய்
எந்தக் குறியு மில்லாமல்
இடம்பெயர்ந் தோம்நாம் ஊரோடு! 7

சேர்ந்து படித்த பள்ளியெலாம்
சீருடை ஆட்கள் மொய்த்ததனால்
ஊர்ந்து பதுங்கு குழிக்குள்ளே
ஓடி ஒதுங்கிக் கொண்டோம்நாம். 8

வாழ்ந்த வீடு மண்ணாச்சு!
வளர்த்த கால்நடைக் கென்னாச்சு?
சூழ்ந்த படையைக் கண்டஞ்சிச்
சுருண்டு கிடந்தோம் குழிகளிலே! 9

உணவில் லாமல் நாமெல்லாம்
ஒவ்வொரு நாளும் பசிகிடந்தோம்!
உணர்வில் லாமல் எமைக்கொன்ற
உன்னை வெறுத்தோம் போரேபோ! 10

பசிக்க அம்மா முகம்பார்த்தேன்
பதைத்து அம்மா எனைப்பார்த்தாள்...
புசிக்க ஏதும் எடுத்துவரப்
போன அப்பா போனவர்தான்...? 11

செல்லடிச் சத்தம் ஓய்ந்தவுடன்
சேர்ந்து வெளியே வந்தோம்நாம்
கல்லடி பட்ட குருவிகள்போல்
கனபேர் கிடந்து துடித்தார்கள்... 12

செல்லடி பட்டு என்தோழன்
சிதறித் துண்டு துண்டாகிக்
கொல்லப் பட்ட காட்சியதன்
கொடுமை நெஞ்சைப் பிழிகிறது! 13

குண்டடி பட்டு என்நண்பன்
குற்று யிராகக் கிடந்தழுதான்.
கண்ட காட்சி மனம்விட்டு
கலையா தின்றும் அஞ்சுகிறேன்...! 14

கண்ணை இழந்தான் ஓரண்ணா!
காலை இழந்தாள் ஓரக்கா!!
புண்ணாய் நெஞ்சம் வலிக்கிறது...
போரே திரும்ப வாராதே! 15

நஞ்சுக் குண்டால் நம்மவர்கள்
நைந்து மடிந்த காட்சியது
பிஞ்சு மனத்தில் தூக்கத்தில்
பேய்போல் எழுந்து நிற்கிறது! 16

உதவி செய்ய மனமிருந்தும்
உதவ முடியா தோடினமே...
கதறி அழுதோர் குரல்கேட்டும்
கண்களை மூடிச் சென்றோமே... 17

அப்பா எங்கே என்றம்மா
அலைந்த போது அம்மாவைச்
சிப்பா யொருவன் பிடித்திழுத்துச்
சென்ற தாகச் சொன்னார்கள்... 18

எவரும் உதவிக் கில்லாது
ஏதிலி யான துணர்ந்தேன்நான்...
நகரும் கூட்டத் தோடொன்றாய்
நகர்ந்தேன் கால்கள் போனபடி... 19

பாது காப்பு வலயத்துள்
பதுங்கு மாறு சொன்னார்கள்
ஏது மறியார் உயிர்காக்க
ஏகித் தஞ்ச மடைந்தார்கள்... 20

தஞ்ச மடைந்த எங்கள்மேல்
சரமா ரியெனச் 'செல்'வீழ
நெஞ்சு பிளந்து பலரிறந்தார்
நேரிற் பார்த்ததை மறப்பேனா...? 21

'உங்களைக் காக்க வந்துள்ளோம்
ஒவ்வொரு வராக வாருங்கள்
எங்கள் பக்கம் சரணடைந்தால்
எல்லாம் கிடைக்கும்' என்றார்கள்.... 22

'உடலிற் துணியெது மில்லாமல்
உயர்த்திய கையுடன் வாருங்கள்
படையினர் உங்கள் நண்பரென'
பலமாய்ச் சொன்னான் ஓரண்ணன் 23

உயிரைக் காக்க விரும்பியவர்,
ஓடி ஓடி அலுத்தவர்கள்,
வயிற்றுப் பசியால் வாடியநாம்,
வழியறி யாது சரணடைந்தோம்! 24

மந்தைகள் போன்று அடைத்தனமை
மலைத்து விழித்தப் பாவிகளை
வந்து பிரித்துக் குழுக்குழுவாய்
வைத்துக் கணக்கு எடுத்தார்கள். 25

ஆசை வார்த்தைக் கெடுபட்டும்
அச்சம் கொண்டும் நம்மவர்கள்
நீசர் குதவ முன்வந்தார்
நிறையக் காட்டிக் கொடுத்தார்கள் 26

முள்ளுக் கம்பி வேலிக்குள்
முடங்கி நாங்கள் இருக்கையிலே



அள்ளிச் சென்றார் பலரையவர்
ஆனது எதுவோ நாமறியோம்! 27

புனர்வாழ் வளிப்ப தாய்க்கூட்டிப்
போன வர்கள் என்னானார்?
இனமா னத்தோ டிருந்திருந்தால்
எவரும் திரும்ப மாட்டார்கள்...?
28

மீள்குடி யேற்றம் என்றார்கள்
மெல்ல அழைத்துப் போனார்கள்
வாழ்வளி போமெனச் சொன்னார்கள்
வாழ்வழிந் திங்கு வாடுகிறோம்! 29

எங்கோ இருந்து வந்தவர்கள்
எங்க ளிடத்திற் தடையின்றி
தங்க வீடுகள் பெற்றிருக்கத்
தகரக் குடிலேன் எமக்குமட்டும்? 30

தகரக் கொட்டகை ஒன்றுக்குள்
தஞ்ச மடைந்து வாழ்கின்றோம்...
துயரம் போக்க யார்வருவார்?
துணைக்கு யார்தான் கைதருவார்? 31

நீதி நிலைக்கு மெனப்படித்தேன்!
நேர்மை வெல்லு மெனக்கற்றேன்!!
ஓதிப் படித்த உண்மையெலாம்
ஏட்டுச் சுரைக்காய் ஆனதுஏன்? 32

ஒருவர் வாழும் உரிமைதனை
ஒருவர் பறிக்க முயலுவதால்
உருவா கின்ற போரென்று
உலகை விட்டுப் போயிடுமோ? 33

ஓரின உயிரைப் பலியாக்கி
உலகில் தமக்குப் பலம்சேர்க்கப்
போரினைக் கருவி யாக்கியவர்
பொய்முகம் கண்டு கொதிக்கின்றோம். 34

நீலிக் கண்ணீர் வடிப்பவர்கள்
நேர்மை பற்றிப் பேசிடுவோர்
போலித் தனத்தை வெளிக்கொணர்ந்த
போரே! மீண்டும் வாராதே!! 35

வல்லர சுகளின் கைகளிலே
வகையாய் மாட்டித் தமிழர்நாம்
சொல்லொ ணாத கொடுமைகளாற்
துவண்டு தொடர்ந்து வாடுவதா? 36

சொந்த இனத்தின் துயரத்தில்
சுகபோ கத்தைத் தேடுபவன்
எந்த இடத்தில் இருந்தாலும்
இனங்கண் டவனைத் துரத்திடுவோம்! 37

வன்ம உணர்வு என்நெஞ்சில்
வயதை மீறி எழுகிறது
என்னை மீறி ஓரணியில்
இணையு மாறு சொல்கிறது 38

மீண்டும் வன்முறை தலைதூக்க
விடுதல் அறிஞர்க் கழகாமோ
வேண்டும் அமைதி வாழ்வெமக்கு
விரைந்து அதைத்தரப் பாருங்கள். 39

அழகைக் கெடுக்கும் போர்வேண்டாம்!
அறிவை மயக்கும் போர்வேண்டாம்!!
வளரும் சிறுவர் மனங்களிலே
வன்மம் விதைக்கும் போர்வேண்டாம்! 40

*சபா. அருள்சுப்பிரமணியம்.*
*கனடா.*


## MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at ***Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228***


## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.
***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# சங்க இலக்கியத்தில் காதல் காட்சிகள்

## கம்புள் பறவை

புலவி விராய பத்து

பெண் குழந்தைகளுக்கு ஆமை ஓட்டை அரைமூடி அணிகலனாகக் கட்டிவிடுவர்.

என்னை நயந்தனன் என்கிறாய். தலைமகள் கேட்டால் என்ன ஆகும்?
- தோழி பரத்தைக்குக் கூறியது.

பரத்தையைத் தழுவி வந்த மார்பிலிருந்த அவன் மாலையிலிருந்த வண்டு தன் தலையை மொய்த்தது என்பதற்காக அவள் வண்டின் மீதே சினம் கொண்டாள்.
- தோழி தலைவனிடம் சொன்னாள்.

நீ தலைவியைத் தழுவ வேண்டாம். தணந்து இரு. என்றாலும் ஊரார் இவளை உன் பெண்டு (ஸ்ரீபெண்டாட்டி) என்றே சொல்வார்கள்
- தோழி தலைவனிடம் சொல்கிறாள்.

பரத்தையிடம் நீ சென்றதைச் சொல்லக் கேட்டாலே வைது கொட்டுபவள் உன்னை நேரில் கண்டால் என்ன ஆவாள்?
- தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

கம்புள் என்னும் காடைப் பறவை தன் துணையோடு விளையாடும் வயலை உடையவன் நீ. சிறுவர் செய்வது போல் தகாத செயல் செய்கிறாய். உன்னை பரத்தையோடு கண்டவர் சிரிக்கமாட்டார்களா?
- தோழி தலைவனிடம்.

குருகு எல்லா வயலிலும் மேய்வது போல் அவன் மேய்கிறான். இனி என் வீட்டுக்கு வரமாட்டான். மனைவியோடு மகிழட்டும்.
- பரத்தை கூற்று.

கரும்பை வீசி எறிந்து மாங்கனியை உயிர்ப்பது போல் தலைவி எல்லாரிடமும் பிணங்குவாள். என்னை விட்டுவைப்பாளா?
- தலைவன் பாணனிடம் சொல்கிறான்.

தலைவி பரத்தையிடமிருந்து வந்த தலைவனை ஏற்றுக்கொள்கிறாள்.
- தோழி தலைவனுக்கு உரைத்தது.

உன் பெண்டு என்று ஊரார் தன்னைச் சொல்லவேண்டும் என்று தலைவி விரும்புகிறாள்.
- தோழி தலைவனிடம் சொன்னது.

பல பூவில் தேன் குடிக்கும் வண்டிடமிருந்து இவன் கற்றுக்கொண்டானா அல்லது வண்டு இவனிடமிருந்து கற்றுக்கொண்டதா என்று என் மகனின் தாய் வினவுகிறாள்.
- தலைவன் தன் பக்கம் உள்ளவரிடம் சொல்கிறான்.

## எருமைப் பத்து

இந்தப் பத்தில் உள்ள ஒவ்வொரு பாடலின் முற்பகுதியிலும் எருமையின் செயல் உள்ளுறை உவமமாகச் சொல்லப்பட்டுள்ளது.

எருமை

பொய்கையில் இருந்தால் எருமைக்கடா தன்னை மேய்ந்துவிடும் என எண்ணி ஆம்பல் கொடியானது வயலிலுள்ள வெதிர் என்னும் செந்நெல் பயிரைச் சுற்றிக்கொள்ளுமாம். (எருமைக்கடா - பரத்தன், வெதிர் - தலைவன், ஆம்பல் - தலைவி)

எருமைக் கன்று தாயிடம் பால் குடிக்கும் ஊரில் தந்தையோடு வாழும் உம் ஊருக்கு உன்னை மணந்துகொள்ள வருவேன்.
- தலைவன் தலைவிக்குக் கேட்குமாறு சொல்கிறான்.


பச்சை மோர் போல் குளத்தில் ஆம்பல் படர்ந்திருந்தது. அதன் பூக்களை எருமைக்கடா மேய வருவதைக் கண்ட வண்டினம் குளத்து ஆம்பல் பூவை விட்டுவிட்டு வயலில் பூத்திருக்கும் ஆம்பல் பூவுக்குச் சென்றுவிட்டன.
(தலைவன் பரத்தையரிடம் வருவது கண்ட காளையர் அன்றுவிட்டனர்.)

மள்ளரும் மகளிரும் போல எருமை தன் துணையோடு உறங்கும் கழனியில் தாமரை மலரும்.

கயிற்றை அறுத்துக்கொண்டு நெற்பயிரை மேயும் எருமைக்கடா போன்றவன் தலைவன்.
எருமை புரண்ட சேற்றில் ஆம்பல் மலர்வது போல் தலைவியின் நிலை உள்ளது.

பகன்றைப் பூக்களைக் கொம்புகளில் மாட்டிக்கொண்டு வரும் எருமையைப் பார்த்து அதன் கன்றே மருளுமாம்.

ஆற்றுப் புனலில் ஆடும் எருமை அங்கு மிதக்கும் அம்பி போல் தோன்றும். எருமை போல் நீராடும் உன்னை (தலைவனை)த்



தாய்தந்தையர் கடியமாட்டாரோ?
- தோழி கூற்று.

வயலில் படர்ந்த பாகல் கொடியில் மொய்த்துக்கொண்டு முயிறு எறும்பு கட்டியிருக்கும் கூட்டை எருமை மாய்க்கும் ஊர்த்தலைவன் மகளின் தோள்தான் என் நோய்க்கு மருந்து. - தலைவன் கூற்று.

புனலாடும் மகளிர் வைத்துள்ள அணிகலன் முகட்டில் எருமை தன் முதுகை உரசிக்கொள்ளும். அந்த ஊரில் வாழும் பாணனின் யாழ் நரம்பு போல் அவள் இனியவள். - தலைவன் கூற்று.

பகுப்பு: ஐங்குறுநூறு

- த. சிவபாலு -
B.Ed (Hons), M.A

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை,
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புனர்தகனம், கல்பூசை) என்பவற்றை
சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான
ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள்
(பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: 647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com

CARELESS DRIVING
IMPAIRED DRIVING
RED LIGHT
REDLIGHT (CAMERA)
SPEEDING
SEAT BELT
NO INSURANCE
STOP SIGN
SKTHEESAN@GMAIL.COM
TRAFFIC TICKETS
MOTOR VEHICLE ACCIDENT
CRIMINAL MATTERS (SUMMARY)
416- 803- 5296
KALAKALAPPU
THEESAN
MEMBER OF LAW SOCIETY OF UPPER CANADA
SKTPARALEGAL SERVICE
கலகலப்பு தீசன்


# வரலாற்று நகரம் - எர்ணாகுளம் - 2



## கேரளா சுற்றுலா இடங்கள் - 19

ஏப்ரல் 15, 2013 இதழ் தொடர்ச்சி

ஃபோர்ட் கொச்சியின் வரலாற்று சிறப்புமிக்க கட்டிடங்களில் மட்டஞ்சேரி மாளிகை எனப்படும் டச்சு மாளிகையும் ஒன்று. டச்சு மாளிகை என்று சொல்லப்பட்டாலும் இது போர்ச்சுகியர்களால் 17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். பல கொச்சி மன்னர்களால் இந்த மாளிகை உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இங்கு அழகிய மகாபாரதம் மற்றும் ராமாயண ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மட்டஞ்சேரி என்னும் இடத்தில் இக்கோட்டை அமைந்துள்ளது.

இன்னொரு முக்கியமான கோட்டை திருப்புணித்துரா மலைக்கோட்டை. 19ஆம் நூற்றாண்டில் கொச்சி மன்னரால் இது கட்டப்பட்டது. தற்போது இது ஒரு அருங்காட்சியமாக செயல்பட்டுவருகிறது. இங்கு மன்னர்கள் உபயோகப்படுத்திய பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இது கொச்சியிலிருந்து 16 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

எர்ணாகுளத்தில்தான் பெருமாளின் 108 திருப்பதிகளில் ஒன்றான அருள்மிகு லட்சுமணப்பெருமாள் திருக்கோயில் உள்ளது. கேரளாவின் பிரசித்தி பெற்ற பாரதப்புழா நதிக்கரையில் இக்கோயில் அமைந்துள்ளது. கிருஷ்ண பகவான்

**தொடர்ச்சி 23ஆம் பக்கம்**


PRE CONSTRUCTION CONDOS FOR SALE
DOWNTOWN & OTHER AREAS
HARBOUR PLAZA RESIDENCE
90 HARBOUR STREET
YONGE & RICH
25 RICHMOND STREET E.
Price starting
$250K & up
OCCUPANCY
2018
Call For Discount Pricing
RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
Dir: 416.575.5055


கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்
தேர்த்திருவிழா
18-05-2013
சனிக்கிழமை
தீர்த்தம்
19-05-2013
ஞாயிற்றுக்கிழமை
Canada Sri Shanmuganatha Swamy Hindu Temple
"ஸ்தபதியர் திலகம்.", "சிற்பகலை அரசன்", "விஸ்வப்பிரமஸ்ரீ"
திரு. சரவணமுத்து ஜெயராஜா
அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட
50ஆவது சித்திரத்தேர் வெள்ளோட்டம்
16-05-2013
வியாழக்கிழமை,
மாலை 7:00 மணி
பாராட்டு விழா
ஸ்தபதி சிற்பக்கலையரசன் திரு. சரவணமுத்து ஜெயராசா அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட 50ஆவது சித்திரத்தேர் சண்முகநாதசுவாமிக்கு அமையப்பெற்றது மிகவும் சிறப்புவாய்ந்த ஒரு அம்சமாகும்.
உலகம்பூராவும் திரு. ஜெயராசா அவர்களால் உருவாக்கப்பெற்ற சித்திரத்தேர்களில், சண்முகநாதசுவாமிக்கு உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் பொன்விழாக் காணும் மிக அற்புதமான, எங்குமே காணமுடியாத பன்னிரெண்டு வாசல்களைக் கொண்ட அழகிய சித்திரத்தேராகும்.
இவரை கௌரவித்து பாராட்டுத் தெரிவிப்பதற்கு பெரியோர்கள், அந்தணப்பெருமக்கள், ஆலயநிர்வாகத்தினர்கள், ஊடகத்துறையினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், கலைஞர்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
அனைவரும் வாருங்கள்!
வந்து வாழ்த்துங்கள்– எங்கள்
ஸ்தபதி சிற்பக்கலையரசனை!
அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!
33 Melford Drive, Unit 8, Scarborough, ON M1B 2G6
https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple
416-613-1883
www.omshanmuga.org
Finch Ave


SAVE NOW!
GRAND OPENING
SAVE NOW!
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$799 99
NEW
QUEEN BONDED LEATHER BED
$199 99
NEW
SINGLE BEDS STARTING FROM
$99 99
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$2199 99
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$1699 99
10 PC PUB TABLE
$599 99
NEW
5PC DINETTE
$299 99
NEW
7PC DINING
$449 99
NEW
3 PC SET
$ 799 99
NEW
POWER RECLINER + 4 MASSAGER
$ 2199 99
NEW
SECTIONAL
$899 99
AREA RUGS
AREA RUGS STARTING FROM $16.99 (ALL SIZES)
DECORATIVE PIECES & LAMPS
STARTING FROM $29.99
COFFEE TABLES
STARTING FROM $39.99
MATTRESS
Gel | Latex | Memory Foam | Pocket Coil | Posturepedic | Orthopedic
STARTING FROM ONLY
$39 99
FREE DELIVERY
*conditions apply
WE ALSO DO LAMINATE, GRANITE COUNTERS & AREA RUGS
HWY 401
KENNEDY
BRIMLEY
MCCOWAN
LAWRENCE
WE ARE HERE
EGLINTON
MF
MODERN FURNITURE & FLOORING
803B Brimley Raod | Scarborough, ON | M1J 1C9 | 647 748 4443
Mon - Fri: 11am-9pm | Sat: 11am-8pm | Sun: 11am-7pm
AAA MOVING SERVICES | CALL FOR FREE ESTIMATES | 416-732-6931

# A New Project By TRIDEL

## TRIO @ HWY 404 & SHEPPARD




TRIDEL BUILT FOR LIFE
DORSAY

THE NEXT GREAT PHASE AT ATRIA - NORTH YORK'S BEST SELLING COMMUNITY

TRIO AT ATRIA

**For Further information Please Call**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

**"கனவு உங்களுடையு பொறுப்பு எங்களுடையது"**

**5215 Finch Ave, E, #203 - Tel: 416.321.6969**
**Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Independently Owned & Operated

## தூறல்

## வானரன்

# சர்மிளா செயித்

## *Sharmila Seyyid*

முகநூல் மூலமாக பல புதிய எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகங்கள் கிடைக்கின்றன. அவர்களைப் பற்றிய பதிவுகளை விளம்பரம் தொடர்ந்து வெளியிடுகின்றது. அவ்வகையில் மற்று மொரு எழுத்தாளரைப் பற்றிய பதிவு இது. சர்மிளா செயித் (Sharmila Seyyid) கிழக்கிலங்கையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்சமயம் கொழும்பில் வாழ்ந்து வருகின்றார். இவர் தொடர்ச்சியாக பெண்களின் ஒடுக்கு முறைக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றார். ஊடகவியலாளராகவும் செயல்பட்டு வருகின்றார். மும்மொழிகளிலும் புலமை மிக்கவர். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவிகள் செய்துவருகின்றார். இவரது முகநூல் வாசகங்கள் சிந்தனையை தூண்டுகின்றன.

God gave women freedom. We don't need the permission of men to live freely.

இவரது கவிதைத் தொகுப்பான 'சிறகு முளைத்த பெண்' என்ற நூலை பிரபல்யமான காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. பாலியல் தொழிலாளி களுக்கு ஆதரவாகவும் இவர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். பாலியல் தொழிலை இலங்கையில் சட்டபூர்வமாக்கு வதன் மூலம் இத்தொழிலாளர்களுக்கு இன்னல்களில் இருந்து மீள ஓரளவிற்கு வழி பிறக்கும் என்ற இக்கருத்துக்கு எதிராகவும் இவரது பெண்ணிய கருத்துக்களுக்கெதிராக வும் முஸ்லீம் ஆண் எழுத்தாளர்கள், சமூகத் தலைவர்கள் குரலெழுப்பியுள்ளனர். இவரது முகநூலில் இருந்து ஜனநாயகமும் பெண்ணியமும் மேற்கத்தேய கலாசாரங் களாம். இந்த சிந்தனையை பணத்திற்கும் மேற்கின் மாயைக்கும் ஆட்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களே விதைக்கின்றன என்றும் குற்றம் சொல்லப்படுகின்றது. இஸ்லாம் ஜனநாயத்திற்கு விரோதமான மார்க்கமா? பெண்ணியம் மேற்கத்தேய கலாசாரமென்றால் இஸ்லாம் பெண்ணியத்திற்கு எதிரானது என்றால் அது ஆணாதிக்கத்திற்கான மார்க்கமா? பெண்ணியம் என்ற சொல்லைக் கண்டாலே ஆண்கள் எதற்கு மிரள்கிறார்கள் என்று தெரியவில்லை. முக்கியமாக இஸ்லாமிய சகோதரர்களுக்கு இந்த சொற்பிரயோகம் "அலர்ஜி"யாகவே இருக்கிறது? இஸ்லாம் தான் பெண்களுக்கு உரிமைகளை வாரி-வழங்கிய மகத்தான மார்க்கம் என்று சொல்கிற நாம் அதை ஒரு பெண் முழுமையாக செயற்படுத்தும்போது மிரள்வதேன்? ஜனநாயகமும், பெண்ணியமும் குர்ஆனில் ஓதுவதற்கு மாத்திரமா?

ஆண்கள பற்றியும் முகநூல் பற்றியும் இவர் வெளியிட்ட மற்றொரு கருத்தும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது.

கருத்து முரண்பாட்டை சிலர் வெறுப்பாக மாற்றிக்கொண்டு தாக்கத் தொடங்குகின்ற னர். இதற்கு முகநூலும் விதிவிலக்கல்ல என்றே எண்ணத் தோன்றுகின்றது. என்ன கருத்து சொல்லப்படுகின்றது ஏன் சொல்லப்படுகின்றது என்ற அடிப்படைகளை விளங்கிக் கொள்வதைவிடவும் இதை யார் சொல்கிறார்கள் என்பதில்தான் நண்பர்கள் ஆர்வம் காண்பிக்கின்றனர். பெண் என்றால் குழந்தைகள் பற்றியும் சமையல் அலங்காரம் பற்றியும் மிஞ்சிப் போனால் கவிதை வாசிப்பு அனுபவம் குறித்தும் பதிவு செய்யலாம் என்ற வரையறையை சில ஆண்கள் (எழுதப்படாத விதியாக) ஏற்றுக் கொண்டுள்ளனர். போர், அரசியல், ஜனநாயகம், வன்முறை சார்ந்த கருத்துக்களை பெண் குறிப்பிடும்போது நியாய நியாயமற்ற தன்மைகளுக்கு அப்பால் பெண் என்பதற்காகவே சில ஆண்கள்



கச்சை கட்டி கொண்டு நிற்கிறார்கள். குறிப்பிட்ட பதிவிற்கும் அது தொடர்பான கருத்துக்கும் அப்பால் சென்று தனிப்பட்ட முறையில் உளவியலை மையப்படுத்திய விதமாக கேலி செய்யும் தோரணையில் கமண்ட் அடிக்கிற அயோக்கியத்தனத்தை வெட்கமில்லாமல் செய்து நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிற கோழைகள் நிறையப் பேர் முகநூலில் உலா வருகின்றனர்.

தமது நிலைப்பாடு நியாயமற்றது என்று தெரிந்ததற்கு பின்னரும் பெண்ணிடம் கருத்தொற்றுமைப்படுவதா என்ற தாழ்வுச் சிக்கலில் அவஸ்தைப்படும் உளவியல் நோயாளிகளை என்னென்பது....? அனாருக்கு பின்னராக இலங்கைத் தமிழ் பெண் எழுத்தாளர் ஒருவர் மிகவும் துணிச்சலாக கருத்துக்களை கூறுவதுடன் சமூக பிரச்சினைகளுக்கெதிராகவும் குரல் கொடுக்கின்றார். இதுவரை இணையத் தளத்தில் வெளியாகியுள்ள கவிதை ஒன்று இங்கே நன்றியுடன் மறுபிரசுரமாகின்றது. சர்மிளா செயித் தொடர்ந்து சமூக இலக்கிய தளத்தில் செயற்பட விளம்பரம் வாழ்த்துகின்றது.

### நான் மழை

காணாமல் போனோரின் பட்டியலில் என்
பெயர் கிடையா
இனி சேர்க்கவும் இயலா
இனந்தெரியாதோர், வெள்ளை வான்
எல்லாம் ஒன்றே எனக்கு
அரசாங்கத்தின் உத்தரவுகளுக்கோ
எதிர்கட்சிகளின் அறிக்கைகளுக்கோ
அச்சமில்லை, அடங்கிப்போகவும் மாட்டேன்
கைது செய்தென்னைக் கட்டுப்படுத்தவோ
தேசதுரோக குற்றப்பெயரில் என்னை
நீதிமன்றில் நிறுத்தி தண்டனையளிக்கவோ
முடியா
விசாரணைக்கழைத்தென்னை
பூட்சுகளால் மிதிப்பது, நகங்களைப் பிடுங்கி
நாடியுடைய அடிப்பதெலாம் என்னிடம்
நடக்கா
தலைகீழாய் கட்டித் தொங்கவிட்டென்னை
இடித்தும் இடிக்காததுமான மிளகாய்
சாக்கினுள்
முகத்தை புதைப்பது,
ஆண்குறியின் முன்தோலை சீவிப் பிதுக்கி
சிரிப்பது
இது எதையும் நிகழ்த்த முடியாதென்னிடம்
பதின்மூன்றாம் திருத்தமாகட்டும்
நிறைவேற்று அதிகாரமும் ஆகட்டும்
என்னிடம் பிடுங்க முடியாதெதுவும்
நான் மழை
ஆட்டுத்தொழுவத்திலும் விழுவேன்
அரச மாளிகையிலும் விழுவேன்
என்னைக் கண்டு ஒதுங்கியே ஆகனும்.
ஆளுநர், அரசாங்க தலைவர் அனைவரும்
குடைபிடித்தாகணும் எனக்கு
நான் மழை
வேறுபாடின்றி நனைப்பேன்.

# வரலாற்று நகரம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

துவாரகையில் ராமன், லட்சுமணன், பரதன், சத்ருகனன் என்ற நான்கு விக்ரகங்களை பூஜித்து வந்தார். ஒரு முறை இப்பகுதி தண்ணீரில் மூழ்கிய போது, வாக்கேல் கைமல் முனிவர் என்பவரிடம் இந்த விக்கிரகங்கள் கிடைத்தன. அன்றிரவு இவரது கனவில் தோன்றிய பகவான், இந்த விக்கிரகங்களை பாரதப்புழா ஆற்றின் கரையோர தலங்களில் பிரதஷ்டை செய்யக் கூறினார். அப்படி பிரதிஷ்டை செய்யப்பட்ட தலங்கள்தான் திருச்சூர் மாவட்டம் திருப்பறையார் ராமர் கோயிலாகவும், இரிஞ்சாலக்குடாவில் பரதன் கோயிலாகவும், பாயமல்லில் சத்ருக்கன் கோயிலாகவும், எர்ணாகுளம் திருமூழிக்களத்தில் லட்சுமணப்பெருமாள் கோயிலாகவும் அமைந்துள்ளது என்கிறது தலபுராணம்.


ராமன் வனவாசம் செல்லும்போது சித்திர கூடத்தில் தங்க நேரிட்டது. அப்போது அயோத்திக்கே ராமனை மீண்டும் அழைத்து செல்ல பரதன் அங்கு வந்தான். இதைக்கண்ட லட்சுமணன், ராமனுடன் போர் செய்யவே பரதன் வருவதாக நினைத்து, அவனை கொல்ல முயற்சிக்கிறான். இது தவறு என்பதை உணர்ந்த லட்சுமணன், தவறுக்கு மன்னிப்பு வேண்டி இத்தலத்து பெருமாளிடம் அடிபணிந்து நின்றதாகவும், அப்போது பரதனே வந்து லட்சுமணனை ஆரத்தழுவி இன்சொல் கூறியதாகவும், இதனால் இத்தலம் 'திருமொழிக்களம்' ஆனதாகவும் ஐதீகம். எனவே, லட்சுமணனும் பரதனும் சேர்ந்து வழிபட்ட தலமாகும் என்ற பெருமை இக்கோயிலுக்கு உண்டு. லட்சுமணன் இத்தலத்திற்கு கோபுரம், மண்டபம் போன்றவற்றை கட்டியதுடன் பல திருப்பணிகளும் செய்துள்ளான் என்கிறார்கள். இத்தலம் குறித்து இன்னொரு வரலாறும் சொல்கிறார்கள். முன்னொரு காலத்தில் ஹரித மகரஷி என்பவர் இத்தலத்தில் பெருமாளை குறித்து தவமிருந்தார். இவரது தவத்தில் மகிழ்ந்த பெருமாள், 'வேண்டும் வரம் கேள்' என்றார். அதற்கு மகரிஷி பெருமாளே! இந்த உலக

தொடர்ச்சி 29ஆம் பக்கம்




AMBIHA SILK (Fancy Jewellery)

FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர
Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம்,
மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces
வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top
இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



அழையுங்கள்: 416.297.5261

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

‘அது தம்பி எல்லாமாய் ஒரு ஆயிரத்து எட்டு டொலர் எண்டாலும் தேவைப்படும். வில்லங்கமான பூசையாக இருக்கிறதாலை செலவும் கூடத்தான்’ சிவா பேசாமல் மேசையில் கைவிரல்களினால் கீறிக் கொண்டு இருந்தான்.


‘செய்யத்தான் வேணுமா? பாதர் அருள் கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்? எனது பக்தி வைராக்கியம் பற்றி என்ன நினைப்பார்?’ சிவாவின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட நீலவேணி தவிப்புடன் கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

‘இதையே உங்கடை வீட்டிலை செய்யிறதெண்டால் எழுநூத்தி இரண்டு டொலர் காணும்’ என்ற சாமியார் ‘இதுக்கெண்டு தட்சணை ஒண்டும் வேண்டாம். ரத்தக் காட்டேரியை துரத்தினாலே எனக்குப் போதும்’

சிவா மனம் மாறினான். ‘இல்லை ஐயா! நான் அவ்வளவு காசு கொண்டு வரேல்லை. அதுதான்’..”

‘அது பரவாயில்லை தம்பி! பூசை செய்யப் போறியள் எண்டால், இப்ப கொஞ்சத்தைத் தந்திட்டுப் போங்கோ. மிச்சத்தை நாளை நாளையிண்டைக்கிடையில் தந்தாலும் போதும்.’ என்றார் சாமியார்.

நீலவேணி ‘சரி ஐயா. அப்பிடிச் செய்வோம். இப்ப ஒரு நூறு தாறோம். அவ்வளவுதான் கையிலை இப்ப இருக்கு. மிச்சத்தை நாளையிண்டைக்கு கொண்டு வந்து தாறோம்’.





**TUTORING - ALL AGES & SUBJECTS**

*Including up to P.H.D single or group classes. Specialty with children with learning problems (ADD, ADHD, Aspergers, Autism) Punctuation, grammar, essays, civics, reading, history, science, French & Math special group rates. Also citizenship classes, Guitar classes.*

**Contact: 416.493.6540**


‘சரி உங்கடை வசதிப்படி செய்யுங்கோ:’ என்றவர் ‘அப்ப எங்கை பூசையை வைப்போம்.’ என்றார்.

‘எங்கடை வீட்டிலை கொஞ்சம் வசதியில்லை, ஐயா!. பூசையை இஞ்சை வைச்சிட்டு, கடை-சிநாள் வீட்டிலை சாந்தி செய்யலாம் எண்டு’ சிவா முடிக்கு முன்னர் சாமியார்,

‘ஓமோம். அப்பிடிச் செய்தால்தான் உங்களுக்கு வசதி. அப்ப 1008 டொலர்.....” எனச் சாமியார் இழுக்க,

◊ **கனி** ◊

‘காசு பெரிசில்லை, மனிசருக்கு நிம்மதிதான் வேணும்’.

‘ஓம் பிள்ளை’
கைக்கடிகாரத்தைப் பார்த்த சிவா, நீலவேணியைத் திருப்பிப் பார்த்து விட்டு,

‘நேரமாகுது. அப்ப நாங்கள் போயிட்டு வாறோம்.’

‘நல்லது. இண்டைக்கே பூசைக்கு ஆயத்தங்கள் செய்யிறேன். ரத்தக் காட்டேரி விசயம், எவ்வளவுக்கு எவ்வளவு கெதியாய் செய்யிறோமோ, அவ்வளவுக்கு நல்லது’ என்றவர்,

‘சாயந்தரம் ஒரு ஏழு மணிபோலை வந்து பூசையைப் பாத்திட்டு போங்கோ’ என்றார்.

நீலவேணியும் சிவாவும் விடை பெறுவதற்கு ஆயத்தமாக இருக்கைகளில் இருந்தும் எழுந்தார்கள்.

‘இண்டைக்கு வெள்ளிக்கிழமை. பூசையை தொடங்கிறதுக்கு நல்ல நாள். இண்டைக்கு சாயந்தரம் தொடங்கினேனெண்டால், வாற வியாழன் வரையிலும் இஞ்சை பூசையை வச்சிட்டு, அடுத்த வெள்ளி சாயந்தரம் ஒரு ஏழு எட்டு மணி போலை உங்கடை வீட்டிலை பூசை செய்து எல்லாத்தையும் முடிக்கலாம்’: என்றவர்

‘உங்கடை விபரங்களையும் தந்திட்டுப் போங்கோ’ என்றார்.

நீலவேணி கைப் பையைத் திறந்து ஐந்து இருபது டொலர் தாள்களை எடுத்தாள். எடுத்தவள் இருகைகளினாலும் பணத்தை சாமியாரிடம் கொடுக்க,
‘உதிலை வை பிள்ளை’ என்றவர், மேசையில் இருந்த ஒரு வெள்ளித் தட்டைக் காட்டினார்.

‘காசு பெரிசில்லை. எனக்குத் தெரிஞ்சதாலை எங்கடை ஆக்கள் நிம்மதியாய் இருக்க வேணும். இதெல்லாம் பூசைக்கான தேவையாக இருக்கு. எல்லாம் காசுக்குத்தானே இஞ்சை வாங்கலாம்.’

நீலவேணி பணத்தைத் தட்டில் வைக்கவும்,

குறிப்பெழுதும் புத்தகம் ஒன்றையும் பேனா ஒன்றையும் அவளிடம் நீட்டிய சாமியார், ‘உங்கடை விபரங்களையும் இதிலை குறிச்சு தட்டிலையே வை பிள்ளை.’ என்றார்.

வாங்கியவள் சாமியாரைப் பார்க்க, ‘அஞ்சு நிமிசம்தான். இருந்து எழுது பிள்ளை’ என்றவர், ஒவ்வொன்றாய் தனக்கு தேவையான தகவல்களைக் கேட்க,
நீலவேணி எழுதிக் கொடுத்தாள்.

சிவா அன்று அரை மணித்தியாலம் வேலைக்குத் தாமதமாகவே சென்றான்.

இன்னமும் வரும்


**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**

**www.vlambaram.com**

**www.tamilvanakkam.com**

# சார்பியல் - 21

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

ஒளிக் கூம்பினைக் கொண்டு என்னவெல்லாம் தெளிவுபடுத்துகிறார்கள் எனப் பார்ப்போம். முப்பரிமாணப் புள்ளியில் குறிப்பிட்ட கணத்தில் உண்டான ஒளியின் துடிப்பின், அதாவது நிகழ்ச்சியின் ஒளிக்கூம்பு பற்றிய விளக்கத்தைக் கண்டு கொண்டோம். பேரண்டத்திற் பல புள்ளிகள் உள்ளனவல்லவா. ஒவ்வொன்றிலும் நேரம் இணைந்திருப்பதால், அவற்றில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கும். இதன்வழியிற் பார்க்கையில், நாற்பரிமாண வெளியின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றுமே தத்தமது ஒளிக் கூம்புகளைக் கொண்டிருக்கும். கூம்பு ஒரு முப்பரிமாண வடிவம். எனவே நாற்பரிமாண

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வெளியின் ஒரு நிகழ்ச்சியில் இருந்து ஒளியானது பரவுவது முப்பரிமாணக் கூம்பு வடிவது என்பது எங்களுக்குத் தெரிகிறது.

இதன் அமைப்பின்படி, ஒரு நிகழ்ச்சியின் ஒளிக் கூம்பானது மூன்று பகுதிகளைக் கொண்டிருப்பது தெரிகிறது. அந்த நிகழ்ச்சியினை P என அடையாளமிடுவோமாயின். ஒன்று P யின் இறந்தகாலக் கூம்பு, இது நிகழ்ச்சி P யைப் பாதிக்கக் கூடிய இறந்தகால நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. எதுவுமே ஒளியின் வேகத்தை மிஞ்சிட முடியாது என்பதால், இறந்த காலத்தில் P யினைப் பாதிக்கக் கூடியதான, ஒளியின் வேகத்திலோ அல்லது அதனிலும் குறைந்த வேகத்தை உடையனவாக உள்ள எல்லா நிகழ்ச்சிகளினதும் தொகுப்பாக இந்த இறந்த காலக் கூம்பு இருக்கும். இன்னொன்று எதிர்காலக் கூம்பு, இது எதிர்காலத்தில் நிகழ்ச்சி P யானது எந்தெந்தப் புள்ளிகளில் (உள்ள நிகழ்ச்சிகளில்) பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதனைக் காட்டி நிற்கிறது. இங்கும் கூட ஒளியின் வேகமும், அதற்குக் குறைந்ததான வேகமும் கொண்டு செல்லும் சமிக்கைகளே P யின் எதிர்காலக் கூம்பிற்குள் இருக்கும். மூன்றாவதாக இன்னொரு பகுதி, எதிர்காலக் கூம்புக் குள்ளோ அல்லது இறந்தகாலக் கூம்புக் குள்ளோ அகப்படாத பகுதி. இப்பகுதியில் உள்ள புள்ளிகளில் P யினால் பாதிப்பு ஏதும் நிகழப் போவதில்லை. அதாவது, நிகழ்ச்சி P யினை அப்பகுதியானது அந்த நேர அலகில் அறியப் போவதில்லை. ஏனெனில் ஒளிக் கூம்பிற்கு வெளியிலே அப்புள்ளிகள் இருப்பதனால், ஒளியினை விட வேகமாக எந்தவொரு பொருளுமோ அல்லது சமிக்கையோ செல்ல வல்லதல்ல என்பதால் இப்பகுதியில் உள்ள புள்ளிகளுக்கு, P பற்றிய எந்த விபரங்களும் கிடைக்கப்பெறாது.


இவற்றினை பின்வரும் எளிய எடுத்துக் காட்டில் இருந்து பார்ப்போம். கதிரவனின் ஒளி எமது புவியை வந்தடைய கிட்டத்தட்ட எட்டு நிமிடங்கள் எடுக்கின்றது. இதன்படி, கதிரவனில் இருந்து ஒளிக்கதிர் புறப்படுகையில் எமது புவியானது அவ்வொளியின் ஒளிக் கூம்பினுள் இல்லை. அதனால் கதிரவன் பற்றிய எந்தச் செய்தியும் எமக்குக் கிட்டாது. நேரம் செல்லச் செல்ல எட்டு நிமிடத்தின் பின் எமது புவியானது கதிரவனின் ஒளிக் கூம்பினுள் வர, எட்டு நிமிடங்களின் பின்னராக கதிரவனில் இருந்து புறப்பட்ட ஒளி எங்களுக்குத் தெரிய கதிரவன் பற்றிய விபரத்தை, கதிரவனின் வெளிச்சத்தை எங்களால் அறிந்து கொள்ள முடிகிறது. கதிரவன் தொடர்ந்து ஒளிக்கதிர்களைச் செலுத்திக் கொண்டே இருப்பதால் தொடர்ந்து, அடுத்தடுத்த நிகழ்ச்சிகளினால் ஆன ஒளிக் கூம்புகளுக்கள் புவி இருப்பதினால், புவிக்குத் தொடர்ச்சியாக கதிரவனின் ஒளிக்கதிர்கள் கிடைக்கின்றன.

ஏதோ ஒரு காரணத்தால் கதிரவன் சடுதியில் தனது ஒளிவழங்கும் இயல்பை இழந்து இருண்டு விடுகிறான் எனக் கருதுவோம். அப்பொழுது கதிரவனில் இருந்து ஒளிவருவது நின்றுவிடும். அந்த நிகழ்ச்சியானது உடனடியாக எமகுத் தெரியாது. ஏனெனில் அந்த நிகழ்ச்சியின் ஒளிக் கூம்பின் வெளியிலேயே புவி அப்பொழுது இருக்கும். கதிரவன் இருண்ட பின்னரும் புவிக்கு வெளிச்சம் கிடைத்துக் கொண்டுதான் இருக்கும். கதிரவன் இருண்ட நிகழ்ச்சியின் எதிர்கால ஒளிக்கூம்பின் உள்ளே புவியானது எட்டு நிமிடங்களின் பின்னரே நுழையும். அப்பொழுதுதான் நாம் இருட்டினுள் வர, கதிரவன் இருண்டு விட்ட விபரம் தெரியும். மில்லியன் ஒளியாண்டு தொலைவில் உள்ள விண்மீன் ஒன்றின் எதிர்கால ஒளிக்கூம்பினுள் எமது புவியானது மில்லியன் ஆண்டின் பின்னரே வரும். அதனால் அவ்விண்மீன் மில்லியன் ஆண்டு முன்னராக வீசிய ஒளியை இப்பொழுதுதான் காண்போம். எனவே நாம் இப்போது காண்பது மில்லியன் ஆண்டு முன்னராக இருந்த விண்மீனைத்தான். அல்பா சென்சுரி என்பது நாலரை ஒளியாண்டு தொலைவில் உள்ள விண்மீன். எமக்கு அருகில் உள்ள விண்மீன். அல்பா சென்சுரி விண்மீன் வெளிவீசம் ஒளியின் எதிர்காலக் ஒளிக்கூம்பினுள் நாலரை ஆண்டு காலத்தின் பின்னரான பகுதிக்குள்ளேயே புவியிருப்பதால், எப்பொழுதும் நாலரை ஆண்டு பழமையான அல்பா சென்சுரி விண்மீனையே நாம் காண்கிறோம்.


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca







# BASEMENT RENT

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
647.707.6344 / 905.471.2432

---

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, TTC, YRT, school, elementary school, mall. Avail. June 01, 2013.
905.471.7667 / 647.338.9831

---

**NEILSON & FINCH**
1 Bedroom + attached kitchen, living room. Close to all facilities. Small family preferred. Avail. June 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.891.5515

---

**NEILSON & MCLEVIN**
Bsmt Bedrooms for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, Malvern mall, school. No smoking. Avail. immediately.
416.724.8727 / 647.280.6163

---

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, cable. Close to bus, shopping, infront of Walmart. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.471.2381

---

**14TH AVE. & 9TH LINE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
905.554.4783 / 416.918.1025

---

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.908.1250

---

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
**905.209.9212 / 416.562.5113**

---

**MCLEVIN & NEILSON**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.971.6959

---

**MCCOWAN & DENNISON**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Very close to Mccowan Road. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.824.8693

---

**LAWRENCE & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Parking, central A/C. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.1430

---

**LAWRENCE & ELLESMERE**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.6482

---

**MARKHAM & STEELES**
1 bedrooms bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $600. தொடர்புகளுக்கு: 416.735.5623

---

**TAPSCOTT & FINCH**
1 bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, full washroom, living room, laundry. Close to bus stop, Temple, stores. No smoking & No pets. Avail. immediately.
416.460.3703 / 416.292.4222

---

**MORNINGSIDE & MCNICOLL**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt avail.
647.346.8148 / 647.531.6176

---

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. 2 car parking, laundry, living room, internet, cable. Close to all facilities. Avail. immediately. Working couple preferred.
தொடர்புகளுக்கு: 416.930.1171

---

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet o all facilities. Avail. immediately. Couples preferred.
905.471.1985 / 416.220.8716
(Call after 5:00pm)

---

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
647.991.4437 / 905.205.0595

---

**KENNEDY & FINCH**
1 Bedroom walk-out bsmt Apt. for rent. Sep. entrance. Safe zone neighborhood. Utilities included. Avail. immediately.
647.706.5851 / 416.321.9969

---

**NEILSON & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Pentecost Christian.
தொடர்புகளுக்கு: 416.831.8549

---

**KENNEDY & EGLINTON**
1 Bedroom + Study room for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.0853

---

**MORNINGSIDE & STAINES**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to all facilities. Sep. land line, internet, cable. Avail. June 01, 2013.
416.299.7876 / 647.857.9463

---

**MCCOWAN & HIGHGLEN**
Newly renovated1 Bedroom + den bsmt for rent. Open kitchen, sep. entrance. Close to TTC, mall, bank. Avail. immediately. No smoking. Small family or couple preferred. Rent $800.
905.201.8922 / 647.286.8922

---

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities including. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
905.201.4812 / 647.768.1499

---

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt fo rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.519.2899 / 416.303.6589

---

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.726.9275

---

**LAWRENCE & MORNINGSIDE**
Newly renovated 1 bedroom bsmt for rent. New appliance, parking & central A/C. Close to TTC, school, mall, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.1430

---

**MARKHAM & STEELES**
Newly renovated 2 bedroom bsmt for rent. Close to TTC, YRT, school, mall. Avail. June 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.587.6921

---

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping.
தொடர்புகளுக்கு: 416.284.6226

---

**CROWTRAIL & TAPSCOTT**
2 Bedroom bungalow house bsmt for rent. Close to TTC, mall, school. Avail. immediately. (Leave the message)
தொடர்புகளுக்கு: 647.391.3963

---

**WARDEN & HWY 401**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. Anytime. Ladies or old people preferred.
தொடர்புகளுக்கு: 416.386.2297

---

**MORNINGSIDE & SWELLS**
Newly renovated 2 bedroom bsmt for rent. Avail. immediately. Sep. entrance, laundry, parking. Close to TTC, mall, school.
647.893.7278 / 647.706.7832

---

**MEADOWVALE & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to ttc, mall, Scarborough University.
தொடர்புகளுக்கு: 647.344.0585

---

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred. Avail. June 01, 2013.
416.464.4207 / 416.431.6349

---

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, high school. Avail. immediately.
905.471.2987 / 416.666.3971

---

**MORNINGSIDE & MCNICOLL**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, school. All bills inclusive. No smoking & No pets. Avail. Anytime.
416.844.9571 / 647.477.1164

---

**NEILSON & FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Eraa super market. Avail. June 01, 2013.
தொடர்புகளுக்கு 416.299.3919

---

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.303.4172 / 416.399.1633

---

**MARKHAM & BUR OAK**
2 Bedroom bsmt for rent. Close to Go station, TTC. Rooms also available.
தொடர்புகளுக்கு: 905.472.8167
call after 3:00 pm

---

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

---

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.894.2845

---

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. New appliances, laminated floor. No pets. Rent $900. Utilities included.
தொடார்புகளுக்கு: 416.917.0557

---

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt + 1 Room for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.7172

---

**MORNINGSIDE & NIGHT STAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Family preferred. Avail. immediately.
647.990.4584 / 416.335.9883

---

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. immediately.
647.909.0475 / 416.800.6404

---

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, school. Avail. immediately. (Call after 6:00 pm)
தொடர்புகளுக்கு: 416.566.2601

---

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
416.846.0190 / 416.880.8585

---

# TUITION

## KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**
ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

மேலும் பக்கங்கள் 27, 28

# ROOM FOR RENT

### VICTORIAPARK & ELLESMERE
1 Bedroom for rent in an apt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.713.6268

### MARKHAM & STOUFFVILLE
Hospital க்கு மிக அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு விடப்படும். மிக அருகாமையில் YRT Service போக்குவரத்து வசதியும் உண்டு. அத்தோடு privet குளியலறை laundry. ஆகிய சகல வசதிகளுடனான அறைகள் வாடகைக்கு விடப்படும் தொடர்புகளுக்கு: 905.294.4214

### MARKHAM & SHEPPARD
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

### WARDEN & FINCH
Full furnished 1 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school, Seneca college, etc. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.493.6540

### WARDEN & FINCH
1 Bedroom for rent in condo. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.712.5042 (Leave the message)
647.477.1264

### MORNINGSIDE & FINCH
1 Bedroom for rent. Laundry, washroom. Avail. Anytime. Ladies preferred.
416.930.3713 / 416.299.8124

### FINCH & MIDDLEFIELD
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $650. Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

### MARKHAM & ELLESMERE
Rooms for rent in main floor. 5 Min. to Woburn, Centennial college, TTC. Living space, shared kitchen, dining, laundry.
தொடர்புகளுக்கு: 416.817.8226

### NEILSON & MCLEVIN
2 அறைகள் கொண்ட Condo.வில் ஒரு பெரிய அறை வாடகைக்கு உண்டு. Attached washroom, laundry, parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.896.8388

### KENNEDY & LAWRENCE
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

### MORNINGSIDE & STAINES
1 Room for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime. வயதானவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.832.2065

### LAWRENCE & PHARMACY
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. No smoking. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

# ROOM FOR RENT

### MORNINGSIDE & MCNICOLL
2 bedroom for rent in amain floor. Parking, laundry. Close to all facilities. 2 Bedroom bsmt also available.
தொடர்புகளுக்கு: 416.837.9441

### PHARMACY & FINCH
1 Bedroom for rent - Main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
416.201.1222 / 416.299.4895

### MCCOWAN & LAWRENCE
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.294.2212 /416.837.9797
after 6:00 pm

### MIDDLEFIELD & MCNICOLL
மேல்தளத்தில் 1 படுக்கை அறை வாடகைக்கு உண்டு. Kitchen, living room, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.803.2587

### MIDLAND & EGLINTON
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

### MORNINGSIDE & SHEPPARD
***Morningview Trail***
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

### BIRCHMOUNT & MCNICOLL
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.783.4876

### KEELE & EGLINTON
Rooms for rent. Parking, laundry. Close to TTC, York University, no frills. 1 bedroom bsmt with sep. entrance also available. Avail. immediately.
416.658.1144 / 416.302.3070

### NEILSON & FINCH /MORNINGSIDE
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. 2 & 3 bedrooms condo. for rent.
647.361.9527 / 416.825.9717

# CONDO. RENT OR SALE

### MARKHAM & SHEPPARD
2 Bedroom + 1 washroom condo. for rent or sale. Cable free. Close to all facilities. Avail. Anytime
தொடர்புகளுக்கு: 647.409.5176

### BRAND NEW HOME FOR PRIVATE SALE STOUFFVILLE 10TH LINE & HOOVERPARK
4 Bedroom house for sale. 3 Washroom, double garage.House No 06. ஜூன் மாதம் closing செய்யலாம். $539,000.
தொடர்புகளுக்கு: 416.305.5006

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

### NEILSON & SHEPPARD
3 Bedroom house for rent. 2 full washroom, Parking, cable, washer & dryer. Close to TTC, school & mall. Ladies or elders preferred. Avail. June 01, 2013.
416.850.1565 / 416.825.3877

### MCCOWAN & LAWRENCE
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. June 01, 2013.
416.902.1758 / 416.724.4752

### NEILSON & SHEPPARD
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.708.8513

### KENNEDY & ELLESMERE
3 Bedroom house for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. July15, 2013.
தொடர்புகளுக்கு: 416.720.7561

### KENNEDY & EGLINTON
3 Bedroom house for rent. Parking, laundry. Close to Kennedy & Eglinton, school, mall. Convenience location. Front & Side garden. Family preferred.
416.264.3899 / 416.285.4695

### SCAR.GOLF CLUB & LAWRENCE
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Bsmt உம், அறைகளும் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.454.9986 / 416.219.4936

### MARKHAM & MCLEVIN
3 Bedroom + 2 Bedroom bsmt house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. July 01, 2013.
416.298.7375 / 416.388.9478

### DIXIE & SANDLEWOOD
3 Bedroom + 3 Washroom house for rent. Rent $1475. Close to all facilities. Avail. June 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.816.1500

# CONDO FOR RENT

### MCCOWAN & EGLINTON
2 Bedroom + Den condo. for rent. 2 Full washroom. Corner unit. Parking, utilities included. Pool, garden, party hall. Close to school, Kennedy station.
647.854.6521 / 416.300.4102

## தமிழ் அச்சு வடிவமைப்பு
தமிழ் அச்சுவேலைகள், வடிவமைப்பு தமிழ் மொழியில் வாழ்த்து பா, பாராட்டுப் பத்திரம், நிகழ்ச்சி நிரல், விளம்பரம், துண்டுப்பிரசுரம், விழா மலர், புத்தகம், நினைவு மலர், அறிவித்தல், என்பவை வடிவமைத்து, உரிய நேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு: 647.938.7750

## தையல் வகுப்புக்கள் தையல் *Orders*
### MARKHAM & LAWRENCE
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

# JOB JOB JOB
நீங்கள் துப்பரவு செய்யும் அலுவலகம் அல்லது Daycare போன்ற இடங்களை நீங்கள் விடுமுறையில் செல்லும்போது அனுபவம் மிக்கவரால் துப்பரவு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.333.0456

# JOB JOB JOB
### YONGE & EGLINTON
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள Restaurant ஒன்றிற்கு Full-time or Part-time வேலைக்கு ஆண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.832.6095

# S R Janitorial Services
Bank Cleaning. Flexible time. (After bank Closed) Only Couple.
தொடர்புகளுக்கு: 416.879.3283

### KEELE & STEELES
பகுதியில் Body works & painting வேலைக்கு ஆள் தேவை. தொடர்புகளுக்கு
416.667.1626 / 647.831.9005

# JOB JOB JOB
### PIZZAVILLE STOUFFVILLE
Experienced pizza maker wanted. Top salary
தொடர்புகளுக்கு: 416.953.4933

## AUSTIN TEXAS - USA
2 வயது குழந்தையை வீட்டுடன் இருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 647.707.5416

### MORNINGSIDE & SHEPPARD
1 வயது ஆண்குழந்தையை வீட்டுடன் இருந்து பராமரிப்பதற்கு பெண்மணி ஒருவர் தேவை.
647.909.0475 / 416.800.6404

# JOB JOB JOB
**Scarborough** வில் அமைந்துள்ள உணவகத்திற்கு ரொட்டி செய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

# JOB JOB JOB
Flooring company ஒன்றிற்கு receptionist வேலைக்கு ஒருவர் தேவை. Car ஓடத் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்க வேண்டும். Part-time.
www.idealstairs.ca

## NICKSAN MAKEUP ARTIST
Makeup, hairstyle, saree wearing for wedding party, birthday party & more special events.
தொடர்புகளுக்கு: 416.293.1981

## காணி விற்பனைக்கு
உரும்பிராயில் ஒரு வீடும் 13 1/2 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 647.248.7152

## WAREHOUSE FOR RENT
### MORNINGSIDE & SHEPPARD
2300 Sq.ft ware house for rent. Including 400sq.ft. Place or showroom also had truck. Next to home depot. Rent $1950.
தொடர்புகளுக்கு: 416.569.4065

மேலும் பக்கங்கள் 26, 29

# வாழ்க அன்னையர் சூழ்க இன்பம் விரிந்தே!

பத்துத் திங்கள் சுமந்தாள்
பாசம் பொங்க வளர்த்தாள்
நித்தம் முத்தம் கொடுத்தாள்
நீண்ட வாழ்வு பெறவே
அத்தன் பாதம் தொழுதே
ஆளும் அன்பைப் பொழிந்தாள்
மெத்தை மீது படுத்தி
மேன்மைப் பாடல் வடித்தாள்




வண்ண ஆடை தெரிந்தாள்
வல்ல ஊணும் தந்தாள்
கண்ணும் நீரை வடியாக்
காட்சி காணத் துடித்தாள்
மண்ணில் ஆட மகிழ்ந்தாள்
முள்கல் காயம் தவிர்த்தாள்
எண்ணும் வல்ல எழுத்தும்
ஏற்றம் கொள்ள அளித்தாள்

நல்ல பாதை நடத்தி
நாளும் மெய்யைப் புகட்டி
வல்வோன் பாதம் தொழுது
வாழும் தன்மை உணர்த்தி
கல்வி கேள்வி தெளித்து
காதல் கொண்ட தமிழை
சொல்ல வைத்துச் சுவைத்தாள்
சூழ்க இன்பம் விரிந்தே!

- மீரா இராசையா

# அம்மா



அடிசிற்கு இனியவளே
அன்புடை மாதே என்னை
அடிவயிற்றில் ஐரெண்டு மாதங்கள்
அள்ளி சுமந்தவளே அம்மா

மடிமீது கிடத்தி வைத்து
மனமுவந்து நீ எனக்கு
மடிதந்து பாலூட்டிய
மதிப்புக்குரியவளே தாயே
அகம் மகிழ முகம் மலர
அள்ளி அணைத்து எனக்கு
அன்பு காட்டிய என்
ஆருயிரே அம்மா
அகர முதல் எழுத்துக்களை எனக்கு
அடி எடுத்து சொல்லித் தந்து
அகிலத்தை அறிய வைத்த
அன்னை தானே நீ எனக்கு

பள்ளிக்கு செல்ல வைத்து
பகுத்தறிவை பெற வைத்து
பத்தும் பலதையும் என்னை
படிக்க வைத்தவளே அம்மா
வருத்தம் ஏதும் வந்துவிட்டால்
வருந்தி வருந்தி என் அருகில்
வந்திருந்து மேல் தடவி
வைத்தியம் பார்த்தவளே தாயே
தெய்வங்கள் பல இருந்தாலும்
தெய்வத்துள் தெய்வமென எனக்கு
கண்கண்ட தெய்வம் நீயே அம்மா

- கவிநாதம் - பரந்தாமன்

# அன்னையரே உம்மை ஆராதிக்கின்றேன்

பத்து மாதம் பாரம் தாங்கி
பரிவோடு பகலிரவாய் பாதுகாத்து
நொந்து நொடிந்து பெற்றெடுத்து
நோய் நொடி நெருங்காமல்
பாலமுது ஊட்டி பக்குவமாய்
பார் போற்ற பார்த்தவரே
பால்நிலவு பார்க்கச்சொல்லி
பாலும் சோறும் பிசைந்தூட்டி
பாசத்தை பாகாய் பகிர்ந்த
அன்னையரே உம்மை
ஆராதிக்கின்றேன்!



அம்மா என்ற சொல்லுக்கு
அர்த்தம் அன்பால் அளித்தவரே
ஆயிரம் உறவு அமைந்தாலும்
அன்னை உமக்கு அளவாகுமா ?
கடவுள் தன்னால் ஒவ்வொரு வீட்டுக்கும்
நேரில் வர முடியாதென்றா
உம்மை அனுப்பி வைத்தார்
காலமெல்லாம் கடமை செய்தாலும்
கழிக்க முடியுமா உம்கடனை?
கண்ணீரை காணிக்கையாக்கி உம்மை
கால் தொட்டு கரைகின்றேன்.!

ஆக்கம்: மார்க்கம் சந்திரன்

# அம்மாவுக்கு

அசுத்தமான உலகமிது
உத்தமர்கள் இங்கில்லை
மனிதம் செத்துவிட்டதனால் - இங்கு
மானிடமே கேள்விக்குறியாகியுள்ளது?

தாயின் உறவுதன்னை
உணராத உயிர்களிங்கு
பாசங்கள் இல்லாததனால் - பாரில்
படையணிகள் பெருகுகின்றன....




போட்டியின் உச்சம்தன்னால்
பொறாமைகள் நீளுகின்றது
போர்பறைகள் உலகமெங்கும் -
பொங்கிட
விழுப்புடன் காத்திருக்கின்றன.....

அழகான உலகமிதை
ஆண்டவன் படைத்து இந்த
அறிவிலி மனிதரிடம் கொடுத்ததனால் -
இங்கு
அன்றாட நிகழ்வாக உயிர்ப்பலிகள்....

அம்மா உன் நினைவால்
ஏங்குகின்றேன்
உலக பயம் என்னை துரத்துகின்றது
பிரசவிக்காமல் என்னை – உன்
கருவறையிலேயே கொண்டு சென்றிக்கலாமே?...

ஆசீர் அன்ரனி, ரொரண்டோ, கனடா

**மணமகள் / மணமகன் தேடுகிறீர்களா?**

University, College படித்து முடித்து கனடாவில் தொழில்புரியும் 1974 - 1979 ஆண்டுக்கு இடைப்பட்ட ஆண்களுக்கும், 1980 - 1987 ஆண்டுக்கு இடைப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரிய ஜாதகம் எம்மிடம் உள்ளது. ஜாதகம் பார்த்து ஆலோசனை கூறப்படும்.
தொடர்புகளுக்கு: 647.705.9494

**திருமண சேவை**

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

**மணமகள் தேவை**

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், பிராமண மணமகனுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: Sarmathil@gmail.com

**திருமண சேவை**

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு : தனம் - **647.918 0027**
***nallai@hotmail.ca***

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடா பிரஜையுமான திருமணம் முறிவடைந்த பட்டதாரிப் பெண்ணுக்கு இந்து மணமகன் தேவை. மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு: 647.779.3783

**மணமகன் தேவை**

கனடாவை பிறப்பிடமாகவும் 29.06.1985 இல் பிறந்த (இலக்கினத்தில் செவ்வாய் தோசமுள்ள, விசாக நட்சத்திரம்) BSc. U of T விஞ்ஞான பட்டப்படிப்பை முடித்து 4 வருடங்களாக நிரந்தர உத்தியோகம் பார்க்கும் தமது மகளுக்கு Degree முடித்து நிரந்தர உத்தியோகம் பார்க்கும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்புகளுக்கு: 416.745.1613

**அழையுங்கள்**

கல்யாண வீடு, பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்தநாள் வைபவங்கள் மற்றும் வேறு பல வைபவங்களுக்கு பலகாரம், இனிப்பு வகை, Gift Items செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.291.0156

**மணமகள் தேவை**

யாழ். நகரை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 30 - 40 வயது உள்ள மூன்று மணமகன்களுக்கு மணமகள்கள் தேவை. கனடாவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.666.5627

**மணமகள் தேவை**

விவாகரத்தான 47 வயதையுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
416.892.2303 / 647.465.4520

***TUITION***

Grade 5 - Gr. 10 Math & Science
வீட்டிலிருந்தும், வீட்டுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.834.7358

***TUTORING***

By Tutor experienced at colombo schools, university & technical college.
- Math 6 - 12, • Physics, Data Management
- Computer Training
- Web Design & Development

Use computer program to manage bills, payments, reminders birthdays etc.
Contact: 416.706.1654


மேலும் பக்கங்கள் 26, 27

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு ***www.vlambaram.com***

# வரலாற்று நகரம்...

**23ஆம் பக்கத்தொடர்ச்சி**

மக்கள் அனைவரும் உன்னை வந்து அடைவதற்கான எளிய வழிமுறையை கூறுங்கள்'' என்றார். அதற்கு பெருமாள், மகரிஷி! மக்கள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருக்கும் தொழிலுக்கேற்ப (வர்ணாசிரம தர்மப்படி) எளிதில் என்னை அடைவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய பூஜை நெறிமுறைகளை போதிக்கும் 'ஸ்ரீ ஸுக்தியை' (திருமொழியை) இந்த தலத்தில் உங்களுக்கு வழங்குகிறேன்'', என்றார். 'ஸ்ரீ ஸுக்தி' இங்கு அருளப்பட்டதால் பல வகையான நூல்கள் இங்கு ஆராயப்பட்டன. இதனால் கற்றறிந்த பெரியோர்கள் குழுமியிருந்த கல்வி மாநகரமாகவும் கலை நகரமாகவும் இத்தலம் சிறப்புற்றிருந்திருக்கிறது. அக்காலத்தில் இக்கோயில் பெரிய கலாக்ஷேத்திரமாக விளங்கியிருக்கிறது. எனவேதான் இத்தலம் திருமொழிக்களம் என்றும், பெருமாள் திருமொழிக்களத்தான் எனவும் வழங்கப்படுகிறது. இதுவே காலப்போக்கில் திருமூழக்களம் ஆனது.



இக்கோயிலில் பெருமாள் நான்கு திருக்கரங்களுடன் காட்சியளிக்கிறார். இரண்டு கைகளில் சங்கு, சக்கரம், வலது கீழ்க்கையில் கதை, இடது கீழ் கையில் தாமரை மலருடன் இடுப்பில் வைத்த கோலத்தில் கிழக்கு நோக்கி நின்றவாறு அருள்பாலிக்கிறார். கேரளாவில் உள்ள பெருமாள் கோயில்களில் லெட்சுமணப் பெருமாள் என்ற திருநாமத்துடன் அருள்பாலிப்பது இங்கு மட்டும் தான். மூலவரின் விமானம் சவுந்தரிய விமானம். இவரை ஹாரித மகரிஷி தரிசித்துள்ளார் என்கிறார்கள். சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இங்கு சிவனுக்கு தனி சன்னதி உள்ளது. சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் இக்கோயிலில் ஆறாட்டு நடைபெறுவது வழக்கம். அதற்கு பத்து நாள் முன்பாக கொடியேற்றப்படும். சித்திரை திருவோணத்தை தவிர அனைத்து திருவோணத்திற்கும் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் உண்டு.

கேரளாவை பொறுத்தவரை ஆடி மாதம் முழுவதும் ராமாயண மாதம் என்பதால் இந்த மாதத்தில் கோயில்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழியும். குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் இத்தலத்தில் திருவோண பூஜை செய்வது சிறந்த பலன் தரும் என்பது நம்பிக்கை. ஒரு வருடத்திற்கு முன்பாகவே திருவோண பூஜைக்கு புக்கிங் செய்ய வேண்டும். காலை 5 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் இக்கோயில் நடை திறந்திருக்கும். எர்ணாகுளத்திலுள்ள இன்னொரு முக்கியமான கோயில் அம்பாடத்து மாளிகா அருள்மிகு ஐயப்பன் கோயில். ஐயப்பனின் தந்தையான பந்தளராஜாவுக்கு உதயணன் என்ற திருடனால் தொந்தரவு இருந்தது. உதயணன் மக்களிடம் கொள்ளையடித்து வந்தான். இதனால் பந்தள மகாராஜா தன் மகன் ஐயப்பனிடம் இதுபற்றி சொன்னார். ஐயப்பன், உதயணனை அழித்தான். இதற்காக ஐயப்பனுக்கு அம்பலப்புழா மற்றும் ஆலங்காட்டு ராஜாக்கள் தங்கள் படையுடன் உதவியாக சென்றனர். அன்று முதல் இந்தக் குடும்பங்கள் ஐயப்பனின் நெருங்கிய நண்பர்களாயினர். அழித்தல் முடிந்தபிறகு ஐயப்பன், மகிஷியை அழிக்க பூமிக்கு வந்த தன் கடமை முடிந்து விட்டதால், சபரிமலைக்குப் புறப்பட்டார். தான் செல்லும் முன் எருமேலியில் இருந்து சபரிமலைக்கு செல்லும் பாதையை சீரமைக்கும்படி அம்பலப்புழா மற்றும் அம்பாடத்து மாளிகா குடும்பத்தினரிடம் விளக்கினார். உடனே அம்பலப்புழா குடும்பத்தினரும், ஐயப்பனின் நண்பரான வாபரும் எருமேலி வழியாக சபரிமலைக்கு செல்லும் பாதையை சீரமைத்தனர். இதுவே, 'பெரிய பாதை' எனப்படுகிறது. இதன்பிறகு, ஐயப்பனும் அம்பாடத்து மாளிகை குடும்பத்தினரும் சபரிமலை சென்றனர். அங்கு பரசுராமர் ஸ்தாபித்த சாஸ்தா சிலையில், ஐயப்பன் ஜோதி சொருபமாக ஐக்கியமாகி விட்டார். அன்றிலிருந்து ஆண்டு தோறும் பெரியபாதை வழியாக அம்பலப்புழா குடும்பத்தினரே முதலில் சபரிமலை செல்வர். அடுத்ததாக அம்பாடத்து மாளிகை குடும்பத்தினர் செல்வர். பெரியபாதையில் திருவாபரணப்பெட்டி செல்லும் போது அம்பலப்புழா குடும்பத்தினர் வழி ஏற்படுத்தி கொடுக்க, அம்பாடத்து மாளிகை குடும்பத்தினர் திருவாபரணப்பெட்டியுடன் செல்வர். அம்பாடத்து மாளிகா குடும்பத்தை சேர்ந்த கேசவன் பிள்ளை தலைமுறையில் அவர்தான் ஆண்டுதோறும் சபரிமலை சென்று வந்தார். வயதான பிறகும் தொடர்ந்து அவரே சென்றார். ஒருமுறை இவர் சிரமப்பட்டு மலையேறும் போது, அந்தணர் ஒருவருடன் ஓரிடத்தில் தங்க நேர்ந்தது. அவர் கேசவன் பிள்ளையிடம் ஒரு வெள்ளிமுத்திரையுடன் கூடிய தடி, விபூதிப்பை மற்றும் ஒரு கல் ஆகியவற்றை கொடுத்து விட்டு, 'இதோ வருகிறேன்' எனக் கூறி சென்றார். ஆனால், திரும்பி வரவில்லை. கேசவன் பிள்ளை ஐயப்பனை தரிசித்துவிட்டு, மீண்டும் ஊர் திரும்பினார். அப்போது, அந்த அந்தணர் அவரை சந்தித்து, 'நான் கொடுத்த மூன்று பொருள்களையும் பூஜித்து வாருங்கள்' எனக் கூறிவிட்டு மாயமாகிவிட்டார். அந்தணராக வந்தது ஐயப்பனே என்று அன்று முதல் அம்பாடத்துமாளிகா குடும்பத்தினர் கோயில் ஒன்றை கட்டி, மூலஸ்தானத்தில் இந்த மூன்று பொருள்களையும் வைத்து, அவற்றை ஐயப்பனாக கருதிப் பூஜித்து வருகின்றனர்.

எர்ணாகுளத்திலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள காலடி சென்று அங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் மஞ்ஜப்புரா சென்றால் அம்பாடத்து மாளிகா கோயில் வரும். பங்குனி உத்திரத்தில்தான் சிவ, விஷ்ணுவின் புதல்வராக தர்மசாஸ்தா அவதரித்தார். சாஸ்தாவின் அவதாரமே ஐயப்பன் என்பதால் பங்குனி உத்திரத்தன்று இக்கோயில் நடை திறக்கப்பட்டிருக்கும். இக்கோயிலில் பெண்களுக்கும் அனுமதி உண்டு. சபரிமலையில் நடக்கும் நிகழ்ச்சி நிரலின்படி, விழாக்கள் இங்கு கொண்டாடப்படுகின்றன. தீராத நோய்கள், திருமணத்தடை, அனைத்து வித பிரச்சனைகளும் தீர இத்தல இறைவனிடம் வேண்டிக்கொள்கிறார்கள். இவை தவிர மங்கலவானம் பறவைகள் சரணாலயம், கலமசேரி கேரளா வரலாற்று அருங்காட்சியம், செராய் கடற்கரை, வீகாலேண்ட், விலிங்டன் தீவு, கும்பளங்கி ஆகியவையும் எர்ணாகுளம் பயணத்தில் பார்க்க வேண்டிய முக்கியமான தலங்கள். இவற்றில் கும்பளங்கி தனிச்சிறப்புடையது. இது ஒரு ஒருங்கிணைந்த சுற்றுலா கிராமத் திட்டம். சிறிய தீவான இதனை ஒரு மொடல் மீன்பிடி கிராமம் மற்றும் சுற்றுலா தளமாக மாற்றியிருக்கிறார்கள். கும்பளங்கி சுற்றுலா நகரிலிருந்து ஒருவர் முழு இயற்கை அழகினையும் அந்த இடத்தின் நிலவியல் சமன்பாட்டையும் முழுமையாக கண்டு மகிழலாம். உலகிலேயே முதலாவது மொடல் சுற்றுலா கிராமம் இதுதான் என்றும் சொல்கிறார்கள். பிரசித்தி பெற்ற சைனிஸ் மீன்பிடி வலைகள் மற்றும் இன்னும் பல காட்சிகள் உண்மையாகவே உல்லாசப் பயணிகளின் கண்களுக்கு நல்ல விருந்தாக இருக்கும்.

**- வழிப்போக்கன் -**

# சிந்தனை மாற்றங்களும் மாமேதைகளும்

**‘மனிதனில் மறைந்திருக்கும் பரிபூரணத்தை வெளிப்படுத்துவதே கல்வி’** இந்த அரிய வசனத்தை எமக்கு அளித்தவர் சுவாமி விவேகானந்தர். இன்று பலர் எந்த ஒரு பாடசாலைக்கும் செல்லாமல் மாமேதைகள் போல் உருவாவதினைப் பார்க்கும் போது வியப்பு மேலிடும். தமிழ்நாட்டில் எம்.ஜி. இராமச்சந்திரன், காமராஜர், கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதா போன்ற முதலமைச்சர்கள் எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் சென்றவர்களல்ல. கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாலி போன்றவர்கள் கூட பல்கலைக்கழகம் சென்றவர்களல்ல. சிறுகதை எழுத்தாளர்களான ஜெயகாந்தன், டானியல், டொமினிக் ஜீவா போன்றவர்களும் உயர்கல்வி கற்காதவர்கள். ஆனால், தமிழ் உலகில் அவர்கள் செய்த சாதனைகளை பல பட்டங்கள் படித்தவர்களாலும் செய்ய முடியவில்லை. இதன் காரணத்தை ஆய்வோமானால் கல்வியறிவு வேறு சிந்தனை வேறு என்பது புலனாகின்றது. சினிமாத்துறையில் ஈடுபட்டு அமெரிக்க ஜனாதிபதியாக கூட றொனால்ட் றீகன் வந்தாரென்றால் மேதாவித்தனம் கூட ஒவ்வொருவருக்குள் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்கின்றதென்பது புலனாகிறது. எமக்குள்ளே உள்ள சிந்தனையாற்றலை முறையாக வெளிப்படுத்துவோமானால் உலகம் விரிந்து கொள்ளும். கனவு மட்டுமே கண்டு கொண்டிருக்காமல் அதனை உண்மையாக்கினால் நாமும் மேதாவிகளாகி விட முடியும்.

நாம் எல்லோரும் உள்ளாற்றல் நிறைந்தவர்கள். எமது வியக்கத் தகுந்த மூளையில் 1800 கோடிக்கும் அதிகமான உயிரணுக்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் உள்ளார்ந்த அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு பிறவகையான 20,000 அணுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. இதன் அர்த்தம் யாதெனில் எமது சிந்தனையாற்றல் கூட இப்பிரபஞ்சம் போன்று எல்லையில்லாதது என்பது தான். நாம் நம்ப முடியாத கற்றுக்கொள்ளக் கூடிய திறனைக் கொண்டுள்ளோம். எமது கற்பனைகளை விட நாம் அதிகம் சிந்திக்கவும் முடிகிறது. ஒரு மாமேதை இறந்து விட்டால் ‘ஒரு நூலகத்தை இழந்து விட்டோம்’ என கவலையுறுகின்றோம். இந்த ஆற்றல் வாய்ந்த நூலகம் இரண்டு காதுகளுக்கிடையே மூளையில் உறங்கிக் கிடக்கின்றது.

எம்மால் வைத்திருக்க கூடிய மிகப் பெரிய சொத்து மூளை தான். மின்சக்தி போன்று வாழ்க்கைக்கு சக்தியூட்டக் கூடிய, நாம் பெற விரும்பும் எதையும் பெறுவதற்குரிய, எமது அறிவாற்றலை ஒழுங்கமைத்து, அதைச் சீராக செலுத்துவதின் வாயிலாக எமது அளவு கடந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும். நாம் சிந்திப்பதற்குரிய திறமையிலும், அதைப் பொருத்தமாக பயன்படுத்தி விடுவதிலும் ஈடுபட்டால் எதனையும் அடையலாம். உடல் வலிமையை விட மனவலிமை தான் மிக உயர்ந்ததாகும்.

எமது மனவலிமை விலை மதிக்க முடியாதது. அதில் எண்ணிறைந்த அளவில் முயற்சிகளை மேற்கொண்டு



பயன்படுத்துவதற்கு திறன் அடங்கியுள்ளது. அதனை நாம் எங்கும் எடுத்து செல்லலாம். அதனை எப்படி இயக்குவது என்பதனை அறிந்து கொண்டால், அது பன்முக தன்மையில் இயங்குவதுடன், எல்லை யில்லாத அளவிற்கு திறன் கொள்கிறது. இன்று உலகில் சனத்தொகையை மட்டும் கணக்கிடுவதனை விட எவ்வளவு சிந்தனையாளர்கள் அல்லது மேதாவிகள் உள்ளார்கள் என்பதனைக் கொண்டே ஒரு நாடு வளம் பெறுகிறது. மிகச் சிறந்த வெற்றியாளர்களும், மதிப்பு மிகுந்த தொழில் முனைவோர்களும், தொழில் வணிகத்திலும் கல்வியாளர்களும் தான் ஒரு நாட்டின் சொத்துக்களாவர்.

எமது பின்னணியை மட்டும் கருத்திற் கொள்ளாது நாம் எங்கிருக்கிறோமோ அங்கிருந்தே சிந்தனையை தூண்ட முயலலாம். மேதாவித்தன்மையுள்ளோர் (Genius) அதிகூடிய அறிவுதிறன், படைப்பாற்றல், சுயத்துவம் உள்ளவர்களாவர். ஒவ்வொருதுறைகளிலும் மாமேதைகள் தோன்ற முடியும். Genu என்ற லத்தீன் சொல்லிருந்தே Genius என்பதும் பிறந்துள்ளது. பல்முகத் திறன்கள் (Multiple intelligence) உள்ளவர்களாக காணப்படும் இவர்கள் அவரவர் துறைகளில் மேதாவிகள் ஆவர். விஞ்ஞானம் சந்தைப்படுத்தல், தொழில்நிறுவனம், கணினி உற்பத்தி மொழிகள், தத்துவம், இசை போன்ற பல்வேறு துறைகளில் பல மேதாவிகளை நாம் கண்டுள்ளோம். நுண்மதி ஈ பு (IQ) எனப்படும் நுண்ணறிவு 140 க்கு மேல் இவர்களிடம் காணப்படும். ‘தெரிவுகளை நீங்கள் செய்யும் போது, நீங்கள் எதிர்காலத்தை மாற்றிவிடுகிறீர்கள்’ என்ற கருத்தினை வெளியிட்டவர் Deepak Chopra என்பவராவர். நவீன விஞ்ஞானம் பற்றி யார் சிந்தித்தாலும் ‘E = MC2’ என்ற அல்பேட் ஐன்ஸ்ரீனின் ‘the theory of relativity’ என்ற கோட்பாடே முன்னுக்கு வரும். இப்படியான மேதாவி ஐன்ஸ்ரீனின் சிந்தனை இன்னும் புதுமையானது. எல்லோரும் மேதாவி தான். ஒரு மீன் மரத்தில் ஏறுமென்று நீங்கள் தீர்மானித்தால் வாழ்நாள் முழுவதும் அது ஒரு புத்திசாலித்தனமானதற்றதாக வாழ்ந்த தென்பதனை நம்ப வேண்டி வரும். (Everybody is a genius but if you judge a fish its to climb a tree, it will live its whole life believing that it is stupid). அத்துடன் ‘நான் விசேட திறமை கொண்டவரல்ல, எதனையும் துருவி ஆராயும் தன்மை கொண்டவர் மட்டுமே’ என்று கூறியதும் சிந்திக்கவேண்டிய தொன்று. எனவே மேதாவித்தனம் என்பது எதனையும் சிந்தனையாற்றலால் உருவாக்குவதே யாகும்.

எமது அறிவாற்றல் அதனுடைய மதிப்பை இழக்காமல் இலட்சக்கணக்கான முறைகளை அதிகரிக்கும் திறன் உடையது. படைப்பாற்றலை திறம்பட செய்கிறது. முன்பு இல்லாத துடிப்பாற்றலை எமக்கு தருகிறது. இதற்காக பல்கலைக்கழகம் சென்று படிக்க வேண்டியதில்லை. நமது செயலில், நாம் சரியாக இருக்கும் நிலையில் மிகச் சிறிய மாற்றங்கள் கூட வியக்கத்தக்க விதத்தில் பெரிய மாற்றத்தை கொண்டு வரும். பொதுவாக மேதாவிகள் எவரும் தம்மை வல்லுநர்கள் என்று கருதுவதேயில்லை. எந்தவிதமான அடிப்படைகளும் இன்றி தமது சொந்த முயற்சியால் உயர்ந்தவர்களே அவர்கள். அதனால் பழமையதை மறப்பதில்லை. மிகவும் பணிவோடு செயல்படுபவர்களாகவும் எல்லாம் எனக்குத் தெரியும் என்ற வலைக்குள் எல்லோருக்கும் எல்லாம் தெரியும் என்று கூறிவிட முடியாது. இன்று எல்லா அம்சங்களுமே மாறிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொருவருடைய மேதாவித்தனமும் இணைந்தே முழுப் பொருளாவதும் உண்டு. நவீன இயந்திரம் ஒன்றைக் கவனித்தால் அதன் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு பொறுப்பாளராக இருப்பார்கள். ஓர் அங்கம் செயல்படுவதைக் குறித்து ஆய்வு செய்ய தங்களுடைய முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்த மாமனிதர்கள் இருக்கிறார்கள். உயர்தரமான அறிவாற்றலையும், அர்ப்பணிப்புத் தன்மையையும் பெற்றிருந்த அவர்கள் ஒவ்வொரு பகுதிகளையும் ஆய்வு செய்ய தங்கள் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்திருப்பார்கள் என்பது புரிகிறது. கேள்விகள் ஒன்று என்றாலும் பதில்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. ஒரு வருடத்திற்கு முன்பு எது உண்மையோ அது இன்று உண்மை அல்ல. இப்போது உண்மையாக உள்ள ஒன்று அடுத்த வருடம் உண்மையாக இருக்கப் போவதில்லை. எமது உண்மையான வழி என்பது புதிய கருத்துக்களையும் அறிவையும் உள்வாங்கிக் கொண்டு, இன்று என்னவெல்லாம் இருக்கிறதோ அவற்றுடன் ஒப்பிட்டு பார்ப்பதுதான்.

எங்களது கண்களை திறந்து வைத்திருக்க வேண்டியுள்ளது. ஏனெனில், வெளியே மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் திறந்த மனத்துடனும் விழிப்புணர்வுடனும் நாம் இருக்கவேண்டியுள்ளது. எமது எதிர்காலத்திற்கு உரிய விதத்தில் எமது அறிவையும், மூளைத்திறனையும் பயன்படுத்துவதிலிருந்து தான் எமது சிறந்த வாய்ப்புக்கள் உருவாகி வெளிப்படுகின்றன. இன்று பெரும் செல்வம் படைத்தவர்கள் எல்லோரும் தம்வசம் எதுவுமே இல்லாமல் வாழ்க்கையை தொடங்கியவர்கள் தான். ஆனால் தமது புரட்சிகரமான சிந்தனையால் மேதாவி போல் மாறியவர்களே அவர்கள். வாழ்வின் எல்லாத்துறைகளிலும் மேதாவி யானவர்கள். எல்லோருமே சமூகத்தைப் படித்து, சிந்தனையை மாற்றியவர்கள் தான்.

மாமேதைகள் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் ஒருவருக்கு உயர்தரமான அறிவுத்திறன் மட்டுமே தேவையில்லை என்பதனையும் அவர்கள் பெரும்பாலும் சாதாரண மனிதர்களாகவே உள்ளனர் என்பதனையும் குறிப்பிட்டுள்ளனர். எனினும், சராசரியானவர்களை விட அதிக அளவில் தங்களது அறிவுத்திறனை பயன்படுத்தியவர்களாக உள்ளனர் என்பது புரிகின்றது.


பொதுவாக மேதைகள் சிறந்த மனத்துடன் இருப்பார்கள். பன்முக போக்குடையவர்களாகவும் திட்டமிடுபவர்களாகவும், தர்க்க ரீதியில் சிந்திக்க தக்கவர்களாகவும் இருப்பர். சிந்தினையை கிளறிவிடுவதின் மூலம் சிந்தனையை தூண்டி விட வேண்டும். இதுவே படைப்புத்திறனை கூட்டவல்லது. பொதுவாக பலவிதமான அடிப்படைகளிலிருந்து, புதிய கருத்துக்களுடன் தங்களை தொடர்பு கொள்ளும் விதத்தில் தங்களையே பக்குவப்படுத்திக் கொண்டவர்களே வெற்றி பெறுகின்றனர். பல்வேறு பயிற்சிகளிலும், கருத்தரங்குகளிலும், விரிவுரை நிகழ்ச்சிகளிலும் நாம் கலந்து கொண்டால் எம்மை அறியாமலே உயர்ந்து செல்வோம்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

**YOGA - MEDITATION CLASSESS**
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.
நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# மரம்

**அரம் போலும் கூர்மையரேனும் மரம்**
**போல்வர் மக்கட் பண்பு இல்லாதவர்.** - குறள்

பண்பு இல்லாதவர் ஓரறிவுடைய மரம் போல்வர் என்பர் வள்ளுவர். பண்புடையவராலேயே உலகம் இயங்கி வருவதால் பண்பில்லாதவர் உணர்ச்சியற்ற மரத்திற்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளனர். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலே மனிதனுக்கு மாண்பைத் தருவதால் இப்பண்பு இல்லாதவர் காட்டிலுள்ள மரத்தை நிகர்த்தவர் ஆவர்.

மேலும் ஊக்கம் இல்லாதவனும் மரம் என்கின்றார் வேறொரு குறளில் வள்ளுவர். **'உரம் ஒருவருக்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார் மரம் மக்கள் ஆதலே வேறு".**

சபையிலே நீட்டிய ஓலையை வாசிக்கத் தெரியாதவனும் மரமாவான்.

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் சபை நடுவே**
**நீட்டலே வாசியான் நின்றான் குறிப்பறிந்து**
**மாட்டாதவன் நன் மரம்**

காட்டிலுள்ள மரங்கள் ஒழுங்கற்ற முறையில் கண்டபடி வளர்கின்றன. ஆனால் வீட்டில் அவற்றை ஒழுங்காக வளர்க்கின்றோம். பல்வேறு மரங்கள் காட்டில் சிலவேளைகளில் அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து சூரிய ஒளி உள் வராமல் கவிந்து காணப்படுகின்றன. ஆனால் பயன் தரும் மரங்களையே வீட்டில் வளர்க்கின்றோம். நிழல் தரும் மரங்கள், காய், கனிதரும் மரங்கள், பூக்கள் தரும் மரங்கள், வாசனை பொருட்கள் தரும் மரங்கள், மூலிகைகளாகும் மரங்கள் என்று மரங்கள் பலவகைப்படும். சிறுவிதையில் உருவாகும் ஆல் போன்ற மரங்கள் பெரிய படை தங்க நிழல் கொடுக்கின்றன. மத்தியரேகைக் காடுகள், மழைக்காடுகள், குளிர்பிரதேசக் காடுகள், ஊசியிலைக்காடுகள், மென்மரக்காடுகள், வைரமரக்காடுகள் என்றும் காடுகளை வகைப்படுத்தலாம். தாவரப் போர்வை இல்லாத உலகின் பகுதிகளான பாலை வனங்களில் ஆங்கு நீரூற்றுள்ள பகுதிகளில் சோலை வனங்கள் காணப்படுகின்றன. மேலும் மரங்கள் விறகாகவும், தளபாடங்களாவும், கடதாசியாகவும், வீடாகவும், படகுகளாகவும் பயன்படுகின்றன. மழை பெய்யவும் மரங்கள் உதவுகின்றன. மண்ணரிப்பைத் தடை-செய்வதுடன் எல்லைகளாகவும் அவை உள்ளன. உபயோகம் இல்லாத மனிதனை ஏன் இப்படி மரம் போல வளர்ந்து விட்டாய் என்று திட்டுகின்றோம். ஆனால் அப்படி ஏசுவது சரியா? மரம் நிழல் தரும். காய் தரும் கனி தரும். செத்த பின்பும் விறகாக நம்மை எரியூட்டப் பயன்படுகின்றது. எனவே மரம் மனிதனுக்கு பலவழிகளில் பயன் படுகின்றது. எனவே மரமாகவே இரு என்று சொல்லலாம் போலுள்ளது.

தாவரங்களுக்கும் உயிர் உண்டு, உணர்ச்சி உண்டு என்று உறுதிப்படுத்துகின்றது தாவரவியல். உயிர்வாழ வேண்டும், உயரவேண்டும் என்று சூரிய ஒளியைபெற மேல் நோக்கி மரம் வளர்கின்றது. இது வளர்ச்சியை விருத்தியை உணர்த்துகின்றது. மரத்தின் ஒருகிளையை முறித்தால் கூட புதுக்கிளை தோன்றுகின்றது. எனவே கிளைகள் பரப்பியே படர்வேன் என்ற மரத்தின் மமகாரம் மாண்புடையது.

ஆடிக் காற்றுக்கு ஆடிப்போய் முறிந்து விழுந்து விடும் முருங்கைமரம் அப்படி முறியும் முருங்கைக்கும் மூர்க்கம் உண்டு.

வெட்டி எறிந்த துண்டு மண்ணில் புதைந்து வேர் விடும்.



இது வாழவேண்டிய வைராக்கியம். இத்துணை வேகம் மனிதனுக்கு இருக்கின்றதா?

தென்னை, பனை, கமுகு, வாழை யாவும் கிளைகள் அற்றவை. ஆங்கிலத்தில் இவை பாம் எனப்படும். தாளுண்ட நீரை தலையாலே தந்து நன்றியுணர்வுடன் வெளிப்படுத்துவது தென்னை. வளையாது காற்றுக்கு ஆடி ஆடி முறியாது நிமிர்ந்து நிற்கும் தன்மையது பனை. குலை குலையாக பாக்கு காய்க்கும் கமுகு நெட்டையானது. மா, பலா, வாழை தரும் முக்கனிகளும் பூசைக்குரியன. மங்கலப் பொருளாக விளங்குவது வாழை. வாழையடி வாழையாக குலம் விளங்க வாழ்த்துவர். வாழைக்கு தான் ஈன்ற காயே கூற்றாகும். இவை உணர்த்தும் படிப்பினைகள் பலவாம்.

மரங்கள் இல்லாத உலகினை எண்ணி பார்க்கவே முடியாதுள்ளது. பூமாதேவி பசுமை பெறுவது அவற்றாலேயே. பகல் நேரத்தில் மரங்களின் கீழ் நிற்பது சுகந்தரும். இதந்தரும் புயலாக வீசும் காற்று மரங்களை சாய்த்து விடுவதும் உண்டு. இதனால் காடுகள் அழிகின்றன.

காட்டுத்தீயும் காட்டுமரங்களை அழித்துவிடுகின்றன. அண்மையில் அவுஸ்திரேலியாவில. ஏற்பட்ட காட்டுதீயால் 200 மக்கள் இறந்தனர். 700 வீடுகள் அழிந்து நாசமாயின. காட்டுதீயை கட்டுப்படுத்துவது கடினமாகும்.

குளிர்காலத்தில் மரங்கள் தமது இலைகளை உதிர்த்து பட்டமரங்கள் போல காட்சிதரும். வளர்ச்சியில் சூழலுக்கு தம்மை இசைவுபடுத்தும் முறை இதுவாகும். குளிர்காலத்தில் இந்நாடுகளுக்கு வரும் ஒருவர் இவற்றை காணும் போது அவர் மனதில் வெறுமை உணர்ச்சி ஏற்படுவது இயற்கை இப்படியான மரம் பின்னர் சிலிர்த்து தளிர்க்கின்றது. வாழ வேண்டும் என்கின்ற ஆவேசத்தையும் வைராக்கியத்தையும் காட்டுகின்றது.

ஒவ்வொரு ஆலயத்திற்கும் தலவிருட்சம் உண்டு. இது அந்த மரத்திற்கு மகத்துவத்தை உண்டு பண்ணுகின்றது. அதன் இலைகளை பக்தர்கள் பறித்துச் சென்று வீடுகளில் பூசை அறையில் வைப்பர். அவற்றை யாரும் தறிக்க முடியாது.

பனை தமிழீழத்தின் தனிச் சொத்து. அதன் உறுதியும் வளையாத தன்மையும் பயனும் அதை ஒரு கற்பக தரு ஆக்கியுள்ளனர். நந்தியும் பனையும் தமிழினத்தின் சின்னமாகும். வாகை மரம் தமிழீதத்தின் தேசிய விருட்சமாகும். இதே போன்று மேப்பிள் மரம் கனடாவின் தேசிய சின்னமாகும். மேப்பிள் இலை கனடாவின் தேசியக் கொடியில் பொறிக்கப்பட்டு ஒளிர்கின்றது.

பல்வேறு வகையான விலங்குகளுக்கும் ஊர்வனவிற்கும் புகலிடமளிக்கும் காடுகள் கவினுடையவை.

ஆதிக் குடிகள் சிலர் காடுகளிலேயே வசிக்கிறார்கள். மரவம் பொழில் சூழ் கடவூர் என்றார் அப்பரடிகள் எனவே அழிவை எதிர்க்கும் ஆக்ரோசத்தை மரங்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

ஆல்போல் தளை அறுகு போல் வேரூன்று இவையே மரமுணர்த்தும் மகத்தான பாடமாகும். ஆலும்வேலும் பல்லுக்கு உறுதி தருவன. விதைகளை கொடுத்து விட்டுத்தான் மரங்கள் அழிகின்றன. கிளைகள் வெட்டப்பட்டாலும் வேர்கள் மரத்தை தாங்கி நிற்கின்றன. இந்துகள் மரங்களை பூசிப்பவர்கள். தமிழ் நாட்டில் வேப்ப மரத்திற்கும் அரமரத்திற்கும் திருமணம் செய்து வைக்கும் விந்தையின் சமயச் சடங்கு உண்டு. நம்மை வாழவைக்கும் மரங்களை நாம் வாழவைக்கும் சடங்கு இதுவாகும். முருங்கை வேங்கை மரமாக நின்றது, அதன் தெய்வீகத் தன்மையை உணர்த்துகின்றது. எனவே தான் வேப்பிலை மருந்துப் பொருளாகவும் பயன்படுத்துவதுடன் தீயசக்திகளை விரட்டவும் பயன்படுகின்றது. மரங்களில் நான் அரசமரம் என்று கண்ணபிரான் கூறியதை மறக்கலாமா?

போதி மரத்தடியில் புத்தர் ஞானம் பெற்றார். புளியமரத்தடியில் நம்மாழ்வார் ஞானநிலை செய்தார். அரசமரத்தடியல் அமர்ந்தபடி திருமந்திரம் செய்தார் திருமூலர். குருந்த மரத்தடியில் மணிவாசகர் குருவைக் கண்டார். எனவே ஞானிகளுக்கு நிழல் கொடுத்த பெருமை மரங்களுக்குண்டு. எனவே மரங்களை வெட்டாதீர். அது ஏதாவது ஒரு ஞானியை உருவாக்கலாம்.

தாவரங்கள் நமது உறவினர்கள். துளசி என்றும் வேம்பு என்றும் பெண்களுக்கு பெயரிடப்பட்டலிருந்து இது விளங்கும். மரத்திற்கு தரு என்ற பெயரும் உளது. பல பயன்களைத் தருவதால் தருவானது. தேவலோக கற்பகதரு கேட்பதெல்லாம் தருவது என்ற பொருளில் அமைந்தது.



நா. க. சிவராமலிங்கம்


**திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்**



திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும்,
திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை,
படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற
தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து
வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை
நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

**Call: Meenakshisundram Ramasamy 416.439.2002**

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# சிந்தனை மாற்றங்களும்...

வேகமாக படித்துப் பார்த்தல் மூலம் ஞாபக சக்தி கூடுகிறது. நேர்மறைக் கண்ணோட்டம் உருவாகிறது. பலருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அறிவுப் பங்கீடு செய்தல் மிக அவசியம். சில நண்பர்கள் தாம் படித்த நூல்களையும், ஒலி நாடாக்களையும் சிபார்சு செய்வார்கள். சிலவேளைகளில் அதுவே எமது வாழ்க்கையை மாற்ற கூடும்.

ஒவ்வொரு நாளும் விரும்பிய துறையில் படித்துக் கொள்வது அவசியம். குறிப்புக்களையும் எடுக்க வேண்டும். அதிகாலையில் விழித்தெழுந்து 30-60 நிமிடங்களாவது படித்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து செய்வதால் வருடத்தில் 50 நூல்களுக்கு மேல் படித்து விடலாம். எந்த அளவுக்கு படித்துக் கொள்ளுகின்றோமோ அந்த அளவுக்கு சிந்திக்க கற்று கொள்கிறோம். நவீன சாதனங்கள் பல இன்று வந்துள்ளன. எனவே தொழில் தொடர்பான கணினிகளும், ஒலி நாடாக்களும் இதில் உதவ முடிகிறது. வாகனத்தில் செல்லும் ஒருவருக்கு இந்த ஒலி நாடா உதவிக் கொண்டேயிருக்கும். எனவே முறையான புத்தகப் படிப்பு, ஒலி நாடாக்களை கேட்டல், கணினிகளை பயன்படுத்துல், பயிற்சிகளுக்கு செல்லல் என்பவற்றை இணைக்கும் போது வேகமாக ஆற்றல் பெறுவதனை உணருவோம்

ஒவ்வொருதுறையிலும் மேதாவிகள் என்போர்களுக்கு வேறு சொற்களும் பாவனையில் உள. அவையாவன: Ability, Brilliance, Capability, Expert, Originality,



Prodigy, Sagacity, Talent, Wisdom, Star, Work Man Ship, Mastermind, Headset, Virtuoso, Inventiveness என்பவையாகும். ஒரு கணினியை எடுத்துக்கொண்டால் கூட இருபதுக்கும் மேற்பட்ட பகுதிகள் இதில் இணைந்துள்ளன. அதிலுள்ள Mouse மட்டும் note book mouse, dekstop mouse, wired mouse, wireless mouse, gaming mouse, mouse pad என்று எத்தனை வகைகள் உள்ளன. இவையெல்லாம் பல்வேறு மேதாவிகளின் கண்டு பிடிப்புக்களாகும்.

மேதாவிகள் என்னும் போது விஞ்ஞானத்துறை மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் மேதாவித்தன முள்ளவர்களை வரலாறு சந்தித்துள்ளது. தத்துவஞானிகள், நாட்டு தலைவர்கள், சொற்பொழிவாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் எல்லோருமே அடிப்படை எதுவுமின்றி உருவானவர்களே. நேர்மறையாகவும் ஆக்கரீதியாகவும் தங்களுடைய சிந்தனையை மாற்றியமைக்காகவே அவ்வாறு உருவாகினர். தனித்துவமுள்ள தளத்தில் நின்று வேகமாக, சுலபமாக செய்தமைக்கும் அவர்களே பொறுப்பாளர்கள்.

தகவல் மலிந்த காலகட்டத்தில் அறிவுதான் முக்கியமாக உள்ளது. தனிப்பட்ட ஆர்வமும் அறிவும் சேர்ந்து நடைபோடும் போது துணிச்சலும் நம்பிக்கையும் உருவாகிறது. எம்மை நாமே சுய மதிப்பீடு செய்யக்கூடியதாகவும் தடுத்து நிறுத்த முடியாத செயல் வீரராகவும் மாறிவிடலாம். சாதாரண மனிதன் ஒரு விடயத்தை மட்டும் அறிந்து கொள்வான். ஆனால் அதில் பத்துவிடயங்களை காண்பவர்களே மேதாவியாகி விடுகிறான். எந்த ஒரு மேதாவியும் களவு செய்ய முயல்வதில்லை. பலனை அவன் கைப்பற்றிக் கொள்கிறான்.

ஒவ்வொரு மேதாவிகளும் முழக்கம் போன்றவர்கள். காற்றுக்கு எதிராக சென்று காற்றினை சுத்திகரிக்கும் வல்லமை படைத்தவர்கள். சிக்கலான ஒன்றை சாதாரணமாக்கி விடுவதே மேதாவியின் வேலை. எமக்குள் உள்ள மேதாவித்தனம் எமக்கே புரிவதில்லை. எமது வீடுகளில் எத்தனையோ மேதாவிகள் இருப்பார்கள். எமக்கு தெரிவதில்லை. பிறப்புடன் வரும் மேதாவித்தனம் சிந்தனை மாற்றத்தினாலேயே சுடர்கிறது.

# குவை ஆதீனமும்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

சுவாமிகளைப் பலமுறை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் இறைவன் கோவிலைப்பார்த்து திரும்பிய பின்னர் எங்கள் யாவரையும் வேலன் சுவாமிகள் சந்தித்து உரையாடினார். அப்போது அவரை நான் திருவடி நிலைய (ஸ்காபரோ)த்தில் சந்தித்ததை நினைவு கூர்ந்தார். முன்னைய ஏற்பாட்டின் படி 2012 ஆம் ஆண்டில் இறைவன் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டுக் கும்பாபிசேகம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அது அறிவிக்கப்பட்ட போது 2012 இல் கும்பாபிசேகத்தில் கலந்து கொள்ள வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டேன். இது பற்றி மனைவியிடமும் கூறியிருந்தேன். பின்னர் கும்பாபிசேகம் பிற்போடப்பட்டது என்பதை யறிந்து நான் குவைக்குச் செல்வதைப் பற்றி யோசிக்கவில்லை. இவ்வாறு முன் தீர்மானித்தது 2012 இல் நிறைவேறும் என நான் எதிர்பார்க்கவேயில்லை. பாருங்கள் எதிர்பாராமல் நான் அங்கு அழைக்கப்பட்டுள்ளேன்.

குவை ஆதீனம் பற்றிய விபரங்களைப் பார்ப்போம். இங்கு பல்வேறு நாடுகளிலிருந்து ஆன்மீக சேவையில் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வழிபாடு, தியானம், சேவை, மனமாற்றம் ஆகிய முக்கிய நோக்கத்தோடு இறைபணியில் இணைந்துள்ளனர். இது ஓர் ஆச்சிரமமல்ல. இங்கு கட்டுப்பாடுகள் அதிகமுள்ளன. இதற்குப் பணிந்து நடப்பவர்களே இங்கு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இங்குள்ள குருமார்களில் சிலர் மஞ்சளுடையிலும், சிலர் வெள்ளை அல்லது செம்மஞ்சள் உடையிலும் காட்சியளிப்பதை நீங்கள் காணலாம். இந்த ஆதீனத்தின் முதல்வராக வண. போதிநாதவேலன் சுவாமி உள்ளார். இவர் வாரந்தோறும் ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றுவதுடன், ஆசீர்வாதம் பெறவரும் அடியார்களைச் சந்திக்கிறார். இங்கு பிறகுருமார்களுக்குப் பயிற்சி வழங்குதல், அதிகாலையில் தியானித்தல், வழிநடத்தல், வாராந்த அக்னி பூசையில் தலைமை தாங்குதல், கோவில் உறுப்பினர்களுக்கும் குருமாருக்கும் தீட்சை கொடுத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார். இவற்றுடன் வெவ்வேறு நாடுகளுக்கு அழைப்பின் பேரில் சென்று ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுவதுடன் அமெரிக்காவிலுள்ள பல்வேறு மாகாணங்களுக்குச் சென்று பல்வேறு பணிகளை ஆற்றுகிறார். இங்குள்ளவர்கள் ஐந்து கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1. கோவிலையும் சமையலையும் கவனிப்பது
2. கற்பித்தலும் கோவில் நிர்வாகமும்
3. நிதியும் வர்த்தகமும்
4. கட்டிடங்களும் நிலங்களும்
5. வெளியீடுகள்

இவர்கள் பிரமச்சரியம், அடக்கம், கீழ்ப்படிவு, அந்தரங்கம் பேணல் ஆகிய சபதங்களுடன் ஆனந்தமாக ஆன்மீக வாழ்வை வாழ்கின்றனர். இவர்களின் நாளாந்த வாழ்வு அதிகாலையில் கடவுள் கோவிலில் சேவை செய்வதுடன் ஆரம்பமாகிறது. இவர்கள் 3 மணித்தியால கவனிப்பு நிலையில் நாடோறும், வருடந்தோறும் மாறி மாறி ஈடுபடுகிறார்கள். ஆன்மீகக் கூட்டங்களில் குருதேவரின் போதனைகளை கற்பது, மந்திரங்கள் ஓதுவது, பஜனைகள் பாடுவது, தியான முறைகள் கற்பது ஆகியவற்றில் நடுகிறார்கள். இத்துடன் உலகளாவிய ரீதியில் சைவத்தைப் பரப்புவதில் 'Hinduism Today' என்ற சிறப்பான அச்சு வேலைப்பாடுகளோடு கூடிய காலாண்டு சஞ்சிகையையும், 'Himalayan Academy' என்ற வலைத் தளத்தையும் செம்மையான முறையில் நடத்தி வருகிறார்கள்.

இதுவரை காலமும் சைவ உலகில் குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற




ஈடுபடுகிறார்கள். இவர்கள் தமக்குத் தேவையான காய்கறிகளைப் பயிரிடுவதுடன், பால், தயிர், நெய் தேவைகளுக்கு பசுக்கூட்டத்தையும் பராமரித்து வருகிறார்கள். மேலும் தேவையான தளபாடங்களை அங்குள்ள மரங்களைத் தறித்துச் செய்வதுடன் கன்றுகளை வளர்த்து மரங்களை

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டும் பரவியிருந்த சைவ சமயத்தின் சிறப்பை உலகறிய வைத்த பெருமை குரு தேவருக்கும் அவரது குரு பரம்பரைக்கும் உரியதாகும். இதற்கு சைவர்களாகிய நாமெல்லாம் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டவர்கள் ஆக இருக்க வேண்டும்.

# சோம்பேறிக் குரங்கு

ஒரு காட்டில் குரங்கு ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் அது மரத்திற்கு கீழே இருக்கையில் மரத்தில் ஒரு பெரிய பழத்தைக் கண்டது. அந்தப் பழத்தை குரங்கு எடுத்து சாப்பிட விரும்பியது. ஆனால் அது மரத்தில் ஏறி பழத்தை எடுத்து உண்ண விரும்பவில்லை. எனவே வேறு ஒருவரை வைத்து எடுக்கலாம் என குரங்கு நினைத்தது. அது மரத்தின் கொப்பில் தூங்கிக் கொண்டு இருந்த ஆந்தையிடம், 'அந்தப் பழத்தை தட்டி விடு', என்றது. ஆந்தையும் கண்ணைத் திறந்து குரங்கை கோபத்துடன் பார்த்து விட்டு, மீண்டும் கண்ணை மூடிக்கொண்டு தூங்கத் தொடங்கியது. இதைக் கண்டு குரங்கு கோபம் கொண்டது. அது ஆந்தையை எப்படியாவது தண்டிக்க வேண்டும் என்று நினைத்து, அவ்வழியில் உணவை தேடி கொண்டிருந்த காட்டுப் பூனையிடம், 'அந்த ஆந்தையை விரட்டி விடு' என்றது. காட்டுப் பூனையும் குரங்கை கவனிக்காமல் சென்றது. குரங்கும் கோபித்துக் கொண்டது. அவ்வழியில் காட்டு நாய் ஒன்று போனது. அதைப் பார்த்து குரங்கு 'அந்தக் காட்டுப் பூனையை கடித்து விடு' என்றது. நாயும் குரங்கை பார்த்து குரங்கு நடுங்கும்படி குலைத்து விட்டுச் சென்றது.



இதற்கு பெரிய மிருகம் ஒன்றுதான் தீர்வு என நினைத்த குரங்கு, சற்றுத் தூரத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்றிடம் சென்று, 'அந்த நாயை அடித்து விடு' என்றது. மாடோ கோபமுடன் குரங்கை நோக்கியது. பயந்து போன குரங்கு நேரே காட்டு ராஜா ஆன சிங்கத்திடம் ஓடியது. அது சிங்கத்திடம், 'பழத்தை தட்டி விடு என ஆந்தையை கேட்டேன். அது இல்லை என்றதால் பூனையை ஆந்தையை விரட்டச் சொன்னேன். அதுவும் இல்லை என்றதால் நாயை கடிக்க கேட்டேன். அது மாட்டேன் என்றதால் மாட்டைக் கேட்டேன். அதுவோ கோபித்து என்னை விரட்டி விட்டதால், உங்களிடம் வந்தேன்' என்றது.

சிங்கத்திற்கு குரங்கின் சோம்பேறித்தனமும், அது கேட்ட முறையும்தான் பிரச்சினைக்கு காரணம் என புரிந்தது. சிங்கம் குரங்குடன் பழம் இருந்த மரத்திற்கு வந்தது. குரங்கைப்பார்த்து 'நீங்கள் மரத்தில் ஏறி பழத்தை எடுங்கள்' என்றது சிங்கம். குரங்கும் சற்று குழப்பத்துடன் அவ்வாறே செய்தது. 'இது எவ்வளவு சுலபமாக இருந்தது?' என்று சிங்கம் குரங்கை கேட்டது. குரங்கும் தன் தவறை உணர்ந்து அன்றில் இருந்து சுறுசுறுப்பாக இருந்தது.

**நீதி: 'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!' - பாரதியார்.**



ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# திருப்தி தரும் எனது ஆளுமை

எனது தற்போதைய ஆளுமை எனக்குப் போதுமானது என இப்போ நினைப்பது எனது நம்பிக்கையை நான் உணர்ந்து அதன் சக்தியை வெளியிட எனக்கு உதவுகின்றது.

உனது அந்தரங்கத்தில் உலகிற்கும் உனக்கும் தற்போது உன்னிடமுள்ள ஆளுமை போதாது என நீ உணர்ந்தால் உனது மனநிறைவிற்கும் திருப்திக்கும் தேவைக்கு அதிகமானவற்றை கொடுக்கவே முயல்வாய். ஆனால் நீ எவ்வளவுதான் முயற்சித்தாலும் எதைக் கொடுத்தாலும் உனக்கு மனநிறைவு ஏற்படாது. திருப்தி கரமான ஆளுமை உனக்கிருக்கின்றது எனும் மனநிறைவுடன் வாழ்வின் அனுபவங்கள் ஒவ்வொன்றையும் நீ அணுகுவது தான் உனக்குப் பூரண மனநிறைவு தரும். வாழ்வில் எவ்வித சந்தர்ப்பத்தை நீ அணுகினாலும் அதற்குக் காத்திரமான பங்களிப்பை நல்கக் கூடிய ஆளுமை உனக்கு இருக்கிறது என்ற அந்த நம்பிக்கையே அந்தப் பூரண மனநிறைவைத் தரும். இதனால் உனக்கு எல்லாம் தெரியும் உன்னால் சகலதையும் சாதிக்க முடியும் என அகம்பாவத்துடன் நீ நடக்க வேண்டியதில்லை. உனது உள்ளார்ந்த சக்தியுடன் பூரணமாக ஒன்றிப்போகிறாய் என்பதே இதன் அர்த்தம்.



இந்த நிறைந்த மனோநிலையை உன்னிடம் அபிவிருத்தி செய்து கொண்டால் ஒருபோதும் ஒருவருக்கும் ஒன்றையும் நீ நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லாது போய்விடும். உன்னிடம் இல்லாத ஒன்றும் உனக்கு செய்யமுடியாத ஒன்றும் ஒருவரிடமும் இல்லை என்பது உனக்குத் தெரிந்திருக்கும். நீ ஏதாவது தவறு செய்தால் அதற்குப் பயப்படமாட்டாய். உண்மையாக நடந்ததைச் சொல்ல ஒருபோதும் வெட்கப்படமாட்டாய். தெளிவான எல்லைகளை உனக்கு ஏற்படுத்திக்கொள்ளும் நீ பிறரின் எல்லைகளையும் மதித்து அவற்றைத் தாண்டமாட்டாய். உனக்குத் திருப்தியும் மனநிறைவும் தராத ஆளுமையுடன் நீ வாழும்போது உனக்கு எல்லைகள் ஒன்றும் இருக்காது. மற்றவர்களை மிதித்துத் தள்ளிவிட்டு நீ முன்னேறுவாய். அதேபோல் பிறர் உன்னைத் தள்ளி விழுத்தி மிதிக்கவும் நீ அனுமதிப்பாய்.

தெய்வீக இறைசக்தி உன்னை நிறைத்து உனக்கூடாகச் செயற்படுவதை நீ உணர்வது தான் உனக்கு இந்த மனநிறைவைத் தருகின்றது. இறை அன்பு உன்னை பூரணமாக ஊடுருவதை உணர்ந்து கொள். உன்னால் முடியாது எனும் இயலாமை உணர்வு உனக்கு எப்போதாவது ஏற்பட்டால் ஒன்றைத் தெரிவு செய்து அதனைக் கடைப்பிடிப்பதால் மனநிறைவு பெறு. ஏதாவது ஒரு காரணத்தால் உனது முயற்சி சரிவராமற் போனால் மனம் தளராதே. உனது முயற்சி ஒருபோதும் வீண்போகாது எனும் பூரண நம்பிக்கையுடன் காத்திரு. உனக்கு ஆளுமை போதாது எனும் உனது அவநம்பிக்கையை இன்றுவரை நீ மறுத்து, எதிர்த்து புறக்கணித்ததால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேவைக்கு அதிகமானதைக் கொடுக்கவும், செய்யவும் நீ இன்றுவரை உந்தப் பட்டிருக்கலாம். இன்று சற்று நிதானித்து, உனக்கிருக்கும் மனநிறைவை அங்கீகரித்து அதை அனுபவி. நீ உள்ளவாறே இப்போதிருப்பதைப் போன்ற ஆளுமையுடன் இருப்பது உனக்குத் தாராளமாகப் போதுமானது.


**மனம் நிறைந்து எனக்குத் திருப்தி தரும் எனது ஆளுமையையும் நான் யார் என்பதையும் உலகளாவிய ரீதியில் எல்லோருடனும் இன்று நான் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்
220
மேலதிக தகவல்களுக்கு
அழையுங்கள் 905-270-1214
416.907.6897

லலிதா புரூடி


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND
BRAND Niru
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# ஞானபூசை அரங்கு




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம்பெறப்பிரார்த்திக்கிறேன். ஆலயங்களில் பூசைகள் நடைபெறுகின்றன. நாள்தோறும் நடைபெறும் பூசைகள் நித்தியபூசைகள் என்றும், வருடாவருடம் நடைபெறும் கொடியேற்றம் தொடக்கம் தேர்த்திருவிழா வரை நடக்கும் பூசைகள் நைமித்திய பூசைகள் என்றும் கொள்ளப்படுகின்றது. கோயில்களில் திருமூர்த்திகளுக்கு பூசை செய்யும் சிவாச்சாரியர்கள், தமது இருப்பிடத்தில் நீரால் முழுகி திருநீறு தரித்து ஓரிடத்திலிருந்து மனத்தை ஒருநிலைப் படுத்தி ஆலயபூசை செய்வதற்குரிய அமைதியையும் பக்குவத்தையும் உண்டாக்கிக் கொள்வதை ஆத்மார்த்த பூசை என்போம். இவர்கள் ஆலயத்தில் கடவுளின் உருவத்திருமேனிகளுக்குச் செய்யும் பூசை பொதுமக்களின் நன்மைக் காகவும், சமூகநலமேம்பாட்டிற் காகவும், நாட்டுவளத்திற்காகவும் செய்யப்படுவது. இதனால் இப்பூசை பரார்த்த பூசை எனப்பட்டது. கோவிலுக்கு மக்கள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, பரார்த்தபூசை நாளும் நடைபெறும். மக்களும் சமூகமும் சுபீட்சமாய் அன்பு உறவு ஆதரிப்பு ஆரோக்கியம் முதலிய வற்றால் செழுமைப்படுவது பரார்த்த பூசைகளின் பலனாகும். கடவுள் நம்பிக்கை உடையவர்களுக்கும் கடவுள் மறுப்பாளர் களுக்கும் பயன்படும் பரார்த்த பூசைகள் நடைபெறுவதால் தான் தீமைகள் திசை திரும்புகின்றன. நன்மைகள் திசைநோக்கு கின்றன. நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை போன்றதே பரார்த்த பூசைப்பலன்கள்.


நண்பா!

பரார்த்த பூசையால் நடைபெற இருந்த நன்மைகள் தடைப்பட்டதும், கோவில்களில் அப்பூசை நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை ஊரவர்கள் கூடிச் செய்வது நாம் அறிந்த அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை நடக்கின்றன. ஊரில் மழை இல்லையே என்று மக்கள் முறையிட்டதும் வர்ணபகவானுக்கு கடுகட்டுக் கட்டுத் தந்தி அடித்தீர்களா? என்று 1952 ஆம் ஆண்டு வெளியான கலைஞர் மு. கருணாநிதி கதைவசனம் எழுதி வெளியான 'பராசக்தி' திரைப்படத்திலே சிவாஜி கணேசன் முழங்கிய சிம்மக்குரல் நினைவிருக்கிறதா? தேசவழமையில் பரார்த்த பூசையின் தேவை இருந்ததை காலப்போக்கில் முதுமை கண்டதும் முடியாமை முட்டியதும் நான் கடவுளை ஏற்றுக் கொள்வது இருக்கட்டும், கடவுள் என்னை ஏற்றுக்கொள்வாரா? என்று ஏங்கியது எதைக் காட்டுகிறது.

நண்பா! கோவில்களில் நடக்கும் பூசைகளோடு இன்னுமொரு பூசையும் சேர்க்கப்பட்டுள்ளது. அதுவே ஞான பூசையாகும். ஞானபூசை என்றால் என்ன? கடவுள் உண்மையை, கடவுளின் கருணையை, கடவுளின் துணையை கடவுளின் தேவையை மக்களுக்கு விளங்க வைக்கும் சொற்பொழிவு நிகழ்வாகும். சமயத்துறைசார்ந்த அறிஞர்களை அழைத்து கோவில் மண்டபத்திலே ஞான பூசை அரங்கினை உருவாக்கி அவர்களை உரைநிகழ்த்தச் செய்து மக்களுக்கு அறிவையும் தெளிவையும், நம்பிக்கையை யும் வழங்கும் செயல்பாடும் ஒரு புண்ணியகாரியமே.

இந்த ஞான பூசையானது கோவில்களிலே தொடக்க காலத்தில் புராணபடனம், உபந்நியாசம், பிரசங்கம், கதாப்பிரசங்கம் என்று வடமொழிச் சொற்களோடு வடிவம் எடுத்து இன்று சொற்பொழிவு, உரைநிகழ்வு, ஆன்மீக உரை என்று தமிழாகியுள்ளது. இந்த நேரத்தில் நமஸ்காரத்தை வணக்கம் என்றும் அக்கிராசனரை தலைவர் என்றும் காரியதரிசியை செயலாளர் என்றும் தமிழ்படுத்திய தமிழ்வேள்களை நினைந்து போற்றுவதும் நமது கடனே.

இலக்கிய சமூக அரங்குகளில் நடைபெறும் சொற்பொழிவுகளுக்கும் கோயில்களில் நடைபெறும் சமயச் சொற்பொழிவுகளுக்கும் வேறுபாடு உண்டு. முன்னது மூளையால் பேசுவது. பின்னது மனத்தால் பேசுவது. முன்னதில் முரண்பாடுகள் இருக்கும். பின்னதில் உடன்பாடுகளே இருக்கும். இதனாலேயே சமயச் சொற்பொழிவுகள் ஞான பூசை என்று அழைக்கப்பெற்றது. ஞான பூசை செய்யும் அறிஞர்கள் இலக்கிய சமுதாய அரங்குகளிலும் முரண்பாடுகளை நீக்கி உடன்பாடுகளை உண்டாக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதைக் கவனித்திருப்பீர்கள். 'எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே' என்பதுவே ஞான பூசை அரங்கின் கோட்பாடாகும். ஆன்மீகம் என்பது அகத்தின் உயிர். நெஞ்சார, மனமார



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



# Education

## Review Tutorials -139

**CHEMISTRY 11**

**An aqueous solution contains $XO_3^{2-}$ ions form a precipitate with aqueous $Ca^{2+}$ ions when 25mL of a solution aqueous ions with a concentration 0.78mol/L is added. The mass of the precipitate formed is 1.96g. Determine the atomic mass of X and indentify the element.**

**CHEMISTRY IB/12**

**(1)(i) The data below shows the results of three experiments carried out to find out the rates of the following reaction. 2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g)**

| Expt | initial con (mol/L) [NO] | [$Cl_2$] | Initial rate of Reaction (mol/Ls) |
|---|---|---|---|
| 1 | 0.02 | 0.04 | $3.10 \times 10^{-5}$ |
| 2 | 0.02 | 0.08 | $6.10 \times 10^{-5}$ |
| 3 | 0.04 | 0.12 | $3.61 \times 10^{-4}$ |

**Rate = k $[NO]^x [Cl_2]^y$**

**(a) Determine *x* and y , and write the rate law equation for the reaction.**

**(b) Calculate the value of the rate constant, with the appropriate units.**

**(ii) Determine the standard enthalpy change for the following reaction.**

**2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g) ΔH**

**Heat of formation of NO and NOCl are 90.25KJ/mol and 51.71kJ/mol respectively.**

***IB only (iii) and (iv)***

**(iii) The standard entropy values, *S*, at 298 K for NO(g), $Cl_2$ (g) and NOCl(g) are 210.8J/mol K, 223.1J/mol K and 261.7J/mol K respectively.**

**Calculate $\Delta S^{\ominus}$ for the reaction and with reference to the equation above, explain the sign of $\Delta S^{\ominus}$**

**(iv) Describe and explain the effect of increasing temperature on the spontaneity of the reaction.**

**BIOLOGY Gr12: Describe the cyclic and non-cyclic photophosporilation and its importance in carbon fixation**

**PHYSICS (11 & 12) A Child (P) slides down a frictionless slide –X with 32° incline. An another Child (Q) slides down a slide -Y with 32° . The speed of child -Q at the bottom of the slide is exactly half of the speed of child- P. Determine the coefficient of kinetic friction between the child -Q and slide- Y. (Assume the lengths of the slides X and Y are same)**

**Calculus 12** **Differentiate** $\cos^{-1}\left(\frac{3+5\cos x}{5+3\cos x}\right)$

## Answer Key : 138

**CHEMISTRY**


$\Delta H = -10$kJ/mol ; $E_a = 40$kJ/mol

**CHEMISTRY IB**

1. (i) 2-chloro, 2-methyl butane

(ii) $E_2$ reaction predominate when a tertiary halide is heated with a strong base.

**2.**




**PHYSICS 12**

Question : A thin film coated on one side of …….

**Ans:** L = λ/4 $n_2$ = 99.6 nm

**ADV. FUNCTIONS**

**$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a\left(\frac{x^2}{y^3}\right)$**

$log_a\, x - (log_a\, y^3) = log_a\, x - 3(log_a\, y) = 11$

**CALCULUS 12** $f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x = 1$

Ans : tangent line Y + ln 2 = 1(*x* -1)

**BIOLOGY 11**

**1.** Viruses do not reproduce, do not have structures such as cellular membrane or cell organelles.

viruses contain genes made of either DNA or RNA but not made of cells- no cell membrane, nucleus, or cytoplasm. no metabolic apparatus and do not digest, respire, and so on. can reproduce but only inside a host.

2. The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

**BIOLOGY 12**

In mammals, erythrocytes lose nucleus and all other cellular organelles such as their mitochondria, Golgi apparatus and endoplasmic reticulum during its maturation. As a result of not containing mitochondria, they produce the energy carrier ATP by the glycolysis.

*Answer key 139 - next issue*

**Contact: 647 341 3975**
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய ***50*** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

*GTA Square Mall (FINCH & MIDDLEFIELD*

தொடர்புகளுக்கு: ***416.917.6883***

# ஞானபூசை...

**35ஆம் பக்கத்தொடர்ச்சி**

நன்மைகளை நினைப்பதும் சொல்வதும் செய்வதுமே ஆன்மீக வாழ்வாகும். புன்நெறியதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்நெறி ஒழுகச் செய்யும் நவையுறு காட்சியும், கருத்தும், மாட்சிமையும் ஞான பூசை அரங்குகளினால் வழங்கப்படுகின்றது.

நண்பரே!

ஆலயங்களில் ஞானபூசை அரங்கினை மக்களின் நல்வாழ்வுக்காக அமைத்து வளர்த்தவர்கள் பலராவர். சமயச் சொற்பொழிவை ஒரு கலைவடிவமாக்கி கருத்துக்களைச் சுவைபடச் சொல்லி மக்களை மகிழச் செய்தும் மனங்கொள்ள வைத்தும், வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தச் செய்தும் வெற்றி கண்டவராக ஈழத்து நல்லூர் ஆறுமுக நாவலரைச் சொல்வார்கள். ஆறுமுக நாவலர் இல்லையேல் சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே? புராண ஆகமங்கள் எங்கே? பிரசங்கம் எங்கே? என்று பாடிய பாட்டைக் கேட்டிருப்பீர்கள். ஆறுமுகநாவலர் வளர்த்தெடுத்த ஞான பூசை தென்தமிழ் நாட்டு அறிஞர்களாலும் பேணிப்பாதுகாக்கப் பட்டதும் நாம் அறிந்ததே. திருவாவடுதுறை ஆதீனத்தால் ‘நாவலர்’ என்ற பட்டத்தினைப் பெற்ற யாழ்ப்பாணத்து ஆறுமுகம் ஈழத்தமிழரின் சமய சமூகக் கட்டமைப்பை தனது பேச்சாலும், எழுத்தாலும் உண்டாக்கி அவர்களின் சுயநிர்ணயத்திற்கும், சுயாதிபத்தியத்திற்கும் வழிகோலியமை வரலாறே.

நிற்க!

ஞானபூசை அரங்கு ஆலயங்களில் நடைபெற வேண்டும். மக்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் அறிவையும் உருவாக்கும் இப்பூசைக்கு என்று நேரத்தை ஒதுக்குவோம் என்ற விருப்புடைய ஆலய அறங்காவலர்களைப் பாராட்ட வேண்டும். ஆலயப் பூசைகளைப் பார்த்து இறைவனின் அருளைப் பெறுவது போன்றே ஞானபூசை ஓசை ஒலிகளாலும் இறைவனின் திருவருள் கிடைக்கும் என்ற உண்மை விளக்கம் மக்கள் மத்தியில் உண்டாக வேண்டும். இதற்குரிய சூழ்நிலையை உருவாக்கு வதற்கு சமயநம்பிக்கையும் இறைபக்தியும் உடையவர்கள் முயற்சி செய்ய வேண்டும், ஒரு காரியத்தைச் செயல்படுத்தும் போது அதன் வளர்ச்சி மிகுந்த பயனைத் தருவதைக் கண்டு கொள்ளலாம்.

குடும்பச்சுமை, நேரமின்மை, அவசரம், வேலைப்பழு, மனஅழுத்தம், இரத்தக் கொதிப்பு முதலிய இன்றைய பிரச்சினைகளுக்கு மூச்சுப் பயிற்சி, தேகப்பயிற்சி, யோகா முதலியன நிவாரணம் தருவது போன்று ஆலயங்களில் நடைபெறும் ஞான பூசையும் நிவாரணம் தருகின்றது என்ற உண்மை பலருக்கும் விளங்க வைக்கப்பட வேண்டும். வாழ்க்கையில் பற்று, பிடிப்பு, வாழ்வதில் நம்பிக்கை அர்த்தம். தொண்டு செய்வதால் கிடைக்கும் பலாபலன்கள், ‘ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்’ என்ற ஞான விளிப்பு எல்லாவற்றிற்கும் ஆலயங்களில் நடத்தப்படும் ஞானபூசை காரணமாய் இருந்ததை நமது கடந்த கால வாழ்வனுபமாய் பெற்றிருக்கிறோம்.

இதனைப் புலம்பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லி வாழவைப்போம்.

வேறு என்ன?
பிறபின்பு

# உத்தவ கீதை

பகவான் கிருஷ்ணனின் குழந்தைப் பருவம் முதலே, அவருக்குப் பணிவிடைகள் செய்து, தேரோட்டி, பல்வேறு சேவைகள் புரிந்தவர், உத்தவர். இவர் தனது வாழ்நாளில், தனக்கென நன்மைகளோ வரங்களோ கண்ணனிடம் கேட்டதில்லை. துவாபர யுகத்தில், தமது அவதாரப் பணியை முடித்து விட்ட நிலையில், உத்தவரிடம் ஸ்ரீகிருஷ்ணர், உத்தவரே, இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும், நன்மைகளும் பெற்றிருக் கின்றனர். ஆனால், நீங்கள் எதுவுமே கேட்ட தில்லை. ஏதாவது கேளுங்கள், தருகிறேன். உங்களுக்கும் ஏதாவது நன்மைகள் செய்துவிட்டே, எனது அவதாரப் பணியை முடிக்க நினைக்கிறேன் என்றார். தனக்கென எதையும் கேட்காவிட்டாலும், சிறு வயது முதலே கண்ணனின் செயல்களைக் கவனித்து வந்த உத்தவருக்கு... சொல் ஒன்றும், செயல் ஒன்றுமாக இருந்த கண்ணனின் லீலைகள், புரியாத புதிராக இருந்தன. அவற்றுக்கான காரண, காரியங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினார். பெருமானே! நீ வாழச் சொன்ன வழி வேறு. நீ வாழ்ந்து காட்டிய வழி வேறு! நீ நடத்திய மகாபாரத நாடகத்தில்... நீ ஏற்ற பாத்திரத்தில், நீ புரிந்த செயல்களில், எனக்குப் புரியாத விஷயங்கள் பல உண்டு. அவற்றுக்கெல்லாம் காரணங்களை அறிய ஆவலாக இருக்கிறேன் நிறைவேற்றுவாயா? என்றார் உத்தவர்.

உத்தவரே! அன்று குருசேஷத்திரப் போரில் அர்ஜுனனுக்காக நான் சொன்னது, பகவத் கீதை. இன்று உங்களுக்குத் தரும் பதில்கள், **உத்தவ கீதை.** அதற்காகவே உங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தேன். தயங்காமல் கேளுங்கள் என்றான் பரந்தாமன். உத்தவர் கேட்க ஆரம்பித்தார். கண்ணா! முதலில் எனக்கு ஒரு விளக்கம் வேண்டும். உண்மையான நண்பன் யார்? நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன் என்றான் கண்ணன். கிருஷ்ணா! நீ பாண்டவர்களின் உற்ற நண்பன். உன்னை அவர்கள் ஆபத்பாந்தவனாக, பரிபூரணமாக நம்பினார்கள். நடப்பதை மட்டுமல்ல, நடக்கப் போவதையும் நன்கறிந்த ஞானியான நீ... உற்ற நண்பன் யார் என்பதற்கு நீ அளித்த விளக்கத்தின்படி... முன்னதாகவே சென்று, தருமா! வேண்டாம் இந்தச் சூதாட்டம் என்று தடுத்திருக்கலாம் ஏன் அப்படிச் செய்யவில்லை? போகட்டும். விளையாட ஆரம்பித்ததும், தருமன் பக்கம் அதிர்ஷ்டம் இருக்கும்படி செய்து, வஞ்சகர்களுக்கு நீதி புகட்டியிருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. தருமன் செல்வத்தை இழந்தான், நாட்டை இழந்தான் தன்னையும்



இழந்தான். சூதாடியதற்குத் தண்டனையாக, அதோடு அவனை விட்டிருக்கலாம். தம்பிகளை அவன் பணயம் வைத்த போதாவது, நீ சபைக்குள் நுழைந்து தடுத்திருக்கலாம். அதையும் நீ செய்ய வில்லை. திரௌபதி அதிர்ஷ்டம் மிக்கவள். அவளைப் பணயம் வைத்து ஆடு. இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன் என்று சவால் விட்டான் துரியோதனன். அப்போதாவது, உனது தெய்வீக சக்தியால், அந்தப் பொய்யான பகடைக் காய்கள் தருமனுக்குச் சாதகமாக விழும்படி செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை.

மாறாக, திரௌபதியின் துகிலை உரித்து, அவளின் மானம் பறிபோகும் நிலை ஏற்பட்ட போதுதான் சென்று, துகில் தந்தேன். திரௌபதி மானம் காத்தேன் என்று மார்தட்டிக் கொண்டாய். மாற்றான் ஒருவன், குலமகள் சிகையைப் பிடித்து இழுத்து வந்து, சூதர் சபையில் பலர் முன்னிலையில், அவள் ஆடையில் கை வைத்த பிறகு, எஞ்சிய மானம் என்ன இருக்கிறது? எதனைக் காத்ததாக நீ பெருமைப்படுகிறாய்? ஆபத்தில் உதவுபவன்தானே ஆபத்பாந்தவன்? இந்த நிலையில் உதவாத நீயா ஆபத்பாந்தவன்? நீ செய்தது தருமமா? என்று கண்ணீர் மல்கக் கேட்டார் உத்தவர். இது உத்தவரின் உள்ளக் குமுறல் மட்டுமன்று. மகாபாரதம் படித்துவிட்டு நாம் அனைவருமே கேட்கும் கேள்விகளே இவை. நமக்காக இவற்றை அன்றே கண்ணனிடம் கேட்டிருக்கிறார் உத்தவர். பகவான் சிரித்தார். உத்தவரே... விவேகம் உள்ளவனே ஜெயிக்க வேண்டும் என்பது தர்ம நியதி. துரியோதனனுக்கு இருந்த விவேகம் தருமனுக்கு இல்லை. அதனால்தான் தருமன் தோற்றான் என்றான் கண்ணன். உத்தவர் ஏதும் புரியாது திகைத்து நிற்க, கண்ணன் தொடர்ந்தான். துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது. ஆனால், பணயம் வைக்க அவனிடம் பணமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தது. பணயம் நான் வைக்கிறேன். என் மாமா சகுனி, பகடையை உருட்டிச் சூதாடுவார் என்றார் துரியோதனன். அது விவேகம். தருமனும் அதுபோலவே விவேகத்துடன் செயல்பட்டு, நானும் பணயம் வைக்கிறேன். ஆனால், என் சார்பாக என் மைத்துனன் ஸ்ரீகிருஷ்ணன் பகடைக்காயை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே?

சகுனியும் நானும் சூதாடியிருந்தால், யார் ஜெயித்திருப்பார்கள்? நான் கேட்கும் எண்ணிக்கைகளைச் சகுனியால் பகடைக் காய்களில் போடத்தான் முடியுமா? அல்லது, அவன் கேட்கும் எண்ணிக்கைகளை என்னால்தான் போட முடியாதா? போகட்டும். தருமன் என்னை ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ள மறந்துவிட்டான் என்பதையாவது மன்னித்து விடலாம். ஆனால், அவன் விவேகமில்லாமல் மற்றொரு மாபெரும் தவற்றையும் செய்தான். ஐயோ.... விதிவசத்தால் சூதாட ஒப்புக்கொண்டேனே! ஆனால், இந்த விஷயம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மட்டும் தெரியவே கூடாது. கடவுளே! அவன் மட்டும் சூதாட்ட மண்டபத்துக்கு வராமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். என்னை மண்டபத்துக்குள் வர முடியாதவாறு, அவனே கட்டிப் போட்டு விட்டான். நான் அங்கு வரக்கூடாதென என்னிடமே வேண்டிக்கொண்டான். யாராவது தனது பிரார்த்தனையால் என்னைக் கூப்பிட மாட்டார்களா என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக் கொண்டு நின்றேன். பீமனையும், அர்ஜுனனையும், நகுல சகாதேவர்களையும் வைத்து இழந்தபோது, அவர்களும் துரியோதனனைத் திட்டிக் கொண்டும், தங்கள் கதியை எண்ணி நொந்து கொண்டும் இருந்தார்களே தவிர, என்னைக் கூப்பிட மறந்துவிட்டார்களே! அண்ணன் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று, திரவுபதியின் சிகையைப் பிடித்த போது, அவளாவது என்னைக் கூப்பிட்டாளா? இல்லை. அவளும் தனது பலத்தையே நம்பி, சபையில் வந்து, வாதங்கள் செய்து கொண்டிருந்தாளே ஒழிய, என்னைக் கூப்பிட வில்லை! நல்லவேளை... துச்சாதனன் துகிலுரித்த போதும் தனது பலத்தால் போராடாமல், ஹரி.... ஹரி... அபயம் கிருஷ்ணா... அபயம் எனக் குரல் கொடுத்தாள் பாஞ்சாலி. அவளுடைய மானத்தைக் காப்பாற்ற அப்போதுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அழைத்ததும் சென்றேன். அவள் மானத்தைக் காக்க வழி செய்தேன். இந்தச் சம்பவத்தில் என் மீது என்ன தவறு? என்று பதிலளித்தான் கண்ணன்.

அருமையான விளக்கம் கண்ணா! அசந்துவிட்டேன். ஆனால் ஏமாறவில்லை. உன்னை இன்னொரு கேள்வி கேட்கிறேன் என்றார் உத்தவர். கேள் என்றான் கண்ணன். அப்படியானால், **கூப்பிட்டால்தான் நீ வருவாயா? நீயாக, நீதியை நிலை நாட்ட, ஆபத்துகளில் உன் அடியவர்களுக்கு உதவ வரமாட்டாயா?** புன்னகைத்தான் கண்ணன். உத்தவா, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதை நடத்துவதும் இல்லை. அதில் குறுக்கிடுவதும் இல்லை. நான் வெறும் சாட்சி பூதம். நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டு நிற்பவனே! அதுதான் தெய்வ தர்மம் என்றான். நன்றாயிருக்கிறது கிருஷ்ணா! அப்படியானால், நீ அருகில் நின்று, நாங்கள் செய்யும் தீமைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களைக் குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித்தானே? என்றார் உத்தவர். உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பாருங்கள்.

**நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீங்கள் உணரும் போது, உங்களால் தவறுகளையோ தீவினைகளையோ நிச்சயமாகச் செய்ய முடியாது. அதை நீங்கள் மறந்துவிடும்போதுதான், எனக்குத் தெரியாமல் செயல்களைச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள்.**




CAR WANTED

Toyota Camry - Sienna

1997 - 2002. Any KM / Condition

Contact: 647.448.2569

நகைச்சுவைத் தொடர் 268

## ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீசன்





உலகர் யன்னலுடாக ரூபனுடன்
கஸ்டப்பட்ட வாங்கிக்கொண்டு வந்து குனிய முடியாமல் குனிந்து நிமிர முடியாமல் நிமிந்து நட்ட பூக்கன்றுகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

'பருவத்தே பயிர் செய்' என்பார்கள். முருகேசர் அடிக்கடி சொல்லுவார்.




மே 21 'விக்ரோறியா டே' கழியத்தான் பூக்கன்றுகள் நடவேணும். அதற்குமுன் பூக்கன்றுகள் நட்டா திடீரென குளிர் வந்தா பிறகு பூக்கன்றுகள் வளருவது கஸ்டம். திடீரென குளிர் வந்தால் பூக்கன்றுகள் மட்டுமல்ல விவசாயப் பண்ணைகளுக்கும் பலத்த நட்டம்.



காரோடும் வீதிகளில் தேரோடி வருகிறது.

எத்தனையோ கலைஞர்களை கனடாவில் நாம் கண்டிருக்கிறோம், பழகியிருக்கிறோம். ஆனால் நாம் வணங்கும் தெய்வங்களின் தேர்த்திருவிழா பார்க்கிறோம். 'அரோகரா' சொல்லி இழுக்கும் தேர்களையும் செய்த சிற்பி சிற்பக்கலைஞர் சிற்பக்கலையரசன் சரவணமுத்து ஜெயராசாவின் 50 வது தேர் கனடா சண்முகநாத கோவிலுக்கு அமைகிறது. வியாழக்கிழமை வெள்ளோட்டம். உலகர் அமளிதுமளிப்பட்டு எல்லோருக்கும் ரெலிபோனில் சொல்லிக்கொண்டிருந்தார்.



'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'
கனடா வந்திருந்த சத்குருவின் சொற்பொழிவு.
அதுவும் தமிழில் உரையாடல்.
அமைதி, உள்ளிழுக்கும் மூச்சுக்கும் வெளிவிடும் மூச்சுக்கும் அர்த்தம்......



மண்டபத்தில் பார்த்தவர்கள் மட்டுமல்ல தமிழ்வண் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு பலருக்கு வீட்டிலிருந்து கொண்டே பார்க்கும் சந்தர்ப்பம்.

வேலை வேலை என ஓடுபவர்களும் அமைதியின்றி
அங்கலாய்ப்பவர்களும் தம்மிடையே விடை தேடும் விளக்கம்.


தாம் வாழ்வது மட்டுமல்ல சமூகத்திற்கு உதவும் முறைகள் மரம் நாட்டல், விளையாட்டு பல நினைக்க முடியாத பொதுச்சேவைகள்...




நாம் என்ன செய்கிறோம்???
உலகர் தனக்குள் நினைத்து பெருமூச்சு விட்டார்.

முள்ளிவாய்க்கால் இழப்புக்கள் மே 18.
4 வருடங்கள் ஓடிவிட்டது.
உலகநாடுகளும் அறிக்கை கேட்டு ஓடுகின்றனர்.
பதில் யாரிடம்?

### மே 15 - 31



18. போர்க் குற்றநாள் (2009)

20. விக்ரோறியா டே.. விடுமுறை நாள்


23. றிச்மன் ஹில் பிள்ளையார் தேர்

24. வைகாசி விசாகம்




25. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்தநாள் 1878–1953
(ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே)

25. ஆத்மஜோதி நா. முத்தையா நினைவுதினம் 1918–1995



26. 1958 கொழும்பில் இனக்கலவரம். வீடுகள் தீக்கிரை.
சொத்துக்கள் சூறையாடப்பட்டதுடன்...பலர் கொல்லப்பட்டனர்.



31. 1981 மே யாழ்ப்பாணம் பொது நூலகம் பொலீசாரால் அரச உதவியுடன் எரியூட்டப்பட்ட நாள்.





31. புகையிலை எதிர்ப்பு நாள்.

# தொலைந்து போன அமைதி

## *Missing Peace*

சில சந்தர்ப்பங்களில் வாழ்வானது தீர்வேதும் இல்லாத புரியாப்புதிராகத் தோன்றுகின்றது. மிகவும் அத்தியாவசியமான-தொன்று அங்கு இல்லாது இருப்பது இதற்கான காரணமாக இருக்கலாம் என மகராஜி கூறுகின்றார். மக்கள் தம் வாழ்வில் காணாமற்போன அந்த விடயத்தை கண்டு பிடித்து தம் வாழ்வின் சாத்தியத்தை நிறைவு செய்வதற்கு உதவுவதற்காக மகராஜி தன் வாழ்வை அர்ப்பணித்து வருகின்றார். அண்மையில் பெருந்திரளான பார்வையாளர் களின் முன் மகராஜி நகைச்சுவை ஒன்றுடன் தனது பேச்சை ஆரம்பித்தார்.

தெருவோரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு மனிதன் வேறு இருவரைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் கண்டதை அவனால் நம்பமுடியவில்லை. ஏனெனில் ஒருவன் கிடங்கொன்றைக் கிண்டிக் கொண்டிருக்க மற்றவன் அவன் பின்னால் இருந்து அக்கிடங்கை நிரப்பிக் கொண்டிருந்தான். அவர்கள் வீதியில் தொடர்ந்து அதையே செய்து கொண்டிருந்தார்கள். ஒருவன் குழியைத் தோண்டுவதும் மற்றவன் அதை நிரப்புவதுமாக இருந்தார்கள். சிறிது நேரத்தின் பின் அதைப் பார்த்துக் கொண்டிருந்த மனிதனால் அதை மேலும் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் அவர்களிடம் சென்று நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டான். இது பார்ப்பதற்கு உண்மையிலேயே விசித்திரமானதொன்றாகத்தான் இருக்கும் என்று அந்தக் கிடங்கை வெட்டியவன் கூறினான். ஆனால் உண்மை என்னவென்றால் நாம் மூவர் சேர்ந்து ஒரு குழுவாக வேலை செய்கின்றோம். நான் கிடங்கை வெட்டுவேன். ஒருவர் மரத்தை நாட்டுவார். மற்றவர் குழியை மண்ணால் மூடுவார். இன்று மரம் நடுபவருக்கு சுகமின்மையினால் அவர் வரவில்லை. ஆனபடியால் நாம் இருவரும் அவர் இல்லாமலேயே எமது வேலையைத் தொடந்து செய்துகொண்டு இருக்கின்றோம் என்று கூறினான். எதற்காக நான் இந்த நகைச்சுவையைச் சொன்னேன் என்றால் அங்கு மிக முக்கியமான அடிப்படை விடயம் ஒன்று உள்ளது. அது அங்கே இல்லாவிட்டால் எம் வாழ்வில் நாம் எதைச் செய்தாலும் நான் சொன்ன இந்த நகைச்சுவையைப் போன்றே இருக்கும். அந்த மிக முக்கியமான அடிப்படை விடயம் அமைதிதான் என மகராஜி கூறுகின்றார்.

நாம் எமது வாழ்வில் எதைச் செய்கின்றோம் என்பதல்ல விடயம். விடயம் என்ன? எமது வாழ்வில் அமைதி இருக்கின்றதா என்பதுதான் விடயம். எம்மிடம் அமைதிய-ில்லாவிட்டால் அந்த முக்கியமான விடயம் அங்கு இல்லை. வாழ்வு தொலைபேசிகளைப் பற்றியதோ கையடக்கத் தொலைபேசிகளைப் பற்றியதோ அல்ல. சந்திரனுக்குப் போவதைப் பற்றியதோ விண்வெளி ஆராய்ச்சி பற்றியதோ அல்ல. பொருளாராதத்தைப் பற்றியதோ அல்லது அரசியலைப் பற்றியதோ அல்ல. மக்கள் ஈடுபாடுகாட்டும் எந்த விடயங்களைப் பற்றியதும் அல்ல. உண்மையிலேயே கேள்வி என்ன வென்றால், மனிதன் என்ற ரீதியில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழப்போகும் உங்கள் வாழ்வில் அமைதி உள்ளதா? சிலருக்கு தங்கள் வாழ்வில் அமைதியைக் காண்பது சலிப்பூட்டும் விடயமாக உள்ளது என மகராஜி கூறுகின்றார். அவர்கள் தம் வாழ்வில் நல்ல செய்தியை, தமக்குச் சாதகமான செய்தியைக் கேட்க விரும்புகின்றார்கள். அது பதவி உயர்வாகவோ அல்லது நல்லதொரு பதவியாகவோ இருக்கலாம். அமைதி என்பது ஒரு நல்ல செய்தி. ஏனெனில் மிக அற்புதமானதொரு சலுகை உங்கள் வசம் உள்ளது என மக்களுக்கு மகராஜி கூறுகின்றார். நான் உங்களுக்கு விசேட சலுகை உண்டு என்று கூறுவது ஏன் எனில் நீங்கள் உயிருடன் இருக்கின்றீர்கள். எந்த விதமான சூழ்நிலையிலிருந்தாலும் உங்களுக்கு அது வெற்றியே அல்லாமல் தோல்வியல்ல. நீங்கள் உயிருடன் இருக்கும்வரை உங்களுக்கு அமைதிக்கான தேவை இருப்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். அது இல்லாமல் இந்த உலகிற்கு நீங்கள் வெறும் கையுடன் வந்து வெறுக்கையுடனேயே இந்த உலகை விட்டு போகப் போகின்றீர்கள்.

அமைதியைப் பற்றி மிகக் குறைந்த அளவிலேயே புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அமைதிபற்றி மக்களிடம் நான் கூறும்போது நான் உண்மையிலேயே எதைப்பற்றிப் பேசுகின்றேன் என்று அவர்களுக்குத் தெரியாது. சிலர் ஓ! அவர் உலக அமைதி-யைப் பற்றி குறிப்பிடுகின்றார் என்பார்கள். அதன்பின் அது ஒருபோதும் நடைபெறப் போவதில்லை என்று கூறுவார்கள். அவர்கள் எதைக் கூறுகின்றார்கள் என்றால், இந்த உலகென்னும் அடையாளம் காணமுடியாத ஒன்றிற்கே அமைதி தேவை என்றும் தங்களுக்கு அல்ல என்றும் கூறுகின்றார்கள். அதற்கும் மேலால் விடயங்களை மோசமாக்குவதற்காக அதிகளவு பேராசை இருப்பதனாலும், நிறைய பிரச்சினைகள் இருக்கின்றதாலும் இது ஒருபோதும் நடக்க முடியாது என்றும் கூறுகின்றார்கள். அமைதி தேவைப்படுவது உலகத்திற்கு அல்ல என நான் கூறுகின்றேன். தனிப்பட்ட முறையில் மனிதர்களாகிய எமக்குத்தான் அமைதி தேவைப்படுகின்றது. அது எங்கே உள்ளது?. நீங்கள் தேடும் அந்த அமைதி, நீங்கள் தேடும் அந்த ஆனந்தம், நீங்கள் தேடும் அந்த எளிமை, நீங்கள் தேடும் அந்த புரிந்துணர்வு அதை என்ன சொல்லி அழைத்தாலும் அது ஏற்கனவே உங்கள் உள்ளேயே இருக்கின்றது. உங்கள் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் உள்ளது. அப்பதில் உங்கள் உள்ளேயே உள்ளது. அதைக் கண்டுகொள்ளுங்கள். நான் என்ன செய்கின்றேன்?. உங்கள் உள்ளே உள்ள அமைதியின் அனுபவத்தை என்னால் சாத்தியமாக்க முடியும். அது சாத்தியமே. நான் இதை நீண்ட காலமாகச் செய்து வருகின்றேன். இவை சொற்கள் மட்டுமல்ல, என் கூற்றை நான் சாத்தியமாக்குகின்றேன். உங்களின் இந்த வாழ்வில் அமைதி சாத்தியமே. ஒவ்வொரு நாளும் உங்கள் உள்ளே அமைதி உள்ளது. அந்த அமைதியை உணரும்போது அது உங்கள் உள்ளத்தை நன்றியுணர்வால் நிரப்பும். அதுதான் உண்மை நிலை.

மகராஜி பற்றி மேலும் அறிந்து கொள்ள
WWW.WOPG.ORG / WW.TPRF.ORG
1.877.707.3221 / 416.431.5000

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto, ON
Tel.: 416.321.6969

AUTO + HOME = BIG SAVINGS
Auto Insurance, Business Insurance, Home Insurance, Renter Insurance, Life Insurance
Office Hours:
Mon - Fri 9:30am to 9:30pm
Saturday 11:00am to 5:30pm
After hours by Appointment
http://www.insureontario.ca
LIKE A GOOD NEIGHBOUR STATE FARM IS THERE
Providing Insurance and Financial Services
State Farm • Head Office, Aurora, Ontario • statefarm.ca™
Li.chen.m8zn@statefarm.com
1200 Markham Road, Suite#123, Scarborough, ON M1H 3G3
(Corner of Markham & Ellesmere)
Li Chen, Agent
Call: 416.431.680


# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 20 ஆவது ஆண்டு விழா நிகழ்வு

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 20 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் கடந்த ஏப்பிரல் 28, 2013 அன்று ஸ்காபரோவில்



அமைந்திருக்கும் பெரியசிவன் ஆலய விழா மண்டபத்தில் நடைபெற்றது.

இம்மன்றத்தின் தலைவர் திரு. சின்னையா சிவனேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் செல்வா



கனகநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர் சந்திரகாந்தன் அடிகளார் வெளியீட்டுரை நிகழ்த்தி மலரையும் வெளியிட்டார். கௌரவ விருந்தினராக கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் கலந்துகொண்டார்.



வரவேற்பு நடனம், கவியரங்கம், பட்டிமன்றம், வாழ்த்துரைகள்,



பாராட்டுரைகள் இடம்பெற்றன.

# மூவாயிரம் கோடி டொலரில் ஒரு புதிய நகரம்!

LAVASA என்பது $30 பில்லியன் டொலரில் 300,000 மக்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்படும் ஒரு நகரம். இந்நகரம் இந்தியாவில் பூனே (Pune) நகரத்திற்கு தென்மேற்கில் Sahyadri மலையடிவாரத்தில் இந்தியாவின் மிகப்பெரிய தொழில் அதிபர்களில் ஒருவரான அஜித் குலாப்சாண்ட் அவர்களது (Ajith Gulabchand's) நிறுவனத்தால் அமைக்கப் படுகின்றது. இத்தனியாரிற்கு சொந்தமான நகரம் இத்தாலியில் உள்ள "Italian Rivera" போன்று அமைக்கப்படுகின்றது.

இந்நகரத்திற்கான பெருந்தெரு 'மும்பாய் - பூனே' கடுகதி பெருந்தெருவில் இருந்து ஆறு பாதைகளை உடைய பெருந்தெருவாக Lavasa ஐ நோக்கி போடப்படுகிறது. இந்நகரம் பூனே நகரத்தில் பெருகிவரும் சனத்தொகையை சமாளிக்கவும் அங்கு வேலை செய்யும் அதிஉயர் சம்பளம் பெறும் IT நிறுவன ஊழியர்களை கவரவுமாக அமைக்கப்படுகின்றது. இந்நகரத்தில் அமைக்கப்படும் தொடர்





மாடிக்கட்டிடத்தில் ஒரு அலகினை (Condo.) வாங்க ஆகக்குறைந்தது 20 இலட்சம் ரூபா ($37 ஆயிரம் டொலர்) தேவை. Kul Nation எனப்படும் இத்தொடர் மாடிக்கட்டிடங்கள் ஒரே மாதிரியான சிந்தனை உள்ளவர்கள் வாழுவதற்காக கட்டப்படுவதாக இந்நிறுவனம் கூறுகின்றது. அந்நிறுவனம் மேலும் கூறுகையில் Kul Nation என்பது ஒரு வாழும் இடம் மட்டும் அல்ல இது ஒரு வாழ்க்கை முறை என்கிறது. பூனேயில் இருந்து ஒரு மணித்தியால கார் ஓட்டும் தூரத்தில் உள்ள இந்நகரம் இந்தியாவின் முதலாவது தனியாரால் கட்டப்படும் ஒரு மலையடிவார நகரமாகும். இதற்கு மகாராஷ்டிர மாநில அரசு ஒரு சதமேனும் உதவி வழங்கவில்லை. ஆனால் அது மாநில அவையில் அமலாக்கிய "Hill Station" எனும் சட்டமூலமே இந்த நகரத்தை நிர்மாணிக்க வழிகோலியது. Warasgaon ஏரியை மையமாக வைத்து அதைச்சுற்றி உள்ள மலை அடிவாரத்தில் 14,000 hectares நிலப்பரப்பில் இந்நகரம் அமைக்கிப்படுகிறது.

















*Free Real Estate Class* - Call: *416.321.6969*




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com www.tamilvanakkam.com**

